

கல்கி
KALKI
27.9.1959
30 காசு



ரோஜா
மலர்
போன்ற
வதனம்
பட்டுப் போன்ற மென்மையான
வினோலியா ரோஸ் டாய்லெட் பவுடர் உங்கள் சருமத்தைப்
பூவிதழ் போன்ற மழமழப்புடன் வைத்திருக்கும்.
இணைபிரியாத அதன் ரோஜா மணம் கமகமவென்று
மணிக்கணக்காக உங்கள் மீது கமழ்ந்திருக்கும்.
வினோலியா ரோஸ் டாய்லெட் பவுடர்
வசீகரிக்கும் ரோஜா மணமுள்ள, வெண்மையான பவுடர்
லண்டனிலுள்ள வினோலியா கம்பெனி சார்பாக, இந்துஸ்தான்
லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.
VRTP.3-50 TM

கல்கி

பொருளடக்கம்

செப்டம்பர் 27, 1959

"கல்கி" யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


பின்னியின் துணிகள் வாங்க எல்லோரும்
எமது புதிய ஷோரூமை
நோக்கி
விரைகின்றனர்
வெங்கடேஷ் வஸ்திராலயா
ஷோரூம் நெ. 3
ஸெண்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில்
இப்புதிய வசதி நிறைந்த துணிக் கடைக்கு
விஜயம் செய்ய இதுவே தருணம்
ஷோ ரூம் நெ. 1 & 2: பாங்க் ஆப் மைசூர் பில்டிங்
(ஹைகோர்ட்டுக்கு எதிரில்)



மலர் 19 | இதழ் 9

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

விகாரி ௵ | புரட்டாசிமீ 11

நாட்டுக்கு விமோசனம்!

தண்ணிய நீர் நிரம்பிய கடலுக்குள்ளே வடவாக்னி என்ற பெரிய அக்னிக் குழம்பு ஒன்று இருக்கிறதாம். அதுபோல் உள்ளத்தில் மாபெரும் ஆனந்தம் பொங்கி எழும்போது, ஓர் இனம் தெரியாத துக்கம், சோகம் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழக் காண்கிறோம். ஏறத்தாழ இதே நிலைமையில்தான் பாரத மக்கள் இன்று இருந்து வருகிறார்கள்.

சுதந்திரக் கட்சி, நாளுக்கு நாள் வளர்ந்து வருவதைக் கண்டு, அந்த க்கட்சிக்கு ராஜாஜி சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் பேராதரவு அளித்து வருவதைக் கண்டு சுதந்திரக் கட்சி அனுதாபிகள் உள்ளத்தில் பெரும் குதூகலம் பொங்கி எழுகிறது.

"காங்கிரஸ் நாகபுரி தீர்மானத்தைக் கைவிட்டால் சுதந்திரக் கட்சி கலைக்கப்பட்டு விடுமா? சர்க்கார் வியாபாரத் துறையில் புகுந்ததை, வாபஸ் பெற்றுக்கொண்டு விட்டால் சுதந்திரக் கட்சி கலைக்கப்பட்டு விடுமா?" என்று சிலர் கேட்கிறார்கள்! சுதந்திரக் கட்சி கலைக்கப்படாமல் இருக்க வேண்டுமே என்ற ஏக்கத்தில் கேட்கிறார்கள்; காங்கிரஸ் இக் காரியங்களைக் கைவிட்டாலும் காங்கிரஸ் கட்சியுடன் தொடர்பு கொள்ள விரும்பாதவர்கள் இப்படிக் கேட்கிறார்கள்!

ராஜாஜியும் கட்சிச் சண்டைக்காக இக் கட்சியை ஆரம்பிக்க வில்லை. மக்கள் நலனை உத்தேசித்து இந்தக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. ஆதலால் சுதந்திரக்கட்சி சொல்லும் காரியங்களை இன்றைய சர்க்கார் மேற்கொண்டு விட்டால், தாம் கட்சியை விட்டுவிட்டுத் தூங்கப் போவதாகவும் சொல்கிறார். ஆனால் அதே சமயம், காங்கிரஸார் நாகபுரி தீர்மானத்தைக் கைவிட மாட்டார்கள்; அவர்கள் எதிர்த் திசையை நோக்கி வெகுதூரம் சென்று விட்டார்கள். இனி திரும்புவது என்பது அவமானம் என்றும் கஷ்டம் என்றும் நினைப்பார்கள் என்று ராஜாஜி சொல்லி வருகிறார்.

ராஜாஜி சொல்வது முற்றிலும் உண்மை என்பதைச் சமீபத்திய ஒரு நிகழ்ச்சி வெகு தெளிவாக்கி விட்டது.

மத்திய உணவு மந்திரி திரு ஏ. பி. ஜெயின், மக்கள் சபையில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார். உணவு தான்ய வர்த்தகத்தில் சர்க்கார் புகுவதாகத் தீர்மானித்து அப் பணியைத் தம் தலைமேல் இழுத்துப் போட்டுக் கொண்டது. ஆனால் அதற்கு வேண்டிய கட்டுப்பாடுகளை ராஜ்ய சர்க்கார்கள் செய்யவில்லை. இதனால் இந்தத் திட்டம் நிறைவேறாது என்று சொல்லித் தம் பதவியை திரு ஜெயின் ராஜினாமா செய்துவிட்டார்.

அவருக்குப் பின் உணவு மந்திரியாக வந்த திரு எஸ். கே. பாட்டீல் தைரியசாலி; நிர்வாகத் திறமையுள்ளவர்; புது வழிகளில் செல்லக் கூடியவர் என்று பெயரெடுத்தவர். அந்தப் பெயருக்கு ஏற்பவே பதவிக்கு வந்ததும், தில்லி மக்கள் சபையில் துணிகரமாகப் பேசினார். "இப்பொழுது கடைப்பிடித்து வரும் உணவுக் கொள்கையை மாற்றவேண்டியிருந்தாலும் நான் மாற்றத் தயாராய் இருக்கிறேன். காலஞ்சென்ற உணவு மந்திரி கித்வாய் கடைப்பிடித்த வழிமுறைகளை மேற்கொள்ளவும் தயங்க மாட்டேன்" என்றெல்லாம் வீரத்தோடு பேசினார். மக்கள் உணவுக் கொள்கையில் மாறுதல் இருக்கும் என்றே ஆவலுடன் நம்பினார்கள்.

இந்தப் பேச்சுக்குப் பிறகு புதுதில்லியில் தேசிய அபிவிருத்தி கவுன்ஸில் கூட்டம் நடைபெற்றது. இக்குழுவில் ராஜ்ய சர்க்கார்களின் உணவு மந்திரிகள், முதல் மந்திரிகள், திட்ட கமிஷன் அங்கத்தினர்கள், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களில் சிலர், காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் ஆகியோர் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் கூடி, உணவு தானிய வியாபாரத்தைச் சர்க்கார் கைவிட முடியாது, எப்படியாகிலும் நடத்தியே தீரவேண்டும் என்று முடிவு செய்து விட்டார்கள்.

சர்க்கார் உணவு தான்ய வர்த்தகம் ஒரு உணவு மந்திரியின் ராஜிநாமாவுக்குக் காரணமாயிருந்தது என்பது சந்தேகமறத் தெரிந்தும், காங்கிரஸின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தேசிய அபிவிருத்திக் குழு மீண்டும் பழைய பல்லவியையே பாடியிருக்கிறது. ஒரு முக்கியமான மந்திரி, அதுவும் உணவு மந்திரி, பழைய கொள்கையை மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பதாக மக்கள் சபையின் முன்பு — அதாவது பாரதநாட்டின் முன்பு—சொல்லியபின்னரும் காங்கிரஸ் தன்னுடைய பிடிவாதமான போக்கிலேயே போகத் தீர்மானித்திருக்கிறது.

இருட்டில் போகிறவன் இடறி விழுந்தால், பின்னால் வருகிறவனுக்கு விளக்குப் பிடித்த மாதிரி என்பது பழமொழி. ஆனால் காங்கிரஸ் முன்னே போகிறவன் இடறி விழுந்தாலும் பின்னால் போகிறவனும் இடறி விழுந்தான் வேண்டும், அவன் வெளிச்சம் பெற்றுத் திசை மாறக் கூடாது என்று மூர்க்கத்தனமான பிடிவாதத்தில் இருக்கிறது!

ஆகவே, காங்கிரஸ் என்றும் தன் பிடிவாதங்களை விடப்போவதில்லை. இனி சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தி, காங்கிரஸ் கட்சியைப் பதவியை விட்டு இறக்கினால் ஒழிய இந்த நாட்டுக்கு விமோசனம் இல்லை!

என்ன சேதி?

சௌராஷ்டிர மக்களின் உற்சாகம்

சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு பெருகி வருவதில் ஒரு பலத்த போட்டி ஏற்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. அகமதாபாத்தில் பெரும் கூட்டத்தைப் பார்த்த பிறகு இப்படி வேறு எங்கு மக்களின் ஆதரவு கிடைக்கும் என்று தோன்றியது. ஆனால் மதுரை, திருச்சி, கோவை மூன்று இடங்களில் மக்கள் திரளாக வந்ததைப் பார்த்த போது, இதை மிஞ்ச முடியாது என்று தோன்றியது. ஆனால் இப்பொழுது சௌராஷ்டிரத்திலிருந்து ஒரு ருசிகரமான தகவல் வந்திருக்கிறது. செப்டம்பர் 5ம் தேதி சௌராஷ்டிரத்தில் தோராஜி தாலுக்காவிலுள்ள பிபாலியா என்ற ஊரைச் சேர்ந்த மக்கள் அனைவரும் காங்கிரஸைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் காங்கிரஸின் மீது இவ்வளவு கோபமும் ஆத்திரமும் அடைந்திருப்பதற்குக் காரணம் நாகபுரி தீர்மானம்தான். ஆகவே அவர்கள் அத்தனை பேரும் ஒருமுகமாகக் காங்கிரஸை விட்டுச் சுதந்திரக் கட்சியில் சேர்ந்து விட்டார்களாம். அதுமட்டுமில்லை; அவர்கள் தங்கள் ஊரின் பெயரையே மாற்றி ராஜாஜி கிராமம் என்று புதுப் பெயர் சூட்டியிருக்கிறார்கள்! எவ்வளவு சீக்கிரம் வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் ராஜாஜி தங்கள் ஊருக்கு வரவேண்டுமென்று அழைப்பு அனுப்பியிருக்கிறார்கள்! இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

பாராட்டத்தக்க முயற்சி

சமீப காலத்தில் சென்னை நகரில் எவ்வளவோ பொருட்காட்சிகள் நடந்திருக்கின்றன. ஆனால் ஆடம்பரமில்லாமல் அதே சமயத்தில் காண்போருக்கு உபயோகமான முறையில் நடந்த பொருட்காட்சி எதுவுமில்லை என்று சொல்லி விடலாம். இந்தக் குறையைப் போக்கிற்று, சென்னையில் இம்மாத ஆரம்பத்தில் ஆரம்பமான அமெரிக்கச் சிறு தொழில் பொருட்காட்சி. இந்தப் பொருட்காட்சியை கவர்னர் மேதி அவர்கள் திறந்து வைத்தார். சூரிய ஒளியைக் கொண்டு வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்களைக் கண்டு பிடித்து அமைப்பதில் அமெரிக்க நாடும் தீவிரமாக முனைந்திருக்கிறது. வீணாகும் சூரிய ஒளியை எரிபொருளாக மட்டும் அல்லாமல், மின்சார உற்பத்திக்கும் அதன் மூலம் ரேடியோ முதலிய சாதனங்களை இயக்கவும் பயன்படுத்த முடியும் என்று இந்தக் காட்சியில் நிரூபித்துக் காட்டினார்கள். சூரிய ஒளி இயக்க சாதனங்களை அமைத்துத் தருவதையும் ஒரு சிறு தொழிலாகக் கொள்ள முடியும் என்று கூறுகிறார்கள்.

இதைத் தவிர, எண்ணற்ற சிறு தொழில் இயந்திரங்கள் இக்காட்சியில் இடம் பெற்றன. ஒருவன் இந்த இயந்திரங்களில் ஏதாவது ஒன்றைத் தமது வீட்டில் அமைத்துக்கொண்டு வாழ்க்கையை நடத்தலாம். நாட்டின் தொழில் வளத்தையும் பெருக்கலாம் என்று கூறுகிறார்கள்.

இந்த இயந்திரங்களின் விலை 300 ரூபாயிலிருந்து முப்பதினாயிரம் ரூபாய் வரை பலவகையில் இருக்கின்றன. ரொட்டிசுடும் இயந்திரம், வடை செய்யும் இயந்திரம், மரவேலைகளுக்கான சிறு இயந்திரம், நூதன தையல் இயந்திரம், பிளாஸ்டிக் வேலைகளுக்கான இயந்திரம் என்று ஏராளமான சிறு இயந்திரங்களை இந்தக் காட்சியில் இயக்கிக் காட்டினார்கள். அரசாங்கத் தலையீடு இல்லாமல் அமெரிக்க வர்த்தகத் தொழில் சபையினர் தாங்களாகவே நடத்தும் இந்தக் காட்சி சென்னையில் பல்லாயிரக் கணக்கானவர்களின் மனத்தைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை.

அமெரிக்காவின் பொருளாதார உயர்வுக்குக் காரணம் பெரிய தொழில்கள் அல்ல, தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் சிறு தொழில்கள்தான் என்பதை கேட்கும்போது அம்முயற்சிகளை யார்தான் பாராட்டாமல் இருப்பார்கள்?


"போதும் உங்கள் உறவு! அடிமை வாழ்வை விடப் பட்டினி வாழ்வே மேல்!"
கல்கத்தா மக்கள் உணவுக் கிளர்ச்சி நடத்தி அலுத்துப் போய் விட்டார்கள்! - செய்தி
"பள்ளம் இருக்கிறது என்று யார் சொன்னார்கள்?"
நாடற்றோர் பிரச்னை
எங்களை ஒன்றும் செய்ய முடியாது.

கவிமணிக்கு அஞ்சலி

இந்த மாதம் 26ம் தேதி கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் திருநாள்.

அவர்கள் தமது வாழ்நாளில் புத்திரப் பேறடையும் பாக்கியம் பெறவில்லை. அதனால் என்ன? அவர்கள், ஊர்க் குழந்தைகள் இல்லை—தமிழ் நாட்டுக் குழந்தைகள் எல்லாம் தமது குழந்தைகளாக நினைத்தார். குழந்தைகளோடு குழந்தையாக, அவர்கள் உணர்ச்சிகளில் புகுந்து மகிழ்ந்து பாடினார்! தாயின் உணர்ச்சிகளில் புகுந்து, தாயுணர்ச்சியைத் தாமும் அனுபவித்துப் பாடியிருக்கிறார்.

தன் கண்மணியைத் தொட்டிலில் கிடத்தித் தாலாட்டுப் பாட்டு பாடித் தொட்டிலை ஆட்டும் தாய், தன் குழந்தையைப் பற்றி என்னவெல்லாம் நினைக்கிறாள் தெரியுமா?

கம்பன் கவியின் இன்சுவையை அனுபவிக்கத் தமிழ் நாட்டில் தமிழனாகப் பிறந்தாலன்றி முடியாதே, என்று அந்தத் திருமால்தான் இந்தக்குழந்தையாக அவதரித்திருக்கிறானோ என்று எண்ணிப் பாடுகிறாள்.

கம்பன் கவியின்
கனியமுதம் உண்டிடமால்
அம்புவியில் வந்திங்கு
அவதாரம் செய்தானோ ?

இன்னும் என்ன நினைக்கிறாள், தெரியுமா?

பெண்கள் சிறுவீட்டைப்
பேணுதழிந்து, அவர்தம்
கண்கள் சிவக்கவைக்கும்
கண்ணபிரான் நீதானோ ?

கண்ணனே தன் வயிற்றில் உதித்ததாக ஒரு தாய் எண்ணவேண்டுமென்றால் அவளுடைய பெருமிதம் எப்படியிருக்க வேண்டும்!

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் நினைவிலேயே கவிகளைப் பொழிந்து வந்த கவிமணிக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

ஆகாச 'வெடி!

''வெள்ளத்தினால் மக்கள் தவிப்பதையும் பொருட்படுத்தாமல் ராஜமகேந்திரபுரம் உப தேர்தலுக்கு ஓட்டுக் கேட்கிறது காங்கிரஸ்!''

காங்கிரஸின் ஈரமில்லாத்தனம் வெள்ளத்தினால் கூடப் பாதிக்கவில்லையே என்று அவர்கள் ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்!

★

'' குடும்பத்தினரைக் காப்பாற்றாத சர்க்கார் ஊழியர்கள் தண்டிக்கப் படுவார்கள்.''

—இந்திய சர்க்கார் அறிவிப்பு

பெரும்பாலான சர்க்கார் ஊழியர்களை அவர்கள் குடும்பத்தினர்கள் தானே காப்பாற்றுகிறார்கள் ?

★

'' எனக்கு இலவச பாஸ் கிடைத்தால் கூட சினிமா பார்க்க நான் விரும்ப மாட்டேன்!''

—லால்பகதூர் சாஸ்திரி

''அதை மற்றவர்களுக்காவது கொடுப்பீர்களா ?'' என்று கேட்கிறது ஒரு விசிறி.

★

'' மோட்டார் கார்களைத் திருடிக் கொண்டிருந்த ஒரு போலீஸ்காரனை அவன் மனைவியே போலீஸில் ஒப்புவித்தாள்.'' —பாரிஸ் செய்தி

இப்பேர்ப்பட்ட மனைவியுடன் வாழ்க்கை நடத்துவதை விடச் சிறை வாழ்க்கையை விரும்பித்தான் திருடினான் போலும்!

★

'' நீண்டகால வாழ்க்கைக்குத் தினம் சிறிது தூரம் நடப்பது அவசியம்.''

—ஸர் எம். விசுவேசுவரய்யா

நடப்பவர்கள் மட்டும் தங்கள் வாழ்நாளை ஏன் நொந்துகொள்ள வேண்டும் ?

★

''தேருவும் டலாய் லாமாவும் டெல்லியில் ஒருவருக்கொருவர் துண்டுகளைக் கொடுத்து மரியாதை செய்து கொண்டனர்.'' —தினசரி

பரஸ்பர நல்லெண்ணத்தில் துண்டுகூடக் குறையாதென்பதை இது விளக்குகிறது.


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

செந்தமிழ் நாட்டில் சுதந்திரக் கட்சி

எஸ்.வி.எஸ்.

பம்பாயிலும் அகமதாபாத்திலும் சுதந்திரக் கட்சிக்கு அமோகமான ஆதரவு காணப்பட்டது; லட்சக்கணக்கில் மக்கள் திரண்டு வந்து ராஜாஜியின் பொன்மொழிகளைக் கேட்டனர் என்ற செய்தி வெளியாகியதிலிருந்து தமிழ் மக்கள், நாங்களும் பம்பாய் மக்களுக்குச் சற்றும் பின்தங்கியவர்களல்ல; சுதந்திரக் கட்சிக்குப் பூரண ஆதரவு தரத் தயாராக இருக்கிறோம் என்று காண்பித்துக் கொள்ளத் துடியாய் இருந்தனர். அந்த அரிய வாய்ப்பைச் சமீபத்தில் ராஜாஜி அளித்தார். தமிழ்நாடு முழுதும் ராஜாஜியைப் பின்பற்றும் என்பதைச் சந்தேகமறத் தமிழ் மக்கள் நிரூபித்து விட்டார்கள். தமிழ் மக்கள் சுதந்திரக் கட்சிக்குக் காட்டிய இந்த ஆதரவு ஆளும் வர்க்கத்தினரிடையே பெருத்த பீதியை உண்டாக்கி யிருக்கிறது.

பதினாறாம் தேதி வெளியான பத்திரிகையில் 'சுதந்திரக் கட்சி என்ன பிரமாதம்! அது தானாக மறைந்துவிடும், அழிந்துவிடும்' என்று பேசிய சென்னை முதல் மந்திரியார், பதினேழாம் தேதி "சுதந்திரக் கட்சிதான் இன்று கவலை தரும் கட்சியாக இருக்கிறது!" என்று புலம்பியிருக்கிறார். இது ஒன்றே போதும், காங்கிரஸின் செல்வாக்கைத் தங்கள் அதிகார போகத்துக்கும் சுயநலத்துக்கும் உபயோகித்துக் கொள்ளும் நண்பர்கள் உள்ளங்களில் சுதந்திரக் கட்சியின் எழுச்சி எத்தகைய கவலை மூட்டியிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள. தாங்கள் என்ன பேசுகிறோம் என்பது தெரியாமல் நிமிஷத்துக்கு ஒன்று பேசும் நிலையை அடைந்திருக்கிறார்கள்!

மதுரையில் ராஜாஜி

மதுரை மாநகருக்கும் ராஜாஜிக்கும் எப்படியோ ஒரு இனம் புரியாத தொந்தம். ராஜாஜி உள்ளத்தில் ஒரு கருத்து உதித்தால், அதை மதுரைப் பொது மக்கள் ஆதரித்தால் தான் அவர் உள்ளம் நிறைகிறது. ராஜாஜி எந்தக் காரியம் மேற்கொண்டாலும், நாட்டின் நலனுக்குகந்ததாகவே இருக்கும்; அதை வரவேற்றேயாக வேண்டும் என்று மதுரைப் பொதுமக்களும் திடசங்கல்பம் செய்துகொண்டிருக்கிறார்களோ என்று கூட எண்ணவேண்டியிருக்கிறது! அவ்வகையில், ராஜாஜி சுதந்திரக் கட்சியை அரங்கேற்ற மதுரை வருகிறார் என்று தெரிந்தவுடன் மதுரை நகரமே புத்தம் புதியதோர் களையுடன் காணப்பட்டது. தெருக்கள்தோறும் கொடிகளும் தோரணங்களும் கட்டி அலங்கரித்தனர். "ஆலயத்தைத் திறந்து வைத்த அண்ணலே வருக!" "ராஜதந்திரி ராஜாஜியே வருக!" "பாரத ரத்தினமே வருக!" என்றெல்லாம் எழுத்துக்கள் பொறித்த பெரிய வளைவுகள் சாலைகளில் எல்லாம் காணப்பட்டன. ரயில் நிலையத்திலோ மக்கள் ஆயிரக்கணக்கில் கூடிவிட்டனர். ஜங்ஷனிலும் ஜங்ஷனுக்கு வெளியிலும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். மதுரை நகரசபைத் தலைவர் திரு எஸ். தேவசகாயம், தமிழ் நாடு சுதந்திரக் கட்சித் தலைவர் திரு வெங்கடகிருஷ்ண ரெட்டியார், திரு டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி மற்றும் பல பிரமுகர்கள் மாலைகள் அணிவித்து ராஜாஜியையும் ஆசார்ய ரங்கா அவர்களையும் வரவேற்றனர்.

கறுப்புக் கொடி!

மக்கள் எவ்வளவு ஆர்வத்தோடு சுதந்திரக் கட்சியையும் ராஜாஜியையும் வரவேற்றனர் என்பதை எடுத்துக்காட்டக் காங்கிரஸ்காரர்கள் ஓர் அருமையான திட்டம் வகுத்து வைத்தனர். அதுதான் கறுப்புக்கொடி காட்டும் திட்டம்.

ராஜாஜி மதுரை ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும், சிலர் கறுப்புக்கொடி காண்பித்துக் கோஷமிட்டனர். ஆனால் ஆதரவாளர்கள் அவர்களுக்கு எதிராகப் போட்ட கோஷத்தில் கறுப்புக் கொடியாரின் கோஷம் மங்கிவிட்டது. சுமார் ஐம்பது அறுபது பேர்கள் கோஷம் ஆயிரக்கணக்கில் திரண்டுள்ளவர்களின் கோஷங்களின் முன் எப்படி எடுபட முடியும்?

கறுப்புக் கொடி, எதிர்ப்பு இவற்றைக் கண்டு ராஜாஜி என்றுமே அஞ்சியவரல்ல. அதற்கும் பதில் இவையெல்லாம் இருந்தால் தான் ராஜாஜிக்குப் புது உற்சாகமும் ஊக்கமும் பிறக்கும். அந்த வகையில் இந்த அவலட்சணங்களை ராஜாஜி வரவேற்பார்.

ஆனால் சுதந்திரக் கட்சி விஷயத்தில் இத்தகைய கேலிக் கூத்தைக்கண்டு ராஜாஜி வருத்தப்பட்டார். காங்கிரஸுக்கு எதிராகப் பிரசாரம் செய்ய வந்துள்ளபோது, மதுரையில் காங்கிரஸ் சாகவில்லை என்பதைக் காட்ட வேண்டுமென்றால் காங்கிரஸ் கொடியல்லவா காட்டியிருக்க வேண்டும்? அதற்கும் பதில் சில்லறை விஷமம் செய்பவர்களைப் போலும், சில்லறைக் கட்சிகள் நடந்து கொள்வது போலும் காங்கிரஸ் நடந்து கொண்டிருக்க வேண்டியதில்லை என்று ராஜாஜி கோவைக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸின் பழம் கொள்கைகளை மறந்தாற் போல் தங்கள் கொடியையும் அல்லவா மறந்துவிட்டார்கள்!

ஊழியர் கூட்டம்

எந்தக் காரியத்தையும் திறம்பட நடத்தி வைப்பவர்கள் நல்ல ஊழியர்கள். தன்னலம் கருதாமல், கட்சியின் லட்சியங்களை, மனத்தில்

கொண்டு மக்களிடையே வேலை செய்பவர்களைப் பொறுத்தே யிருக்கிறது கட்சியின் பலம். சுதந்திரக் கட்சியின் நல் அதிர்ஷ்டம், இந்தப் பணியைத் திறம்படச் செய்வதற்கு நல்ல ஊழியர் படை யிருக்கிறது என்பது மதுரை, திருச்சி, கோவை ஆகிய மூன்று இடங்களிலும் நடைபெற்ற ஊழியர் கூட்டங்களிலிருந்து மிகத் தெளிவாகப் புலனாயிற்று. இம் மூன்று ஊர்களிலும் ராஜாஜியும் ஆசார்ய ரங்காவும் ஊழியர்களுக்குச் செய்த நல்லுரைகள் என்றென்றும் நினைவில் இருக்க வேண்டியவைகளாகும்.

இக் கூட்டங்களில் ராஜாஜி ‘சுதந்திரக் கட்சியின் அவசியத்தையும் கொள்கைகளையும் சிறு குழந்தைகளுக்கும் விளங்கும் வகையில் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார் :

'நமக்குத்தான் சுதந்திரம் வந்து விட்டதே? சுயராஜ்யம் ஏற்பட்டுவிட்டதே? இன்னும் எதற்குச் சுதந்திரக் கட்சி?' என்று சிலர் கேட்கிறார்கள் அல்லவா? இதற்கு ராஜாஜி 'சுயாட்சி ஏற்பட்டால் மட்டும் போதாது! அந்த ஆட்சி நல்லாட்சியாகவும் இருக்க வேண்டும். அந்த நல்லாட்சி ஏற்படுத்தத்தான் இந்தச் சுதந்திரக் கட்சி ஏற்பட்டிருக்கிறது' என்றார்.

இதைக் கேட்டதும், காரிருளில் மின்னல் வெட்டியது போல், அங்கு கூடியிருந்தவர்கள் உள்ளத்தில் ஒரு புது ஒளி ஏற்பட்டது!

''மிகச் சிரமப்பட்டு ஒரு தோட்டத்தை ஒருவன் வாங்குகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தத் தோட்டத்தைப் பேணிப் பாதுகாக்க, அதை அடகு வைத்துக் கடன் வாங்குகிறான். அக் கடனும் அளவுக்கு மிஞ்சினால், பெற்ற தோட்டத்தை மீண்டும் இழக்கும்படியாகிறது. ஏறத்தாழ நம் நாட்டு விவகாரங்களும் இந்த நிலையிலேயே இருக்கின்றன.

''திட்டங்களுக்கு என்று சொல்லி நமது சர்க்கார் எவ்வளவு ரூபாய்கள் அந்நிய நாடுகளிடமிருந்து கடன் வாங்குகிறது!''

கங்கா ஸ்நானம்

இப்படி எத்தனையோ கருத்துக்கள் சொல்லிக் கொண்டு போனார். அவை யிருக்கட்டும். மக்கள் மனத்தில், முக்கியமாக ஊழியர்கள் உள்ளத்தில் மேலோங்கியிருக்கும் ஐயங்களை ராஜாஜி வெகு அருமையாகப் போக்கினார்.

ஒரு நல்ல வைத்தியர் நோயாளியைக் கண்டவுடன், இவன் குறிப்பிட்ட நோயினால் சங்கடப்படுகிறான் என்று கண்டுபிடித்து மருந்து கொடுப்பது போல் அன்று ராஜாஜி அவ்விஷயத்தைக் குறிப்பிட்டார்.

அதாவது இன்று சுதந்திரக் கட்சியில், முன்னர் ராஜாஜிக்கு எதிரிடையாகப் பிரசாரம் செய்தவர்கள், வேலை செய்தவர்கள் எல்லாரும் இருக்கிறார்களே, இவர்களை நம்பலாமா? என்றெல்லாம் ராஜாஜியின் பக்தர்களுக்குச் சந்தேகம் எழுகிறது!

சொந்த முறையில் ராஜாஜி வாழ்த்தையும் வசவையும் ஒரு சமமாகப் பார்ப்பவர். இந்தப் பரிபக்குவமான மன நிலை ராஜாஜிக்கு ஏற்பட்டிருக்கிறது. அதே நிலை ராஜாஜியின் பக்தர்களுக்கு ஏற்படுவது சற்றுக் கடினமாக இருக்கிறது. '' அவர் இருக்கிறாரே? இவர் இருக்கிறாரே?'' என்று குற்றமும் குறையும் காணும் வகையில் சிலர் பேசுகிறார்கள்! இதற்கு அன்று ராஜாஜி கூறிய சமாதானத்தை, தமிழ் நாடு முழுதிலுமுள்ள சுதந்திரக் கட்சி அன்பர்கள் உணர வேண்டும்.

''ஒரு மாபெரும் காரியத்தை, கட்சியைத் தொடங்கும்போது, யாரெல்லாம் முழு மனத்துடன் ஒத்துழைப்பதாகவும், உதவி புரிவதாகவும் சொல்லிக்கொண்டு முன்வருகிறார்களோ, அவர்களையெல்லாம் வரவேற்று ஏற்றுக் கொள்ளவேண்டியது அவசியம்.

''மனிதர்கள் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. வயதாக ஆக, பொறுப்புணர்ச்சி வளர வளர, தாங்கள் முன்மாதிரியின்றி நல்லபடியாக நடந்துகொள்ள வேண்டும் என்று ஆசை எழுவது இயல்பு. அந்த ஆசையுடன் வந்து சேருபவர்களை மனமார ஏற்றுக் கொள்ள வேண்டும்! பாபத்தைக் கழுவக் கங்கையில் முழுகி எழுந்தவனிடம், பழைய பாபங்களைப் பற்றிப் பேசக் கூடாது. சுதந்திரக் கட்சி கங்கையைப் போன்றது. சுதந்திரக் கட்சியில் சேருபவர்கள் அனைவரும் நல்லவர்களாகிப் போவார்கள் என்று நாம் நம்பத்தான் வேண்டும்!'' என்றார்.

ஊழியர்களுக்குக் கூற வேண்டிய மற்றொரு எச்சரிக்கையையும் ராஜாஜி தமக்கே உரிய முறையில் மிக அழகாக எடுத்துரைத்தார் :

பணம் புஷ்பம்

ஊழியர்கள் பெரும்பாலோர் ஏழைகளாக இருப்பார்கள். அவர்களிடம் பொதுப் பணம் வந்து சேர்ந்தால், அது தவறிப் போய்ச் சொந்த செலவுக்குப் பயன்படுத்திக் கொண்டு விடுவார்கள். பிறகு கட்சிக் காரியாலயத்துக்குக் கட்ட முடியாமல் திண்டாடுவார்கள். இச்செய்தி ஊரில் எளிதில் பரவி, அவப்பெயர் தேடித் தந்து விடும். இதுதான் பல காங்கிரஸ் ஊழியர்களின் கதை! இத்தகைய நிலை சுதந்திரக் கட்சி ஊழியர்களுக்கு ஏற்படக் கூடாது என்பதை முன்னதாகவே ராஜாஜி எச்சரிக்கை செய்தார்! ''கோவில் ஆண்டவனுக்காக எடுத்துச் செல்லும் புஷ்பத்தை வழியிலேயே தலையில் சூட்டிக் கொள்ளலாமா? கோயிலுக்குக் கொண்டு சென்று ஆண்டவனுக்குச் சாத்திய பிறகே அதிலிருந்து ஒரு பகுதியைப் பிரசாதமாகப் பெற்றுத் தலையில் அணிந்து கொள்ளுகிறோமல்லவா? அதைப் போலவே, கட்சி அங்கத்தினர்களைச் சேர்க்கும் ஊழியர்கள், அந்தச் சந்தாத் தொகையையும், அங்கத்தினர்கள் புத்தகத்தையும் கட்சிக் காரியாலயத்துக்கு ஜாக்கிரதையாக அனுப்பிவிட வேண்டும். சந்தாத் தொகையை, கோவிலுக்கு எடுத்துச் செல்லும் புஷ்பம் போல் புனிதமாகக் கருதவேண்டும்'' என்றார்.

மீனாட்சி அம்மன் ஆட்சி செலுத்தும் ஊரில் இப்படியொரு உபமானம் கூறினால் யாரால் தான் சந்தாத் தொகையை, பொதுப் பணத்தைப் புனிதமாகக் கருதாமல் இருக்க முடியும்?

தமிழ் நாட்டில் ராஜாஜி சுற்றுப்பிரயாணம் செய்கிறார் என்று முதன்முதலில் செய்தி வெளியானபோது, சுதந்திரக் கட்சித் தலைவர் ஆசார்ய ரங்கா அவர்கள் கூட வருவது அவ்வளவு நிச்சயமாக இல்லை. கடைசி நிமிஷத்

தில்தான் நிச்சயமாயிற்று. ராஜாஜியுடன் தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் கலந்து கொண்டு, ''சுதந்திரக் கட்சிக்கு ராஜாஜி நல்ல தலைவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்'' என்று மக்கள் ஒவ்வொருவரும் பேசும்படி ஆசார்ய ரங்கா அவர்களும் ஒவ்வொரு இடத்திலும் மிக நன்றாகப் பேசினார். மதுரை ஊழியர் கூட்டத்தில் ஆசார்ய ரங்கா அவர்கள் நிகழ்த்திய உரை மிக அருமையாக இருந்தது!

அவர் அன்று தமது உரையில் ஒரு ரகசியத்தை வெளியிட்டார். புது தில்லியில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் பலபேர் அவரிடம் வந்து, சுதந்திரக் கட்சி தோற்றுவித்திருப்பது பற்றி மகிழ்ச்சி தெரிவித்து விட்டுப் போகிறார்கள். அது வளர வேண்டும் என்று நல் வாழ்த்துக் கூறுகிறார்கள். அதன் வளர்ச்சியைக் கண்டு தங்கள் குதூகலத்தை மொழிந்து விட்டுப் போகிறார்கள்.

'' 'இப்படியெல்லாம் மகிழ்கிறீர்களே, நீங்களும் இந்தக் கட்சியில் சேர்ந்து விடுவது தானே?' என்று கேட்டால், 'சற்றுப் பொறுங்கள்!' என்கிறார்கள். உண்மையில், காங்கிரஸிலுள்ள பல நல்லவர்கள் உள்ளமெல்லாம் நம் கட்சியின் பக்கம் இருக்கிறது. நாம் நாளுக்கு நாள் வளர்ந்து வெற்றி அடைய வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்! விரைவில் அவர்கள் நம்முடன் சேர்ந்து விடுவார்கள்....சமீப காலத்தில் நான் பாரதநாட்டில் பல மாகாணங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு வந்திருக்கிறேன். எங்கும் சுதந்திரக் கட்சிக்குப் பேராதரவு இருக்கிறது'' என்பதைத் திரு ரங்கா அவர்கள் வெளியிட்டார்.

ஊழியர்களிடையே ஏற்படக் கூடிய சிறு பூசல்களைப் பற்றியும் ரங்காஜி குறிப்பிட்டார்.

'' கட்சி ஊழியர்களிடையே பூசல்களும் பொறாமைகளும், சண்டைகளும் ஏற்படுவது இயற்கை. முன்னாட்களில் காங்கிரஸில் கூட இப்படிப் பூசல்கள் ஏற்படுவதுண்டு. பிளவு ஏற்பட்டுவிடுமோ என்ற பயம்கூட உண்டாகி விடும். அந்தச் சமயத்தில் காந்தி மகான் ஒரு புது லட்சியத்தைக் காங்கிரஸ்காரர்கள் முன்னிலையில் வைப்பார். அவ்வளவுதான்; சண்டைகள் எல்லாம் மறந்துபோய் லட்சியத்தில் நாட்டம் கொண்டு வேலை செய்யத் தொடங்குவார்கள்.

''சுதந்திரக் கட்சியின் லட்சியங்களை நீங்கள் அனைவரும் நன்றாக மனத்தில் கொண்டால், உங்களிடையே பூசல் வராது! லட்சியங்களை மனத்தில் உறுதியாகக் கொண்டு வேலை செய்யுங்கள்'' என்று ரங்கா அவர்கள் கேட்டுக் கொண்டார். இது ஒரு நல்ல யோசனையே அல்லவா?

காந்தி மகானுக்குப் பின்

சில மாதங்களுக்கு முன் ரங்கா அவர்கள் மதுரை வந்திருந்தாராம். மங்கம்மாள் அரண்மனையிலுள்ள காந்தி புத்தகாலயத்தைப் பார்த்தார். அப்போது, ''பாரத நாட்டுச் சுதந்திரத்தை வாங்கித் தந்த காந்தி மகானைப்போல், தனி மனிதனின் சுதந்திரத்தை வாங்கித்தரக் காந்தி மகானுக்கு அடுத்தாற்போல் இந்நாட்டிலே பெருந் தலைவராக விளங்கும் ராஜாஜி தலைமை வகித்து முயன்றால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணினேன்! என்னுடைய எண்ணம் இவ்வளவு விரைவில் கைகூடி விட்டது கண்டு மகிழ்கிறேன். ராஜாஜியுடன் இந்நகருக்கு விஜயம் செய்யவும், வேலை செய்யவும் வாய்ப்புக் கிடைத்ததை என் பாக்கியமாகக் கருதுகிறேன்'' என்று ஸ்ரீ ரங்கா கூறினார்.

இப்படியெல்லாம் பேசினார் என்கிறீர்களே? தமிழிலா பேசினார் என்ற ஐயம் எழலாம்!

ஆசார்ய ரங்கா அவர்கள் ஆந்திர நாட்டைச் சேர்ந்தவர். ஆங்கிலத்தில்தான் பேசினார். மதுரையின் பழம் பெரு தேசபக்தரான திரு எல். கிருஷ்ணசுவாமி பாரதியார் அவர்கள் அழகிய தமிழில் ரங்காஜியின் பேச்சை மொழிபெயர்த்தார். அத்துடன் தாமும் சுதந்திரக் கட்சியில் சேர்ந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக ஊழியர்கள் மகிழ அறிவித்தார்.

பி. டி. ராஜன் ஆதரவு

அன்று மாலை மதுரை தமுக்கம் மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தமுக்கம் மைதானம் முழுதும் ஜனங்கள் நிரம்பியிருந்தனர். அவர்கள் உள்ளத்தில் உற்சாகம் பொங்கிக் கொண்டிருந்தது. அந்த உற்சாகமும் குதூகலமும் நிறைந்த மக்களைத் திரு வேங்கடகிருஷ்ண ரெட்டியார் மனமார வரவேற்றார். அவருக்குப் பின் மதுரைப் பிரமுகர் திரு பி. டி. ராஜன் அவர்கள் பேசினார். ''ராஜாஜி சுதந்திரக் கட்சியின் கருத்துக்களை எடுத்துச் சொல்வார். அதை உங்களுக்குப் பிடித்தால் ஏற்றுக் கொள்ளுங்கள்! இல்லையானால் விட்டு விடுங்கள்'' என்றார்.

அடுத்தாற்போல் ஆசார்ய ரங்கா பேசினார்.

'' நான் பி. டி. ராஜன் அவர்கள் ஊருக்கு அவரது விருந்தாளியாக வந்திருக்கிறேன். அவர் சுதந்திரக் கட்சிக்குப் பூரண ஆதரவு கொடுத்து எங்களுடன் இருக்க வேண்டாமா?'' என்று கூடியிருந்த லட்சக்கணக்கான மக்கள் உள்ளங்களில் அலைமோதிக் கொண்டிருந்த கருத்தை வெளியிட்டார்.

அப்போது மேடையின் பின்வரிசையில் அமர்ந்திருந்த திரு பி. டி. ராஜன் அவர்கள் **''நான் உங்களுடன்தான் இருக்கிறேன்!''** என்றார்.

மதுரை நகரப் பொதுமக்கள் முன்னிலையில் திரு பி. டி. ராஜன் இவ்வாறு சொன்னார். தாமும் சுதந்திரக் கட்சியில் இருப்பதாகப் பகிரங்கமாகச் சொன்னார். இதைத் திரு ரங்கா அவர்கள் பொதுமக்களுக்குத் தெரிவித்ததும், பொது மக்கள் பலமாகக் கைதட்டி ஆரவாரித்தனர்.

ராஜாஜி பேசியபோது, திரு பி. டி. ராஜன் அவர்கள் பேச்சைப் பற்றிக் குறிப்பிட்டு, அந்தக் கூட்டத்தின் நிலையைத் தெளிவாக விளக்கினார்.

''சுதந்திரக்கட்சியின் கொள்கைகளை இன்று புதிதாகப் பிரசாரம் செய்ய இந்தக் கூட்டம் கூட்டப்படவில்லை. சென்ற சில மாதங்களாகவே, சுதந்திரக் கட்சியின் கொள்கைகளையும் லட்சியங்களையும் விளக்கிப் பல கூட்டங்கள்






தமிழகத்தில் ராஜாஜி

1. மதுரை வக்கீல்கள் சங்கத்தில் ராஜாஜியை வரவேற்று சங்கத்தலைவர் திரு ரங்கசாமி நாயுடு பேசுகிறார். 2. மதுரை வக்கில் சங்கக் கூட்டத்தின் ஒரு தோற்றம். 3. திருச்சி ஜில்லா சுதந்திரக் கட்சியின் ஊழியர் கூட்டம் திரு பொன்னம்பலக் கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. அவர் மைக் முன் நின்று பேசுகிறார். 4. ஊழியர் கூட்டத்தின் ஒரு பகுதி. 5. மதுரை ஊழியர் கூட்டத்தின் ஒரு தோற்றம். 6. கோவை ஊழியர் கூட்டத்தின் ஒரு தோற்றம். 7. மதுரை ஊழியர் கூட்டத்தின் மேடையில் ஆசார்ய ரங்கா, திரு எல். கிருஷ்ணஸ்வாமி பாரதி, ராஜாஜி. 8. கோவை ரோட்டரி சங்கத்தில்ராஜாஜி. 9. நபிநாயகம்பிறந்த நாள் கொண்டாட்டக் கூட்டமாகிய மதுரை மிலாத்கூட்டத்தில்தொழுகை நடைபெறுகிறது. 10. சென்னைராஜ்ய சுதந்திரக்கட்சித்தலைவர் திரு வெங்கடகிருஷ்ண ரெட்டியாருக்கு ராஜாஜி



















ஆலோசனை கூறுகிறார். 11. மதுரையில் ராஜாஜியின் வருகையை எதிர்பார்த்து நிற்கும் திரளான மக்கள். 12. கோவை வர்த்தக சங்கத்தில் வரவேற்பு. 13. மதுரை திலகர் சதுக்கத்தில் நடைபெற்ற மிலாத் கூட்ட மேடையின் தோற்றம். 14. கோவை வர்த்தக சங்கக் கூட்டத்தின் சபை. 15. கோவை சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு வி. வி. சுப்பய்யா கவுண்டரும், ஊழியர் கூட்டத்தில் ரூ. 1001க்கு செக் நன்கொடையாக அளித்து, கோவையில் நிதி வசூல் திடீரென்று துவக்கிவைத்த உருமாண்டபாளையம் திரு நஞ்சக்குட்டி கவுண்டரும். 16. கோவை ரோட்டரி சங்கக் கூட்டம்.















நடைபெற்று விட்டன. மகாநாடுகள் நடைபெற்று விட்டன. எல்லாப் பத்திரிகைகளும் நல்ல முறையில் பிரசுரித்திருக்கின்றன. ஆகவே, பாரத நாட்டுப் பொதுமக்களுக்குச் சுதந்திரக் கட்சியைப் பற்றி நன்ருகத் தெரியும். இங்கு கூடியுள்ள மக்களுக்கும் தெரியும். இங்கு கூடியிருப்பவர்கள் சுதந்திரக் கட்சிக்கு முழு ஆதரவு தரத் தயாராக இருக்கிறேம் என்பதை அறிவிக்கவே, இங்கு குழுமி யிருக்கிருர்கள்'' என்று கூறியவுடன், ராஜாஜி சொல்வது முற்றும் உண்மை என்று ஆமோதிப்பது போல் வாயைப் பிளந்து கொண்டு பலத்த கரகோஷம் எழுந்தது.

அன்று பொதுக் கூட்டத்தில் அரசாங்கம் வர்த்தகத் துறையில் நுழைந்து எவ்வளவு கொடுமைப்படுத்தி வருகிறது என்பதையும், சுதந்திரக் கட்சி பணக்காரர் கட்சி என்று பொய்ப் பிரசாரம் செய்யும் காங்கிரஸ்தான் பணக்காரக் கட்சி என்றும், முந்திரா போல் எத்தனையோ பேரிடமிருந்து பணம் லட்சக் கணக்கில் பெற்றிருப்பதாகப் பிரதமரே ஒப்புக் கொண்டிருக்கிருர் என்றும் குறிப்பிட்டார்!

நெற்பயிர்

இவை யெல்லாவற்றையும் விடத் தனி மனித சுதந்திரம் எவ்வளவு அவசியம் என்பதைக் கிராம மக்கள் மனத்தில் பதியும்படி ஒரு நல்ல உதாரணம் கூறி விளக்கிருர்:

நெற்பயிர் சாகுபடியைப் பற்றிக் குறிப்பிட்டார். ''நெற்பயிரை நாற்றங்காலிலிருந்து, பிடுங்கி ஒவ்வொரு நெற்பயிராக எடுத்து காற்றும் நீரும் புகும்படியாக ஒன்றுக்கொன்று இடைவெளி விட்டுத் தனித் தனியாக வயலில் நட வேண்டும். அப்போதுதான் நெற்பயிர் செழித்து வளர்ந்து தான்யங்களைக் கொடுக்கும். இது கிராம மக்களுக்குத் தெரியும். அதைப் போல்தான் தேசமும். தேச மக்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகச் சுதந்திரமாக வாழ வழி செய்ய வேண்டும். அப்போதுதான் மக்கள் சந்தோஷமாக வாழ்வார்கள்; செல்வம் கொழிக்கும்.

''அதை விடுத்து, நாற்றங்காலிலேயே பயிர் விளையச் செய்யும் வகையில், மக்களின் தனிப்பட்ட சுதந்திரத்தைப் பறித்து, கூட்டுறவுப் பண்ணை என்றும் பிறகு கூட்டுப் பண்ணை என்றும் கூறி மக்களின் வாழ்வைக் கெடுக்கப் பார்க்கிருர்கள். இதை எதிர்ப்பது தான் முதல் வேலை. அதற்குத்தான் சுதந்திரக் கட்சி தோன்றியிருக்கிறது.''

ராஜாஜி சொன்ன உதாரணம் யார் மனத்தில்தான் பதியாது?

இன்னும் மதுரையைப் பற்றியே எழுதிக் கொண்டிருந்தால் சரியாகாது. ஆனல் திருச்சிக்குப் போவதற்கு முன் இன்னெரு கூட்டத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். மதுரை நகர முஸ்லிம்கள், நபிகள் நாயகத்தின் பிறந்த தினக் கூட்டத்தை ராஜாஜியின் முன்னிலையில் சிறப்பாக நடத்தினர்கள். கூட்டம், மதுரை நகரத்துக்கு நடுமையத்திலுள்ள திலகர் சதுக்கத்தில்நடந்தது. ஹிந்துக்களும் முஸ்லிம்களுமாக, ஏராளமான பேர்கள் வந்திருந்தார்கள்.

அக்கூட்டத்தில் எல்லாச் சமயங்களும் ஒரே உண்மையை, தர்மத்தை, ஒழுக்கத்தைத்தான் கூறுகின்றன என்பதை வலியுறுத்தினர் ராஜாஜி. முஸ்லிம் சமயமும் கிறிஸ்துவ சமயமும் தங்கள் சமயத்தில் இருந்தால்தான் மக்களுக்கு விடுதலையுண்டு என்று தீவிரமாகச் சொல்கின்றன. ஆனல் ஹிந்து சமயம், எல்லாச் சமயங்களும் ஆண்டவனை அடைய மார்க்கங்கள்தான் என்று அங்கீகரிக்கிறது. இந்தச் சகிப்புத் தன்மைதான் ஹிந்து சமயத்தின் உயர்வு என்று கூறிவிட்டு, தலைவரின் அனுமதியின் பேரில் சுதந்திரக் கட்சியைப் பற்றியும் பேசினர்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சுதந்திரத்தைப் பேண வேண்டும். அரசாங்கத்துக்குத் தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுத்துவிடக் கூடாது. அரசாங்கம் மக்களுக்காக இருக்கிறதே யொழிய, அரசாங்கத்துக்காக மக்கள் இல்லை. மக்களுக்கு அடங்கித்தான் அரசாங்கம் இயங்க வேண்டும்.

அரசாங்கம் வண்டி மாட்டைப் போல். மாட்டை வண்டியில் பூட்டினல், மாடு நாம் சொல்கிறபடி கேட்க வேண்டுமே தவிர, மாடு நமக்கு உத்தரவு போடக் கூடாது! அது சொல்கிறபடி நாம் போக முடியாது. சற்று முன்னலோ பின்னலோ நகர்ந்து உட்காரு மாறு சொல்லலாமே தவிர, குழந்தை இங்கே உட்கார வேண்டும்; தாயார் அங்கே உட்கார வேண்டும் என்று அது கூற முடியாது. அதுபோல் அரசாங்கம் மனிதனின் தனி உரிமையில், சொத்து சுதந்திரத்தில் தலையிடக் கூடாது. இன்றைய சர்க்கார் மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கப் பார்க்கிறது. அதைத் தடுத்து மனிதனின் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டியது இப்போது உடனடியான கடமை என்று கூறினர்.

திருச்சி

நேரமாகிவிட்டது. வாருங்கள், திருச்சிக்குப் போவோம்! ஏறுங்கள் காரில். ஆம், மதுரையிலிருந்து திருச்சிக்குக் காரில்தான் போனேம். இந்த ஏற்பாடு திருச்சி நகர மக்களுக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தது. மதுரை மக்களைப் போல் திருச்சி மக்களும் ஜங்ஷனில் பெருங் கூட்டமாக வந்து ராஜாஜியை வரவேற்க முடியவில்லையே என்று குறைப் பட்டார்கள்.

திருச்சியில் ராஜாஜி ஸ்ரீ கே. வி. சீனிவாசய்யங்கார் வீட்டில் தங்கியிருந்தார். ஸ்ரீமான் கே. வி. சீனிவாசய்யங்கார் பழைய காங்கிரஸ்காரர்; தீவிர தேசபக்தர். அந்நாட்களில் திருச்சியிலிருந்து அவரும் அவர் சகோதரரும் இரவு நேரங்களில் கால்நடையாகப் புதுச்சேரிக்குச் சென்று மகான் அரவிந்தருக்குப் பண உதவி செய்துவிட்டு வருவார்களாம். பகலில் நடந்தால் போலீஸ்காரர் கண்காணிப்புக்கு ஆளாக நேரும் என்று அவர்கள் இரவில்தான் நடப்பார்களாம்!

அவர் துணிச்சலுக்கு இன்னெரு உதாரணம் கூறுகிறேன். அவரும் அவரைச் சேர்ந்தவர்களுமாகக் கூடி, கூட்டுறவுப் பண்ணை ஆரம்பிக்கலாம் என்று சில ஆண்டுகளுக்குமுன் ஆரம்பித்தனர். சுமார் ஒரு லட்சம்



எஸ். சுப்பிரமணிய அய்யர், டிபுடி பைனான்ஷியல் அட்வைஸர், N. C. D. C. ராஞ்சி, அவர்களின் குமாரத்தி சௌ. சுந்தராம்பாளுக்கும் மதுராந்தகத்தில் கவர்ன்மெண்ட் அஸிஸ்டெண்ட் ஸர்ஜனாக வேலை பார்க்கும் ஸ்ரீ எஸ். வெங்கடராமன் M. B. B. S.க்கும் சமீபத்தில் செங்கோட்டையில் விவாஹம் நடந்தது.

ஸ்ரீ தியாகராஜ சங்கீத வித்யாலயா

11 - 10 - 59 விஜயதசமி தினத்தன்று - புது வகுப்பு ஆரம்பம்

சாஸ்திரீய முறையில் கர்நாடக சங்கீதத்தைப் பயிற்றுவிக்கும் முதன்மையான வித்யாலயம்

திறமையான பயிற்சி - குறைந்த சம்பளம் - ஆதரவைக் கோருகிறோம்

.... விவரங்களுக்கு ....

கௌரவக் காரியதரிசி: ஸ்ரீ தியாகராஜ சபா (ரிஜிஸ்டர்டு)

Regd. Office : 141, மஹாவீர் பில்டிங்

பந்தர்க்கார் ரோடு - மாதுங்கா - பம்பாய் - 19

சபா பில்டிங்: "சங்கீத ஜோதி", 102, டெலைல் கிராஸ் ரோடு

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு (பிரைவேட்) லிட்.,

(நிறுவியது)

"வீணா விஹார்," 17-A. ஸயான் - மாதுங்கா எஸ்டேட்

(கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்)

பம்பாய் - 22

தந்தி : 'GROW RICH'

POST BAG No. 6759

25 மாதங்கள்	குறுகிய கால ஏலச் சீட்டுகள் 2-வது ஞாயிற்றுக்கிழமை ஏலங்கள் 1959 அக்டோபர் மாத ஸீரிஸ்	25 அங்கத்தினர்கள்

சேரக் கடைசி தேதி 10-10-59 ... முதல் ஏலத் தேதி 11-10-59

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	G	ரூ. 20/	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	H	ரூ. 15/-	ரூ. 375/-
F	ரூ. 25/-	ரூ. 625/-			

நீண்டகால ஏலச் சீட்டுகள்

சேரக் கடைசி தேதி 10-10-59 ... முதல் ஏலத் தேதி 11-10-59

50 மாதங்கள் *50 அங்கத்தினர்கள்*

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	குறைந்த தள்ளுபடி
A	ரூ. 100/-	ரூ. 5,000	ரூ. 500/-
B	ரூ. 50/-	ரூ. 2,500	ரூ. 250/-
D	ரூ. 20/-	ரூ. 1,000	ரூ. 100/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

வெள்ளிக்கிழமை *(வார விடுமுறை நாள்)*

வேலை நேரம் : காலை 8 முதல் 11 மணி வரை ; மாலை 4 முதல் இரவு 8 மணி வரை

தலைமை ஆபீஸ் : "பாலுஸேரி பில்டிங்ஸ்", 3, வெங்கடாசலசெட்டித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

கிளைகள் : *185, முதல் மாடி, 6-வது கிராஸ், காந்திநகர், பெங்களூர்-9 ✱ B-6, பிளாக் III ஆஸப் அலி ரோடு, புது டெல்லி-1 ✱ 14-A/4, W.E.A. கரோல்பாக், புது டெல்லி-5 198, முதல் மாடி, ஜோர்பக் நர்ஸரி, புது டெல்லி-3.*

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

ரூபாய்க்குமேல் நஷ்டமடைந்ததைத் தவிர ஒரு மணி அரிசி லாபம் கிடைக்கவில்லை என்று கூறினார்! எப்படியிருக்கிறது கதை?

இவர் இல்லத்தில்தான் தங்க ஏற்பாடு ஆகியிருந்தது. நாங்கள் வந்து சேர்ந்தபோது, திருச்சி ஜில்லா சுதந்திரக் கட்சித் தலைவர் டாக்டர் காளமேகமும், மற்றும் பல பிரமுகர்களும் ராஜாஜியை வரவேற்கத் தயாராயிருந்தனர்.

மறுநாள் பதினைந்தாம் தேதி காலை திருச்சி ஜில்லா ஊழியர்களுக்கு ராஜாஜி சில அரிய உரைகளைக் கூறினார். அவை யாவும் இங்கு தொடுத்துத் தர இயலாமைக்கு இடமின்மைதான் காரணம். ஆயினும் ஒரே ஒரு கருத்து மட்டும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

ஒருவன் ஒரு தோப்பு வாங்கினான். அந்தத் தோப்பில் தென்னை, மா, பலா முதலிய மரங்கள் இருக்கின்றன என்றும், அவற்றைத் தனித் தனியே கவனித்து, பூச்சி அடிக்காமல் எரு போட்டு, தண்ணீர் விட்டுக் காப்பாற்ற வேண்டும் என்று தோப்புக்காரன் நினைப்பான். அப்போது ஒவ்வொரு மரமும் நல்ல பயன் அளிக்கும்.

ஆனால் விறகுக் கடைக்காரன் அவற்றையெல்லாம் வெட்டி வீழ்த்தினால் உடனே காசாக்கலாமே என்று நினைப்பான். மரங்களை வெட்டி வீழ்த்திய பிறகு சோலைவனமாக இருந்த தோப்பு பாலைவனமாக மாறிப் போகுமே என்ற கவலை விறகுக் கடைக்காரருக்கு இருப்பதில்லை. நமது சர்க்கார் விறகுக் கடைக் கொள்கையைத்தான் அனுஷ்டிக்கிறது.

தனி மனிதர்கள் சுதந்திரமாக நடத்தும் தொழிலையும் விவசாயத்தையும் இழந்து விட்டால் நாட்டில் பஞ்சமும் பட்டினியும்தான். பாரத நாடு பாலைவனமாகத்தான் போகும்.

இதை எதிர்ப்பதற்குத்தான் சுதந்திரக் கட்சி தோன்றியிருக்கிறது.

இந்த ஊழியர் கூட்டத்துக்குப் பழைய காங்கிரஸ் வாதியும் சீரிய பண்புள்ளவருமான திரு பொன்னம்பலக் கவுண்டர் தலைமை வகித்தார்.

அன்று மாலை மதுரம் ஸ்டேடியத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இங்கும் திறந்தவெளி மைதானம் முழுதும் மக்கள் நிரம்பி அமர்ந்திருந்தனர். நல்ல விளக்குகள் அமைத்து, கூட்டம் முழுதும் தெரியும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒருவர், "மதுரைக் கூட்டத்தைவிட இது பெரிதா, சிறியதா?" என்று கேட்டார். அதற்கு இன்னொருவர், "என்ன இருந்தாலும் மதுரைக் கூட்டத்தைப் போலாகுமா? அது, இதைவிடப் பெரிதுதான்!" என்றார்.

"மதுரை ஜனத்தொகையையும் திருச்சி ஜனத்தொகையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்! மதுரை ஜனத்தொகை திருச்சியைவிட அதிகம். அதற்குத் தக்கபடி அந்தக் கூட்டம்; திருச்சி ஜனத்தொகைக்குத் தக்கபடி இந்தக் கூட்டம்" என்றார் மற்றொருவர்.

திருச்சிப் பொதுக்கூட்டத்தில் ராஜாஜி உணவுக் கண்ட்ரோல்களைப் பற்றி எடுத்துச் சொன்னார். "உணவுக்கண்ட்ரோல்கள் காரணமாக ஒரு மந்திரி ராஜினாமா செய்தார். அவருக்குப் பின் வந்த உணவு மந்திரி, தாம் உணவுக் கண்ட்ரோல்களை எடுத்து விடப் போவதாகச் சொன்னார். ஆனால் மற்ற மந்திரிகளும் ஆலோசகர்களும் உணவுக் கண்ட்ரோல் இருந்தே தீர வேண்டும் என்று கூறிவிட்டார்கள். புது உணவு மந்திரியும், அதே பல்லவியைத் தாமும் பாட ஆரம்பித்து விட்டார். அதனால் அவரும் விரைவில் ராஜினாமா செய்தால் வியப்பில்லை" என்று ஜோஸ்யம் வேறு சொன்னார். அப்போது அந்தக் கூட்டத்தில் பலத்த கரகோஷம் எழுந்தது.

பொதுவாக, ராஜாஜி பொதுக் கூட்டங்களிலும் தனி சம்பாஷணைகளிலும் தாம் சாதித்த சாதனைகளையும் காரியங்களையும் பற்றிப் பேசமாட்டார். அதைவிட அருவருப்பான காரியம் அவருக்கு வேறு கிடையாது. ஆனால் இப்பொழுது ஒரு விஷயத்தை விளக்குவதற்காக வேண்டி அவையடக்கம் கூறிவிட்டுப் பேசினார்.

ராஜாஜி 1952-ம் ஆண்டு முதன் மந்திரியாக இருந்தபோது உணவுக் கண்ட்ரோல்

களையும் ரேஷனையும் எடுத்தனர். மக்கள் சந்தோஷப்பட்டனர். விலைவாசிகளும் குறைந்தன. அப்போது இருந்த சூழ்நிலை என்ன? நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து மழையின்மையால், பஞ்ச நிலைமையே நிலவியது. விளைவு போதாது. இருப்பினும் கண்ட்ரோலை எடுத்ததால் மக்கள் பஞ்சத்தினால் அழிந்து போகவில்லை; சந்தோஷப்பட்டனர்; வயிறார உண்டனர். அன்றைய நிலைமையைவிட இன்று விளைவு அதிகமாகி யிருக்கிறது. பின் ஏன் இந்தக் கண்ட்ரோல்கள்?

"சீன, ருஷ்ய கம்யூனிஸ்ட் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சர்க்கார் கொண்டு விட்டதனால் இம்முறைகளை அனுஷ்டிக்கிறார்கள். தங்களது உருப்படாத திட்டங்களுக்குப் பணம் சேகரிக்க, உணவுப் பொருள் வியாபாரத்தில் புகுந்தால்தான் முடியும் என்று கருதுகின்றனர். இவற்றின் காரணமாக மக்களைக் கஷ்டப்படுத்துகின்றனர்!"

இப்படி அரசாங்கத்தின் தவறான போக்குகளை அன்று ராஜாஜி சொல்லி வந்தபோது, அந்த மாபெரும் கூட்டம் அமைதியாக இருந்து ஒரு வார்த்தை விடாமல் கேட்டது.

போலீஸும், சர்க்காரும்

அன்றையப் பேச்சினிடையே ராஜாஜி, சர்க்கார் போலீஸைக் கட்சி நலனுக்கு உபயோகித்துக் கொள்வதைக் கண்டித்தார்.

பொதுக்கூட்டங்கள் ஏதாகிலும் நடந்தால், போலீஸ் இலாக்காவின் சுருக்கெழுத்தாளர் வந்து பிரசங்கங்களை எழுதிக் கொள்வதைப் பார்க்கிறோம் அல்லவா? இந்த முறை, தேசத் துரோகமான உணர்ச்சிகளை மூட்டக்கூடிய கூட்டங்கள் நடந்தால் அதை எழுதிக் கொள்வதற்காக ஏற்பட்டது. சர்க்கார் அத்தகைய நபர்களைப் பற்றி மேல்நடவடிக்கை எடுக்கவும், நாட்டில் அமைதியை நிலைநாட்ட ஏற்பாடு செய்து கொள்ளவும் ஏற்பட்டது இம்முறை. ஆனால் இப்போது என்ன நடக்கிறது?

சுதந்திரக் கட்சியினர் அராஜகக் காரியங்களில் ஈடுபடப் போவதில்லை. பரிபூரண ஜனநாயக முறையை அனுஷ்டிப்பவர்கள். ஆகவே, சுதந்திரக் கட்சிக் கூட்டங்கள் நாட்டின் அமைதியையோ, மக்களின் உயிர்களையோ பாதிக்காது. காங்கிரஸ் கட்சியைத்தான் பாதிக்கும். ஆகவே, காங்கிரஸ் கட்சியாளர்தான் சுருக்கெழுத்தாளர்களுக்கு ஏற்பாடு செய்து பிரசங்கங்களை எடுக்க வேண்டும். ஆளும் கட்சி காங்கிரஸ் கட்சியாக இருப்பதால், சர்க்கார் போலீஸ் இலாகா சுருக்கெழுத்தாளர்களைக் காங்கிரஸ் கட்சி நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வது முற்றிலும் தவறு; முறையாகாது என்று எச்சரித்தார் ராஜாஜி.

ராஜாஜி செய்த இந்த நியாயமான எச்சரிக்கை சர்க்கார் காதில் ஏறுமா என்று பார்க்க வேண்டும்.

சர்க்காருக்கு எல்லாக் கட்சி மக்களும் வரி செலுத்துகிறார்கள். அப்பணத்தை ஒரு கட்சி நலனுக்கு மட்டும் உபயோகப்படுத்திக் கொள்வது ஒழுங்கல்ல. இது மனச்சாட்சியைப் பொறுத்த விஷயம். காங்கிரஸுக்கு மனச்சாட்சி என்று ஒன்று இருப்பது நினைவிருக்கிறதோ என்னவோ!

பொதுக் கூட்டத்துக்கு முன் திருச்சி ஆஸ்பி ஹாலில் திருச்சி ரோட்டரி சங்கத்தினர் ராஜாஜியை வரவேற்று உபசரித்தனர்.

கோவையில்...

அன்றிரவு ரயில் ஏறி மறுநாள் பதினாறும் தேதி காலை கோவை வந்து சேர்ந்தோம். வழியில் திருப்பூரில் ஏராளமான நண்பர்கள் ஸ்டேஷனில் கூடி ராஜாஜிக்கும் ரங்கா அவர்களுக்கும் உற்சாகமான வரவேற்பு அளித்தார்கள். நமது கல்கி ஏஜெண்ட் திரு நாகராஜன், சமய சஞ்சீவியாகக் காப்பியும் இட்டிலியும் எடுத்துக் கொண்டு எங்கள் பெட்டியில் ஏறினார்.

அவர் வரவை ரயில் பெட்டியிலிருந்த இளவட்டங்கள் குதூகலமாக வரவேற்றனர்!

கோயமுத்தூர் ரயில் நிலையத்தில் மாபெரும் கூட்டம் ராஜாஜியையும் ஆசார்ய ரங்காவையும் வரவேற்கக் கூடியிருந்தது. அவர்களுக்குத் தலைவராக திரு வி. வி. சுப்பையா கவுண்டர் இருந்தார்.

அன்று காலை பத்து மணிக்குக் கோவை ஜில்லா ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் ராஜாஜியும் ரங்காவும் பேசியிருக்கட்டும். பேசி முடிந்தவுடன் ஒரு அன்பர் சுதந்திரக் கட்சிக்கு ரூ. 1001 நன்கொடை அளிப்பதாக ஒரு செக் வழங்கினார். அதைத் தொடர்ந்து மற்றொரு அன்பர் ரூ. 500 வழங்குவதாக வாக்களித்தார். பிறகு ஒருவர் நூறு ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினார். இப்படி ஐம்பது, இருபத்தைந்து, பத்து, ஒன்று என்று அந்தச் சிறிய கூட்டத்தில் சுதந்திரக் கட்சிக்கு நிதி உதவத் தொடங்கினார்கள். இக்கட்சி வளர வேண்டும் என்பதில் மக்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

அன்று மாலை சிதம்பரம் பூங்காவில் பொதுக் கூட்டம் ஏற்பாடாகி யிருந்தது. சுமார் ஒரு லட்சம் ஜனங்கள் திரண்டிருந்தனர். திரு வி. வி. சுப்பய்யா கவுண்டர் வரவேற்புரை நல்கினார். ஆசார்ய ரங்காவின் பேச்சை திரு எஸ். கிருஷ்ணஸ்வாமி பாரதி மொழிபெயர்த்தார்.

ராஜாஜி பேசத் தொடங்கியபோது, சுதந்திரக் கட்சி ஆரம்பமானதைப் பற்றிச் சர்க்காருக்கு இப்பொழுது கொஞ்சம் பயம் ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிட்டார். முதலில் இக்கட்சியை வரவேற்ற பிரதமர், பின்னர் இது ஒரு வேடிக்கை என்று ஏளனம் செய்தார். அப்புறம் நாட்டிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் ஆதரவு அளித்ததைக் கண்டு லஞ்சம் வாங்கிக் கொண்டு எழுதுவதாக அவர்கள் மீது அபவாதம் சுமத்தினார். இவையெல்லாம் நேருஜியின் உள்ளத்தில் எப்படிக் கலக்கம் உண்டாக்கி யிருக்கின்றன என்பதற்கு அடையாளங்கள். அதேபோல் பம்பாயிலும், அகமதாபாத்திலும் ஏராளமான மக்கள் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு தந்தனர் என்றவுடன் காங்கிரஸ் கட்சியினர் நடுங்கவே ஆரம்பித்திருக்கின்றனர்.

அகமதாபாத் மக்கள், மகா குஜராத் கோருகின்றனர். தங்களுக்குத் தனி மாகாணம் வேண்டும் என்கின்றனர். இம் மாகாணப் பிரச்னையில் ராஜாஜி தலையிட முடியாது என்று சொல்லிவிட்டுத்தான் அங்கு சென்றார். அப்படியும் ஒருவிதப் பிரசாரமுமின்றி லட்சக்கணக்கான மக்கள் அகமதாபாத்தில் ராஜாஜியின் பேச்சைக் கேட்கக் கூடினர் என்றவுடன் ஆளும் கட்சியினர் நிலை கலங்கிவிட்டனர். 'மகா குஜராத்தா? சம்யுக்த மகாராஷ்டிரமா? எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். காங்கிரஸுக்கு ஆதரவு தந்தால் போதும்.' என்கின்றனர்.

"'ஆம், புலி கிழமானாலும், புலி புலிதான்!' என்பதை இப்பொழுது காங்கிரஸ்காரர்கள் உணர்ந்திருக்கிறார்கள்' என்று பலத்த கரகோஷத்திடையே தம்மைக் குறித்து ராஜாஜி அவர்கள் சொன்னார்.

மறுநாள் பதினேழாம் தேதி காலை கோவை வர்த்தகர் சங்கத்திலும், பிறகு வக்கீல்கள் சங்கத்திலும் ரோட்டரி சங்கத்திலும் ராஜாஜி பேசினார்.

வக்கீல்கள் சங்கத்தில் பேசியபோது, தமக்கு சீனியர் வக்கீலாக இருந்த சேலம் விஜயராகவாச்சாரியார்தான் தம்மைப் பொதுக் காரியங்களில் அக்கறை கொள்ளும்படி செய்தவர் என்றும் மற்றும் ஒரு ரஸமான வாழ்க்கை விநோதத்தையும் குறிப்பிட்டார்.

"வாழ்க்கையில் அதிக வழக்குகளும் வேலையும் இருக்கும் வக்கீல்களே, பொதுஜனங்களுக்கு உபயோகமான வேலைகளில் ஈடுபடவும் நேரம் கண்டு வேலை செய்கின்றனர். ஆனால் வழக்குகள் அதிகம் வராத வக்கீல்கள் தங்களுக்கு வழக்குகள் வரவில்லையே என்ற ஏக்கத்தில் காலத்தைக் கழிக்கின்றனர். அந்த ஒழிவு நேரத்தைப் பொதுக் காரியங்களுக்கு ஏனோ செலவு செய்ய முடிவதில்லை. இதுவும் வாழ்க்கை விநோதங்களில் ஒன்று போலும்" என்றார்.

வக்கீல்களை நாட்டுக்குரிய நற்காரியங்களிலும், சுதந்திரக் கட்சியிலும் அக்கறை கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். கோவை ரோட்டரி சங்கத்தினரும் ராஜாஜியின் உரைகளைக் கூர்ந்து கேட்டனர்.

கல்வி ஏஜண்டுகள்

சுதந்திரக் கட்சிக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய வேலை அங்கத்தினர்களைச் சேர்ப்பது.

ஒவ்வொரு ஊரிலும் கமிட்டிகள் அமைத்து அவர்கள் மூலமாக அங்கத்தினர்களைச் சேர்ப்பதற்குச் சற்றுக் காலம் தாழலாம். அதனால் சுதந்திரக் கட்சியினிடம் அன்பும் ஆதரவும் உள்ள நமது ஏஜண்டுகளுக்கு இந்த வேலையை ஒப்படைத்தால் என்ன என்று கல்கி ஆசிரியர் திரு சதாசிவம் கருதினார். இதற்கு ராஜாஜியின் அனுமதியும் கிடைத்தது. ராஜாஜி தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்கிறார் என்று கேள்விப்பட்டவுடன், மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லா கல்கி ஏஜண்டுகள் மதுரையிலும்; திருச்சி, தஞ்சை ஜில்லா ஏஜண்டுகள் திருச்சியிலும்; சேலம், கோவை, நீலகிரி ஜில்லா கல்கி ஏஜண்டுகள் கோவையிலும் ராஜாஜியை நேரிடையாகச் சந்தித்து, அவரது ஆசி பெற்று இப்பணியைத் துவங்கவேண்டும் என்று ஆசிரியர் சதாசிவம் திட்டமிட்டார்.

ராஜாஜி தங்களுக்காகத் தனியாகப் பேசுகிறார் என்ற செய்தியைக் கேட்டு, ஒவ்வொரு ஊரிலும் சுமார் நூறு, நூற்றிருபது ஏஜண்டுகள் ராஜாஜியைச் சந்தித்து அவரது பொன்மொழிகளைக் கேட்டு ஆசிமொழிகளையும் பெற்று, உற்சாகமடைந்து அங்கத்தினர் புத்தகங்களுடன் தங்கள் தங்கள் ஊர்களுக்குச் சென்றிருக்கின்றனர்.

நமது ஏஜண்டுகள் காண்பித்த உற்சாகம் திரு சதாசிவம் அவர்களுக்கும் ராஜாஜிக்கும் பேர் உவகை அளித்தது. அவர்கள் எடுத்த பணியைச் சிறப்பாக முடிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அத்துடன், கல்கி வாசிக்கும் நேயர்கள், சுதந்திரக் கட்சிக் கொள்கைகளில் ஆதரவு காட்டும் நேயர்கள் அவரவர்கள் உள்ளூர் கல்கி ஏஜண்டுகளிடமோ அல்லது உள்ளூர் சுதந்திரக் கட்சி கமிட்டியினரிடமோ சென்று அங்கத்தினர்களாகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்த ஏஜண்டுகள் கூட்டம் மதுரையிலும் கோவையிலும் ராஜாஜி தங்கியிருந்த இடத்திலேயே நடைபெற்றது. திருச்சியில், பழம் காங்கிரஸ்காரரான பிரகதார் திரு துரை அய்யர் இல்லத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

டி. வி. எஸ்.

ராஜாஜி எப்பொழுது மதுரைக்குச் சென்றாலும் டி. வி. எஸ். காரியாலயத்தில்தான் இறங்குவார். அந்த வழக்கத்துக்குப் பங்கமின்றி இம்முறையும் டி. வி. எஸ். விருந்தினர் விடுதியில்தான் ராஜாஜி தங்கியிருந்தார். மதுரையில் மட்டுமல்ல; கோவையிலும் கூட டி. வி. எஸ்.ஸின் கிளைக் காரியாலயத்தில்தான் ராஜாஜி தங்கியிருந்தார். மதுரையில் இருந்த போதும் சரி, கோவையில் இருந்த போதும் சரி, ராஜாஜியைக் கவனிக்கும் பொறுப்பை ஸ்தாபன அதிபர்கள்டி .வி.எஸ். கோவைக் காரியாலய மானேஜர் திரு எம். ஆர். கண்ணன் அவர்களிடம்தான் ஒப்படைத்திருந்தார்கள். அவரும் அவருடைய சகாக்களும் கண்ணைக் கண் இமைகள் காப்பதுபோல் ராஜாஜியைப் பார்த்துக் கொண்டனர்.

இப்படி அன்புடனும் பரிவுடனும் உபசரிக்கும் அந்தப் பண்பை டி. வி. எஸ். ஸ்தாபனத்தாரிடம்தான் பார்க்க முடியும். அதிலும் சீரிய உள்ளம் படைத்த டி. வி. எஸ். ஸ்தாபனத்தார், அவர்களைப் போலவே சீரிய குணம் படைத்த உத்தியோகஸ்தர்களையும் பெற்றிருப்பது அவர்கள் முன்செய்த பாக்கியம் என்றுதான் சொல்ல வேணும்.

சென்னையில்......

"சுதந்திரக் கட்சி வாழ்க!"
"ராஜாஜி நீடூழி வாழ்க!"

என்ற கோஷம் கேட்டவுடன், ரயில் மீண்டும் மதுரைக்குப் போய் விட்டதோ

என்று ஒரு கணம் சந்தேகம் வந்துவிட்டது. சுமார் 300 பேர், டாக்டர் சந்தோஷம், திரு கே. எம். சுப்பிரமணியம் இவர்கள் தலைமையில் ஸ்டேஷனுக்கு வந்து ராஜாஜியை வரவேற்றனர். இவர்களைப் பார்த்த பிறகு தான் ரயில் சென்னைக்குத்தான் வந்திருக்கிறது என்ற உணர்ச்சி ஏற்பட்டது!

தமிழ் நாட்டைச் சேர, சோழ, பாண்டிய நாடு என்று பிரிப்பார்கள். சேர நாட்டின் பகுதியாகிய கொங்கு நாடுதான் இன்று தமிழ் நாட்டிலுள்ளது. இந்த மூன்று நாடுகளின் தலை நகரங்களாகிய திருச்சி, மதுரை, கோவைக்கு விஜயம் செய்து ராஜாஜி தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை முடித்திருக்கிறார். இதை நாடு முழுவதிலுமே ராஜாஜி சுற்றுப் பிரயாணம் செய்ததாகக் கொண்டு தாங்கள் வட நாட்டு மக்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர்களல்ல என்பதை ஏராளமான பேர்கள் சுதந்திரக் கட்சி அங்கத்தினர்களாகச் சேருவதின் மூலம் நிரூபிக்க வேண்டும்.

சுதந்திரக் கட்சி - கொள்கை விளக்கம் :

வெல்லப் பிள்ளையாருக்கு நிவேதனம்

அரசியல் பண்டிதர்கள் இன்றைய அரசாங்க முறையைப் "பொதுநல அரசியல்" என்று பெயரிட்டுச் சீராட்டுகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் உலகத்தில் எல்லா நாடுகளிலும் அரசர்களும், குடியரசுகளும் பாதுகாப்பையே தமது கடமையாகக் கருதி வந்தன. "குடிகள் தத்தம் அலுவல்களை இடையூறின்றிச் செய்ய வேண்டும். அவரவர் தர்மத்தை அவரவர் நடத்துவதற்கு வேண்டிய வசதிகளையும், சட்டங்களையும், பாதுகாப்பு ஆட்களையும் நியமித்து ஆட்சி செலுத்துவதே அரசாங்கத்தின் கடமை" என்பது அன்றைய முறை. இதைத்தான் ராமராஜ்யம் என்று வால்மீகியும் கூறியிருக்கிறார்.

ஆனால் இன்றைக்கு அரசாங்கம் குடிகளிடமிருந்து அதிக வரி வாங்கி அவர்களுக்கு நன்மை செய்வோம் என்று கூறுகிறது. ஆலைகளை நாங்களே நடத்துவோம் என்று முன்வந்திருக்கிறது. வியாபாரம் நாங்களே செய்வோம் என்கிறது. இவ்வாறு செய்தால் பொதுநலம் பெருகும் என்று சிலர் எண்ணுகின்றனர்.

ஆனால் இவ்விதம் அரசாங்கம் முதலாளியானால் குடிகள் அனைவரும் தொழிலாளியாக வேண்டியதுதான். அதுதான் இன்றைய ருஷ்யாவிலும் சைனாவிலும் அமுலுக்கு வந்திருக்கிறது. தனிமையில் ஒருவனும், வேண்டிய வழியில் வேலை செய்ய முடியாது. வயிற்றை வளர்க்க அரசாங்கம் அளிக்கும் வழியொன்றே இறுதியில் நிற்கும்.

ஏழைக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதை ஒருவரும் மறுக்க மாட்டார்கள். வருமான வரி முதலியவை அதிகரித்தால் அவைகளைப் பொது மக்களுக்காக உபயோகிக்கலாம். ஆலைகளை நடத்தியும், வியாபாரம் செய்தும் பெரும் வருமானமுள்ளவர்களிடமிருந்து ஓரளவு வரி வசூலித்து அதைப் பொதுமக்களுக்கு உபயோகிக்க வேண்டும் என்பது சரியான கொள்கை. ஆனால் நமது நாட்டில் 'நேரான வரி' வாங்க வசதியில்லை. ஆகவே ஏழைகளின் வாழ்க்கைக்கு வேண்டிய சர்க்கரை, உப்பு, துணி, எண்ணெய், நெருப்புப் பெட்டி, போக்குவரவு வண்டிகள் எல்லாவற்றின் மீதும் வரியைச் சுமத்தியிருக்கிறார்கள். ஆகவே இன்று பெரும் பகுதி வரி கொடுப்பவர்கள் ஏழைகளே. வரும்படியின் மீதின்றிப் பொருள்கள் மீது போடும் வரிக்கு ஆங்கிலத்தில் "மறை வரி" என்று பெயர். வரும்படி வரி தனவான் கொடுப்பான். பொருள் வரி ஏழை கொடுப்பான். முன்னேறிய நாடுகளில் வரும்படி வரி அதிகம்; பொருள்வரி குறைவு.

ஏழையிடம் பொருள் வரி வாங்கிப் பொதுநல அரசாங்கம் நடத்துவது வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி அவருக்கே நிவேதனம் செய்வது போல் ஆகும். ஆனால் அரசாங்கம் பொதுநலம் என்று சொல்லிச் சிப்பந்திகளைப் பெருக்கி வருகிறது. பொதுநல அரசியலுக்கு அடிப்படைச் சேனை நாளொரு மேனியாய்ப் பெருகிவரும் அதிகாரிகள் தான்! ஆகவே, நிவேதனம் செய்த வெல்லத்தையும் பூசாரி தின்று விடுகிறான். இதென்ன பொதுநலம்?

திருக்குறள் மகாநாடு

— கொழும்பு, செப்டம்பர் 19உ.

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள இடைக்காடு என்னுமிடத்தில் சென்ற வாரம் திருக்குறள் மகாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதில் கலந்துகொள்வதற்காக விசேஷ அழைப்பின்மீது இங்கு விஜயம் செய்துள்ள திருப்பெருந் திரு குன்றக்குடி அடிகள் மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசும்போது, புறத்தோற்றத்தைக் கண்டு மயங்கும் இன்றைய உலகம் அதையே நாகரிகமென்று மதிக்கிறதென்றும், அகத் தோற்றத்துடன் கூடிய பண்பாடே உண்மையான நாகரிகமென்றும் திருக்குறள் அறநெறியில் கண்ட நாகரிகம் இதுவேயென்றும் கூறினார். மேலும் பேசுகையில், மற்ற நூல்களுக்கும் திருக்குறளுக்கும் ஒரு முக்கியமான வேற்றுமையுண்டு. மனிதர்களை மனிதர்களாக, மனிதத் தன்மையுள்ளவர்களாக வாழச் செய்வதற்காகத் தோன்றியது திருக்குறள். சிலர் நினைத்த மாத்திரத்தில் கவிதைகளைப் பொழிந்து தள்ளி விடுகிறார்கள். அவற்றில் கவித்துவம் இருக்கலாம். ஆனால் ஜீவனைக் காண முடியாது. கவித்துவமும் ஜீவனும் ஒருங்கே காணப்படும் நூல் திருக்குறளேயாகும். இவ்வாறு அடிகளார் அருமையானதொரு இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். வேறு பல பிரபலஸ்தர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டு சொற்பெருக்காற்றினர்.

ஈழத்தில் அரும் பெரும் இலக்கியப் பணியாற்றித் தமிழ் பேசும் மக்களின் பெரும் மதிப்பைப் பெற்றுள்ள பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்களைக் கௌரவிப்பதற்காகப் பன்னாகத்தில் நடைபெற்ற அருள்நெறி விழாவில் அவருக்குப் பொன்னாடை அணிவித்துத் தமிழுக்கும் சைவத்துக்கும் அவர் ஆற்றியுள்ள அரும் தொண்டைப் பலர் பாராட்டிப் பேசினார்கள். குன்றக்குடி அடிகளார் இந்த வைபவத்தை நடத்தி வைத்தார்கள்.

தமிழர் நிலைக்குக் காரணம்

நீர்வேலியில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் முன்னாள் ஆடிட்டர் ஜெனரலும், பார்லிமெண்ட் அங்கத்தினருமான திரு கே. கனகரத்தினம் அவர்கள் பேசியபொழுது, இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலைமையைப் படம் பிடித்துக் காட்டுவதைப்போல் தெளிவாகக் குறிப்பிட்டார். இலங்கை சம்பந்தப்பட்டமட்டில் தமிழர்களுக்கு உண்மையில் தமிழர்கள்தான் விரோதிகளாக இருக்கிறார்களே தவிர, சிங்களவர்கள் அல்லவென்றும், தமிழர்களிடையில் தலையெடுத்த பதவி மோகமும் போட்டியும் ஒற்றுமைக் குறைவுமே அவர்களை அடக்கியாளச் சிங்களவர்களுக்குச் சந்தர்ப்பத்தை அளித்துவிட்டதென்றும் அவர் சொன்னார். தமிழ்மொழியை ஒதுக்கித் தனிச் சிங்களத்தைத் தமிழர்கள்மீது திணிக்கச் சிங்களவர்களுக்குத் துணிச்சல் ஏற்பட்டது தமிழர்களின் ஒற்றுமைக் குறைவினால்தான். தமிழர்கள் ஒற்றுமையுடனும் கட்டுப்பாடுடனும் இருக்கும் பட்சத்தில் அவர்களை எதிர்க்கவும் அவமதிக்கவும் சிங்களவர்களுக்கு ஒருபோதும் துணிச்சல் பிறந்திருக்க முடியாது. சில ஆண்டுகளுக்கு முன்னும் தமிழ்ச் சமூகம் ஒரு கொடியின் கீழ் ஒன்றுபட்ட சமுதாயமாக விளங்கியபொழுது அவர்களுக்குப் பாதகமான சட்டங்கள் இயற்றுவதைப் பற்றி அரசாங்கம் மனத்தினால்கூட நினைக்கவில்லை. தமிழர்களைப் பகைத்துக்கொள்ள அதற்குத் துணிச்சலும் இல்லை. ஆனால் துரதிர்ஷ்டம், தமிழர்களிடையில் பதவிப் போட்டி காரணமாகப் பிரிவினைகள் ஏற்பட்டன. பல கூறுகளாகத் தமிழ்ச் சமுதாயம் பிளவுபட்டுப் போயிற்று. ஊர் இரண்டு பட்டது. கூத்தாடிகளுக்கு எளிதாகிவிட்டது. எனவே இலங்கைத் தமிழர்களின் இன்றையத் தாழ்ச்சிக்கு உண்மையில் அவர்கள்தான் மூலகாரணமே தவிர வேறு யாருமில்லை. இன்றைக்கும் தமிழர்களின் விமோசனம் அவர்களது ஒற்றுமை ஒன்றின் மூலமாகவே வரமுடியும். இவ்வாறு உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறி உணர்ச்சியுடன் பேசினார் திரு கனகரத்தினம். அவரது இச் சமயசந்தர்ப்பமான சொற்பொழிவைப் பிரபல கொழும்பு தினசரியான வீரகேசரி பாராட்டி ஒரு தலையங்கமும் தீட்டியிருந்தது.

மாபெரும் இ. தொ. கா. மகாநாடு

இலங்கையின் மிகப் பெரிய தொழிலாளர் ஸ்தாபனமாகிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வருடாந்திர மகாநாடு இவ்வாரம் நாவலப்பிட்டி என்னும் இடத்தில் மிகுந்த உற்சாகத்துடன் ஆரம்பமாகி யிருக்

உச்சிஷ்ட கணபதி ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம்

இந்நூல் நாகர அட்சரத்தில் மட்டுமே அச்சிட்டிருப்பதாலும், மந்திர உபதேசம் பெற்று பூஜை ஜபம் செய்வோர்களுக்கே பெரிதும் பயன்படக் கூடியதாலும் ஏனையோர்களுக்கு இதனால் உபயோகமிராது. 'கல்கி'யில் வெளிவந்த அறிக்கையைக் கண்டு இதுவரையில் புத்தகம் வேண்டுமென்று தமிழன்பர்களிடமிருந்து சுமார் 2000 கடிதங்கள் வந்திருக்கின்றன. கையிலுள்ள பிரதிகள் அனைத்தும் விநியோகமாகிவிட்டபடியால் பலருக்கு அனுப்ப இயலவில்லை. மேலே சொல்லியபடி உண்மையிலேயே யாருக்கு இதனால் பயன் ஏற்படுமோ அவர்கள் மட்டுமே எழுதினால் மறு பதிப்புத் தயாரானதும் அனுப்பி வைக்கப்படும் என்று டாக்டர் ஏ. ஸ்ரீனிவாஸன் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

கிறது. ஐந்து தினங்கள் வரையில் தொடர்ந்து நடத்தத் திட்டமிட்டிருக்கும் இம் மகாநாட்டில் சுமார் முப்பதினாயிரத்துக்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் பங்குகொள்ளுவார்கள் என்று எதிர்பார்த்து அதற்காகப் பிரும்மாண்ட பந்தல் போட்டிருக்கிறார்கள். தொழிலாளரின் மகத்தான சக்தியை எடுத்துக் காட்டுவதற்காக மகாநாட்டுப் பந்தலுக்கு '' சக்தி நகர் '' என்று நாமகரணம் செய்திருக்கின்றனர். மகாநாட்டுப் பந்தல் அமைப்பதற்கு மட்டும் சுமார் பதினையாயிரம் ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். இந்திய சிற்ப சாஸ்திர பாணியையும் கண்டியப் பாணியையும் தழுவி அமைக்கப்பட்டிருக்கும் பந்தலின் முகப்பு தொழிலாளர்களை 'வா வா' என்று அன்புடன் அழைப்பதைப் போல் கவர்ச்சிகரமாக அமைந்திருக்கிறது. மதுரை மீனாட்சியம்மன் கோவிலை நினைவுபடுத்தும் நூறு அடி உயரமுள்ள கோபுரமும் அதன் இருபுறமும் துவாரபாலகர்களைப் போல் தோளில் முள்ளுக் குத்திக் கொண்டிருக்கும் ஆண் தொழிலாளி ஒரு புறமும் தேயிலைக் கொழுந்து மூட்டையுடன் பெண் தொழிலாளி மற்றொரு புறமுமாகத் தோன்றுவது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கிறது. தலைவர் ஸ்ரீ எஸ். தொண்டமான் காங்கிரஸ் தலைமைப் பதவியை திரு எஸ். சோமசுந்தரத்திடம் ஒப்படைத்தது இவ்வருட முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

தந்தைக்கேற்ற தனயன்

அறிவும் ஆற்றலும், புகழும் ஒருங்கே படைத்த ஒரு தந்தைக்கு அவருக்குச் சமானமான சாமர்த்தியமுள்ள ஒரு தனயன் வாய்ப்பது அரிது. வாத்தியார் பிள்ளையைப் பற்றியும், வைத்தியர் பிள்ளையைப் பற்றியும் பழமொழியே இருக்கிறது. இதனாலேதான் வள்ளுவரும் தனயனுடைய சிறப்பைப் பற்றிப் பேசும்போது, 'இவன் தந்தை என் நோற்றான் கொல்' என்று தந்தையின் பாக்கியத்தை உயர்வாகப் பாராட்டுகிறார்.


நமது அருமைப் பாரத நாட்டில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு-1859ம் ஆண்டு ஆகஸ்டு 27-ந்தேதி பிறந்து, இந்தியத் தொழில் உலகத்தில் தலை சிறந்து விளங்கியவர் ஸர் டோராப் டாடா. பெயரிலிருந்தே தெரிகிறதல்லவா இவர் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று. நீங்கள் நினைப்பது சரிதான். புகழ்பெற்ற ஜாம்ஷெட்ஜி டாடாவின் புதல்வர்தான் ஸர்டோராப். சிங்கத்தின் குட்டி சிங்கமாகத்தானே இருக்கும். அப்படித்தான் டாடாவின் புதல்வர் டாடாவாக விளங்கினார்.

தந்தை ஜாம்ஷெட்ஜி கண்ட கனவுகளையெல்லாம் தனயன் டோராப் நனவாக்கினார். இதற்கு முக்கியமாக மூன்று அம்சங்களை மட்டும் குறிப்பிட்டால் போதும். முதலாவது ஒரு ஆராய்ச்சி ஸ்தாபனம் நிறுவ வேண்டும் என்று தந்தை ஆசை கொண்டார். அதற்காக ஆரம்பகால முயற்சிகளையும் எடுத்துக் கொண்டார். அந்தக் காலத்தில் இந்தியாவின் பொருளாதாரத் தொழில் முன்னேற்றத்துக்கு இம்மாதிரி ஒரு ஆராய்ச்சி ஸ்தாபனம் மிகவும் அவசியம் என்பதை உணர்ந்தார். ஆனால் அதைச் சீரிய முறையில் உருவாக்கி அரசாங்கத்தின் அங்கீகாரத்தையும் பெற்று 30 லக்ஷம் ரூபாய் சொந்த நிதியையும் தந்து உன்னதமான நிலைமைக்கு உயர்த்திவிட்டவர் ஸர் டோராப் டாடா. பெங்களூரிலுள்ள இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் ஸர் டோராப்பின் சிறப்புக்குச் சான்று.

அடுத்தது இந்திய எஃகுத் தொழிற்சாலை அமைப்பது. ஆங்கிலேயர்கள் இம்முயற்சியைப் பற்றிக் கேலிக்கூத்தாக மதித்த அந்தக் காலத்தில் இதை ஆரம்பித்து வைத்ததுமன்றி, இதற்கு மூலதனமாக மூன்றே வாரங்களில் சுமார் இரண்டு கோடி ரூபாய் திரட்டிய பெருமை ஸர் டோராப் டாடாவுக்கு உரியது. இப்போது நிதி திரட்டுவது சுலபம். ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலைமை முற்றிலும் வேறு. அப்போது இது மகத்தானதொரு சாதனை.

இது போன்ற மற்றொரு மகத்தான செயல் மேற்கு மலைத் தொடரிலிருந்து நீர் மின்சார உற்பத்தி நிலையம் அமைத்துப் பம்பாய் மாநகரை ஒளி மயமாக்கியது. நகரை மட்டுமா அவர் பிரகாசப் படுத்தினார்? தம்முடைய பெருமையையும் அன்றோ மின்சார விளக்கு எரியும் ஒவ்வொரு வீட்டிலும் பிரகாசப்படுத்திக் கொண்டு விட்டார்.

பாரத நாட்டுக்கு ஸர் டோராப் டாடாவைப் போன்றவர்கள் பலர் வேண்டும். அவருடைய பரம்பரை செழிப்புற்று வளரட்டும். இந்தியாவில் தொழில் வளம் பெருகட்டும். அவர் பிறந்த நூற்றாண்டு வருஷமாகிய இந்த ஆண்டில் ஸர் டோராப்பின் சேவையைப் பற்றி நினைவு படுத்திக் கொண்டு தொழில் வளத்தைப் பெருக்குவோமாக.



ஸர் டோராப் டாடா

வேங்கையின் மைந்தன்



அகிலன்

அத்தியாயம் 25

வழித் துணைவன்?



இளைஞன் வேடத்திலிருந்த ரோகிணியையும் அவளுடைய பணிப் பெண்ணின் தகப்பன் கந்துலனையும் சுமந்துகொண்டு, கிழக்கே காட்டுக்குள் குறுகலான பாதையில் இறங்கியது ஒரு குதிரை. காட்டுக்குள் செல்லச் செல்லப் பாதை விசாலமாகிக் கொண்டு வந்தது. நகரத்தைக் கடக்கும் வரையிலும் குதிரை மேலிருந்தவர்கள் இருவரும் மௌனமாகவே சென்றனர். அச்சமும் தவிப்பும் குடிகொண்டிருந்தன அவர்கள் மனத்தில்.

அடர்ந்த மரங்களுக்குப் பின்னால், ரோகணத்தின் தலைநகரம் மறைந்த பிறகே அவர்களால் தாராளமாக மூச்சுவிட முடிந்தது.

அப்போது நடுப்பகல். வானத்தின் உச்சியிலிருந்து கொண்டு சூரியன் நெருப்பு மழை பொழிந்து கொண்டிருந்தான். என்றாலும் அந்த உக்கிரத்தைத் தாங்கிக் கொண்டு, பிரயாணிகளுக்குக் குடை பிடித்து நிழல் உதிர்த்தன சாலையின் அடர்ந்த மரங்கள். தெற்கத்திக் காற்று, இலைகள் தாங்கிய கிளைகளை அசைவித்து அவர்களுக்குச் சாமரம் வீசச் செய்தது.

ஒரு திருப்பு முனையில் குதிரையை நிறுத்திவிட்டுக் கீழே குதித்தான் கந்துலன். ரோகிணியும் இறங்கினாள். கந்துலன் தனியாக வலது கைப்புறமிருந்த புதருக்குள் நுழைந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் மிடுக்கான தோற்றமுடைய மற்றொரு இளங் குதிரையுடன் வெளியே வந்தான்.

"இளவரசி! கிழவனுக்கு அந்தக் கிழட்டுக் குதிரையைக் கொடுத்துவிட்டு நீங்கள் இதில் ஏறிக்கொள்ளுங்கள். நகரத்துக்குள் இந்தக் குதிரையைக் கொண்டு வந்திருந்தால், இது நம்முடைய அரண்மனைக் குதிரை என்று பகைவர்கள் சந்தேகப்பட்டிருப்பார்கள். நாமோ நெடுவழி போக வேண்டும். ஒரு குதிரை நமக்குப் போதாது."

வெயிலும் நிழலும் கலந்து உறவாடிய அந்த இடத்தில் சற்று நேரம் நிற்க வேண்டும் போல் தோன்றியது ரோகிணிக்கு. இலைகளின் வழியே வானத்தைப் பார்த்தவாறே, "உச்சிவேளை பார்த்துப் புறப்படச் சொன்னாயே, வேறு நேரம் கிடைக்கவில்லையா, உனக்கு?" என்று கேட்டாள்.



"இளவரசி! இந்தச் சோழநாட்டுக்காரர்களின் போக்கே புது விதமாக இருக்கிறது. பட்டப் பகலில் அவர்கள்மேல் போய் முட்டிக்கொண்டால் கூட ஏனென்று கேட்க மாட்டார்கள். இரவிலோ நாம் மூச்சு விட்டால் கூடக் கத்தியை உருவிக்கொண்டு வந்து விடுவார்கள். பகலில் விழித்துக் கொண்டே தூங்குகிறார்கள்; இரவில் தூங்கியபடியே விழித்திருக்கிறார்கள். ஆந்தையாய்ப்பிறக்கவேண்டியவர்கள்!"

"நன்றாய்ச் சொன்னாய் கந்துலா!" என்று நகைத்தாள் ரோகிணி. அவளுடைய நினைவு வேறு எங்கோ போய் விட்டது. "கந்துலா! இப்படித்தான் ஒரு நாள் இரவு நான் தப்பி வரப் பார்த்து ஒரு முரட்டு வீரனிடம் அகப்பட்டுக்கொண்டேன். என்னைப் பிடித்தவன் சாமான்ய வீரனல்ல. கொடும்பாளூர் இளவரசன் என்ற கொடியவனைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாயே! யார் செய்த புண்ணியமோ கொல்லாமல் விட்டுவிட்டான்."

பற்களை நறநறவென்று கடித்தான் கந்துலன். வெறுப்பும் கசப்பும் கலந்து படர்ந்தன அவன் முகத்தில்.

"என்ன கந்துலா?"

"அவனுடைய தலையைக் கொய்து கொண்டு போய் மந்திரியாரின் காலடியில் வைக்க வேண்டுமென்று நம்முடைய வீரர்கள் பலர் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றிலிருந்து நானும் அவர்களில் ஒருவனாகி விட்டேன். அவன் முகத்தை நான் அருகிலிருந்து பார்த்ததில்லை. உங்களுக்குத் தெரிந்தால் அடையாளம் சொல்லுங்கள் இளவரசி!"

இதைக் கேட்டவுடன் ரோகிணியின் முகம் சட்டென்று வெளுத்தது. முகமாற்றத்தைக் கந்துலன் தெரிந்து கொள்ளக் கூடாதென்பதற்காக வேறு புறம் அதைத் திருப்பிக்கொண்டாள். தன்னுடைய ஒருதுளி ரத்தத்துக்காக இளங்கோ பல துளிக் கண்ணீர் உதிர்த்த காட்சியை அவளால் அச்சமயம் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

"கந்துலா! அவன் முகம் எப்படி இருக்குமென்று எனக்குத் தெரியாது. அமாவாசை இரவில் அவனைச் சில விநாடிகள் தான்பார்த்தேன். அதனால் பகலில் பார்த்து அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை."

பிறகு அவள் குதிரை மீது ஏறிக் கொள்ளாமல், கந்துலன் கொண்டு வந்த இளம் புரவியின் முகத்தைத் தடவிக் கொடுத்தபடியே நின்றாள். அதன் வலிவு, வனப்பு, மிடுக்கு, கம்பீரம் எல்லாமே அவளுக்கு இளங்கோவைக் கண்முன்னே கொண்டு வந்தன. 'திரும்பவும் அரண்மனைக்குப் போகமுடியுமோ, முடியாதோ? அவனைச் சந்திக்க முடியுமோ, முடியாதோ?' — ரோகிணி நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"யோசிக்காமல் கிளம்புங்கள், இளவரசி!" என்று தன் குதிரையின் மீது ஏறி அமர்ந்தான் கந்துலன். "இருட்டிய பின்னரும் நீங்கள் அரண்மனைக்குத் திரும்பா விட்டால் அவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். அவர்கள் தேடத் தொடங்குவதற்குள் நாம் நாற்சந்திச் சாவடியைக் கடந்துவிட வேண்டும்."

"இப்போது யாரும் கிளம்பியிருக்க மாட்டார்களோ?" என்று பயந்து கொண்டே கேட்டாள் ரோகிணி.

"பகலில் கண் தெரியாத தூங்கு மூஞ்சிகள்! அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம், புறப்படுங்கள்."



இரு குதிரைகளும் அவ்விடத்தை விட்டுப் புதிய சுறுசுறுப்புடன் குளம்புகள் ஒலிக்க வேகமாகப் புறப்பட்டன.

அதுவரையில், நடுநிசி ஆந்தையைப் போல் கண்களை அகலத் திறந்துகொண்டு அவர்களைத் தொலைவிலிருந்து கவனித்து வந்த இளங்கோ, அதன் பிறகு மெல்லக் கண்ணிமைத்தான். கூப்பிடு தூரத்தில் குன்றின் இடைவெளியில் நின்ற இளங்கோவுக்கு அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்பது விளங்கவில்லை. ஒரு குதிரை இரண்டு குதிரைகளாக மாறியது அவனுக்கு விந்தையாகத் தோன்றியது. குன்றின் மறுபுறம் விட்டு வந்த தன் குதிரையை எட்டிப் பார்த்துக் கொண்டான்.

விரைந்து சென்று அவர்களை வளைத்துக் கொள்வதென்றால் அரை நாழிகை நேரம்கூட ஆகாது. அவர்களைப் பிடிப்பதற்காக அவன் அங்கு வரவில்லை. அவர்கள் எங்கு போகிறார்கள் என்பது அவனுக்குத் தெரிய வேண்டும். யாரைச் சந்திக்கிறார்கள் என்பதை அவன் காண வேண்டும்.

கிளை வழிகள் இல்லாத நேர் பாதை அது. நாற்சந்திச்சாவடியை மையமாக வைத்துத்தான் பிறகு பாதைகள் பிரிந்து செல்லுகின்றன. சாவடிக்குப் போய்ச் சேருவதற்குள் நன்றாக இருட்டிவிடும்.

அந்த வழியில் அவர்களைப் பின்பற்றிச் சென்றால், அவர்கள் சந்தேகத்திலிருந்து தப்ப முடியாதென்பதற்காக, ஒற்றன் குறிப்பிட்ட சுற்று வழியை நோக்கித் தன் குதிரையுடன் திரும்பினான் இளங்கோ. காட்டு வழியைப் போல் இரு மடங்கு தூரம் கடந்தாக வேண்டுமாம்.—இளங்கோவின் குதிரை சிறகு பெற்ற பறவையைப் போல் நாலு கால் பாய்ச்சலில் பறந்தது. மூன்று குதிரைகள் வெவ்வேறான இரண்டு பாதைகளில் ஒரே இடத்தை நோக்கிச் சென்றன.

கந்துலனுக்கு ஐம்பது வயதுக்கு மேலாகிறது. மகிந்தரின் உப்பைத்தின்று வளர்ந்தவன். அவரது கஷ்ட நஷ்டங்களில் பங்கு கொண்டவன். ரோகிணியைக் குழந்தைப் பருவத்திலிருந்து தூக்கி வளர்த்தவன். அவனுடைய மகளையே தனக்குப் பணிப்பெண்ணாக வைத்துக் கொண்டிருந்தாள் ரோகிணி.

போர் நடந்த நாட்களில் கந்துலனை அரண்மனைக்கு வெளியே அனுப்பி விட்டார் அமைச்சர் கீர்த்தி. ஆனால் ரோகிணி தன் தோழியை அனுப்ப மறுத்து விட்டாள். மகிந்தர் இருக்குமிடத்தை ஒரு வாரம் வரையிலும் கந்துலனால் கூடக் கண்டு பிடிக்க முடியவில்லை. கடைசியில் இடம் தெரிந்தது. ஆனால் காவலர்களை மீறி மன்னரைச் சந்திக்க முடியவில்லை. திரும்பிவிட்டான்.

இப்போது ரோகிணியுடன் செல்வதால் மன்னரை அணுகிப் பேச முடியுமென்று அவனுக்கு ஒரு நம்பிக்கை. ஆனால் அந்த நம்பிக்கையும் உறுதியற்றதாக இருந்தது. ரோகிணியை அவன் அழைத்துக் கொண்டு வருவதை அமைச்சர் கீர்த்தி விரும்புவாரோ, மாட்டாரோ? கீர்த்தி மன்னருடன் தங்கியிருக்கிறாரோ அல்லது வேறெங்கேயேனும் சென்று விட்டாரோ!

சூரியன் மேற்கில் நழுவி வெம்மையைக் குறைக்கத் தொடங்கினான். மர நிழல்கள் கிழக்கே நீண்டன. வழி நெடுகிலும் வழிந்தோடிக் கொண்டிருந்த மஞ்சட் பொன்னொளி சிறிது சிறிதாக இருட் கவசத்துக்குள் மறைந்து சுருங்கத் தொடங்கியது..

ரோகிணியும் கந்துலனும் நிழலுருவங்களானார்கள். பின்னர் அவர்களையும் இருள் விழுங்கி விட்டது. பொழுது சாய்ந்து இரண்டு நாழிகையான பிறகு நாற்சந்திச் சாவடி, தனது பாழடைந்த சுவர்களுடன் அவர்களை அச்சத்தோடு வரவேற்றது. வளர்பிறை நிலவு அப்போது மேலே மிதந்து கொண்டிருந்ததால், இருள் அவ்வளவு பயங்கரமானதாக இல்லை.

சாவடிக்குச் சற்றுத் தொலைவிலேயே இருவரும் குதிரையைவிட்டிறங்கினார்கள். சந்தடியில்லாமல் குதிரைகளைக்கொண்டு போய் எங்கோ ஒரு மறைவிடத்தில் கட்டி, கொள் வைத்து விட்டு வந்தான் கந்துலன். சாவடிக்கு அப்பால் தெரிந்த மூன்று பாதைகளில் எந்த வழியாய்ப் போக வேண்டுமென்று அவனிடம் மெதுவாகக் கேட்டாள் ரோகிணி.

"முதலில் சாவடிக்குப் போய் மூட்டையை அவிழ்த்துப் பசியாற்றிக் கொள்வோம்" என்றான் கந்துலன். "இந்தப் பாதைகளும் சரி, நம்முடைய குதிரைகளும் சரி, இனி நமக்கு உதவப் போவதில்லை. கல்லையும் முள்ளையும் பாராமல் இனிமேல் நாம் குறுக்குவழியில் நாலு நாழிகைக்குமேல் நடந்து போகவேண்டும். நிலவு இருப்பது ஒரு வகையில் நமக்கு உதவி; மற்றொரு வகையில் பெரும் தொல்லை."

அவர்களுடைய ரகசியப் பேச்சை மரத்தின் மறைவிலிருந்து ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த ஓர் உருவம் மெல்லச் சாவடியை நோக்கி நழுவியது. அவர்கள் வருவதற்கு முன்பாகவே சாவடியின் முகப்புத் திண்ணைக்கு வந்து நீட்டி


ஒவ்வொரு
வீட்டிலும்
தினந்தோறும்
கேச
கருமைக்காகவோ
கேச அலங்காரத்
திற்காகவோ
உபயோகிப்பவர்
ஒருவராவது
உண்டு
லோமா
Loma
ஏகபோக ஏஜெண்டுகள்;
எம். எம். கம்பாட்வாலா
அகமதாபாத்—1
ஏஜெண்டுகள்:
வி. நரோத்தம் & கோ.,
பம்பாய்—2

MPS

நிமிர்ந்து படுத்தது. இடது கரத்தை மடித்துத் தலைக்கு வைத்துக் கொண்டு பொய்த் தூக்கம் தூங்க ஆரம்பித்தது.

நிலவொளி திண்ணையில் விழுந்து கொண்டிருந்ததால் அந்த உருவத்தின் முகம் மங்கலாகத் தெரிந்தது. கருகருவென்று வளர்ந்த சுருண்ட தாடியும் மீசையுமாக அவன் காணப்பட்டான். நெற்றியில் சந்தனப் பொட்டும் குங்குமப் பொட்டும் கலந்திருந்தன. நீண்ட மேலங்கி அணிந்து கொண்டிருந்தான்.

ரோகிணி அவன் படுத்துக் கிடப்பதைக் கண்டவுடன் பதறிப் போய்க் கந்துலனின்கரத்தைப் பற்றிக்கொண்டாள். கந்துலனுக்கும் ஒரு கணம் ஒன்றுமே தோன்றவில்லை. மௌனமாகத் தனக்குப் பின்னால் வரும்படி அவளுக்கு எச்சரிக்கை செய்துவிட்டு, அடிமேல் அடி எடுத்து வைத்து அந்த உருவத்தின் அருகில் சென்றான். உடைவாளை உறுதியாக ஒரு கரம் பற்றிக் கொண்டது.

உறங்குபவனின் முகத்தையும் மேலங்கிக்குக் கீழே தெரிந்த உள்ளுடையையும் உற்றுப் பார்த்தான் கந்துலன். படுத்துக் கிடந்தவனின் பரந்த மார்பை மறைத்திருந்த உள்ளங்கி மேலங்கியின் வாயிலாகத் தெரிந்தது.

பயம் நீங்கப் பெற்றவனைப் போல், மெதுவாக ரோகிணியின் பக்கம் திரும்பிப் புன்னகை பூத்தான் கந்துலன். அந்த இடத்தை விட்டுச் சற்று விலகிய பின், "அஞ்சவேண்டியதில்லை, இளவரசி! இவன் ரோகணத்து வீரன். மகிந்தனின் மெய்க் காவல் படையைச் சேர்ந்த பாண்டி நாட்டுத் தமிழன்" என்றான். "முட்டாள்! மேலங்கிக்கு வெளியே உடை தெரியும்படி வைத்துக்கொண்டு, பொழுது போவதற்குமுன்பே உறங்கத் தொடங்கி விட்டான்."

அவன் அங்கு இருப்பதைப் பற்றிக் கவலையுறாதவர்களைப் போல் தண்ணீரையெடுத்து வைத்துக்கொண்டு மூட்டையை அவிழ்த்துச் சாப்பிட உட்கார்ந்தார்கள் இருவரும். உணவின் இனிய மணம் பொய்த் தூக்கம் தூங்கியவனின் நாவில் நீர் சுரக்க வைத்தது. நெடுந்தொலைப் பிரயாணம் செய்து வந்தவன் அவன். பெருங்குடல் சிறு குடலை விழுங்கக் காத்திருந்த இந்த வேளையில் நெய்ச் சோற்றின் வாசனை அவனைச் சும்மா இருக்க விடவில்லை.

சிறிய ஓசை கேட்டதைச் சாக்காக வைத்துக்கொண்டு துள்ளியெழுந்தான்.

"யாரது அங்கே?" என்று கரகரத்த குரலில் கேட்டுக்கொண்டே அவர்கள் மீது பாயப் போனான். "வாழ்க, மகிந்தர்! வாழ்க ரோகணம்! ஒழிக, சோழ நாட்டுப் பதர்கள்!"

கந்துலன் சிரித்துக்கொண்டே, "பொறு மகனே, பொறு! நாங்களும் ரோகணத்தைச் சேர்ந்தவர்கள்தான்" என்றான். "நன்றாக உறங்கி எழுந்து விட்டாயா?" என்று பரிகசித்தான்.

"ரோகணத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் யார் நீங்கள்? இந்த நேரத்தில் உங்களுக்கு இங்கென்ன வேலை?" —இப்படிக் கேட்டுக் கொண்டே அவிழ்க்கப்பட்டிருந்த உணவு மூட்டையை உற்றுக் கவனித்தன அவன் கண்கள். இரண்டு நாட்களுக்குச் சேர்த்துக் கட்டிக்கொண்டு வந்திருப்பார்கள்போல் தோன்றியது.

அடுத்தாற்போல் ரோகிணியைப் பார்த்து, "இந்த இளைஞனை இதற்குமுன் எங்கோ பார்த்த நினைவாக இருக்கிறதே!" என்று அலட்சியமாகக் குறிப்பிட்டுவிட்டு, "எங்கே,நீங்கள் யாரென்று சொல்லிவிட்டு, உணவில் கொஞ்சம் இப்படி எடுத்து வையுங்கள்!" என்று சம்மணம் போட்டுக்கொண்டு அமர்ந்தான்.

"பாவம்! உன்னுடைய வீரமெல்லாம் இந்தச் சோற்றுக்குத்தானா? முதலில் நன்றாகச் சாப்பிடு; பிறகு பேசுவோம்" என்று, இலைச் சருகில் உணவை எடுத்து வைத்தான் கந்துலன். குவளைத் தண்ணீரை மத்தியில் நகர்த்தி வைத்தான்.

ரோகிணி குனிந்த தலை நிமிரவே இல்லை. அவளுடைய கைகால்கள் வெடவெடவென்று நடுங்கின. வாய்க்குள் அவள் எடுத்து வைக்கப் போன சோறு பல முறை கீழே நழுவி விழுந்தது.

அவளை ஓரக்கண்களால் கவனித்த பாண்டித் தமிழன், "தம்பி! உனக்குச் சாப்பிடவே பழக்கமில்லையோ? நான் வேண்டுமானால் ஊட்டி விடட்டுமா?" என்று கேட்டு நகைத்தான்.

கந்துலனுக்குக் கோபம் வந்துவிட்டது. "உன்நாவை அடக்குகிறாயா, இல்லையா! எனக்குத்தான் வயதாகிறதே தவிர என் வாளுக்கு வயதாகவில்லை! உறங்கும்போதே உன்னை எமலோகத்துக்கு அனுப்பியிருந்தால் நீ இப்படி வாய்த் துடுக்காய்ப் பேசியிருக்க மாட்டாய்."

"அதனால் யாருக்கு நஷ்டம்? தனி வழியே வரும் நம்மவர்களை ஆபத்தில்லாமல் கொண்டு சேர்க்க வேண்டுமென்பது அமைச்சர் கீர்த்தியின் கட்டளை. அவருடைய மைத்துனர் சுந்தர பாண்டியரின் படையில் செல்வாக்குடன் இருந்தவன் நான். இங்கே ரோகணத்துக்கு நான் வந்த வேளை மிகவும் பொல்லாத வேளை, ஐயா! பகைவர்களும் தாக்குகிறார்கள்; நண்பர்களும் பயமுறுத்துகிறார்கள்."

இதைக்கேட்ட கந்துலனின் கண்களும் ரோகிணியின் கண்களும் சந்தித்துத் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டன.

இருபத்தாறும் அத்தியாயம்

மரண தண்டனை

உணவு முடிந்த பிறகு ரோகிணியும் கந்துலனும் தனியே விலகிச் சென்று, அந்தப் புதிய மனிதனைப் பற்றி அந்த ரங்கமாகச் சிறிது நேரம் பேசிக்கொண்டார்கள். தாங்கள் யார் என்பதை இன்னும் அவனிடம் வெளியிடவில்லை. அவனும் அவர்களை அந்த விஷயத்தில் வற்புறுத்தாமல் விட்டு விட்டான்.

ஆனால் மற்றொரு விஷயத்தில் அவன் பிடிவாதமாக இருந்தான். இரவில் அவர்கள் தனிவழி செல்வது அவனுக்குப் பிடிக்கவில்லையாம். அதை அவன் அனுமதிக்க மாட்டானாம்! அங்கேயே தங்கி விட்டுப் பொழுது புலர்ந்தவுடன் போகலாம் என்றான். அப்படி இல்லாமல் உடனே கிளம்ப வேண்டுமென்றால், தன் துணை அவர்களுக்கு மிகவும் அவசியமென்று கட்டாயப்படுத்தினான். அமைச்சரின் ஆணைப்படி அவன் தன் கடமையை நிறைவேற்றாவிட்டால் அதனால் அவன் தலையே போய் விடுமாம்.

"என்ன சொல்கிறீர்கள், இளவரசி? நம்மைத் துரத்துகிறவர்களிடமிருந்து தப்பினாலும் நம்மைக் காப்பாற்றுகிறவர்களிடமிருந்து தப்ப முடியாதுபோல் இருக்கிறதே! பகலில் போவதென்றால் இவன் தொல்லை இருக்காது; ஆனால் பகைவர்கள் அதற்குள் நம்மைப் பிடித்து விடுவார்கள்."

"நாம் இப்போதே போக வேண்டும்; ஆனால் இவனை அழைத்துக் கொண்டும் போகக் கூடாது" என்றாள் ரோகிணி. "நம்மைச் சேர்ந்தவனாக இருந்தாலும் எனக்கென்னவோ இவனைப் பார்த்தால் நல்லவனாகத் தோன்றவில்லை. அடிக்கடி என்னை உற்றுப் பார்த்து அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறான். என் குரலிலிருந்து என்னைப் பெண்ணென்று தெரிந்துகொண்டால் பிறகு எப்படி நடந்துகொள்வானோ, தெரியாது. இளவரசி என்று தெரிந்தாலும் அவனுக்குச் சிறிது அச்சம் இருக்கும். அது தெரியாதபோது, இவனால் எனக்குத் துன்பம் வராதென்பது என்ன நிச்சயம்?"

கந்துலன் யோசனை செய்தான்.

"வேண்டாம், கந்துலா! நாமே விரும்பாதபோது நமக்கு வலிய வந்து உதவி செய்பவர்களை நாம் எளிதில் நம்பிவிடக் கூடாது" என்றாள் ரோகிணி.

"இவனை உறங்கும்போதே தீர்த்துக் கட்டியிருந்தால், இவ்வளவு தொல்லை நமக்கு இல்லை. இப்போது இவனை என்ன தான் செய்வது?"

ரோகிணியின் மூளை துரிதமாக வேலை செய்தது. கந்துலனின் காதருகில் சென்று தன் யோசனையைத் தெரிவித்தாள். கந்துலனின் முகம் அதைக் கேட்டதும் மலர்ந்தது. ரோகிணியை அழைத்துக் கொண்டு திண்ணையோரத்தில் உட்கார்ந்து கொட்டாவி விட்டுக் கொண்டிருந்த வீரனிடம் வந்தான்.

"தம்பா! தம்பிக்கு இந்த நேரத்தில் புறப்படப் பயமாக இருக்கிறதாம். ஒரு தூக்கம் போட்டுவிட்டு விடி வெள்ளி கிளம்பும் நேரத்தில் புறப்படலாமென்கிறான். நீ சற்று மறந்து விடாமல் எங்களை அந்த வேளையில் எழுப்பிவிடு."

"இதுதான் நல்ல யோசனை!" என்று மற்றொரு கொட்டாவி விட்டான் வீரன். "நானும் உங்களோடு இப்படிச் சிறிது தலையைச் சாய்க்கிறேன். ஒருவேளை நானே அயர்ந்து தூங்கி விட்டாலும் என்னை எழுப்பி ஒரு வார்த்தை சொல்லிக்கொண்டு போய்ச் சேருங்கள்."

அடுத்தாற்போல் "வாழ்க மகிந்தர்! வாழ்க ரோகணம்!" என்று கூறிக் கொண்டே அவன் தன் கட்டையைக் கீழே சாய்த்து விட்டான். மற்றவர்களும் திண்ணையோரத்தில் தங்களை முடக்கிக் கொண்டார்கள்.

ஒரு நாழிகை சென்றது; இரண்டாவது நாழிகையும் ஊர்ந்தது. கந்துலன் சந்தடி செய்யாமல் எழுந்து, அந்த வீரனின் வயிற்றைப் பார்த்துத் தன் உடைவாளைப் பாய்ச்சுவதற்காக, மெல்ல அதை உறையிலிருந்து உருவப் போனான். ரோகிணியின் கரம் அதைத் தடுத்து நிறுத்தி, 'தூங்குகிற புலியை எழுப்பித் தொலைக்காதே!' என்பது போல் அவனுக்கு எச்சரிக்கை செய்தது.

பிறகு இருவரும் மெல்லத் திண்ணையிலிருந்து நழுவிக் காட்டுக்குள் புகுந்தார்கள். கூப்பிடு தூரம் சென்று திரும்பிப் பார்த்தபோது அந்த வீரன் அதே இடத்தில் கிடந்தான்.

"நல்ல சமயத்தில் உன்னைத் தடுத்தேன். நீ வாளை உருவும் சத்தத்தைக் கேட்டு அவன் விழித்துக் கொண்டிருந்தால் உன் கதி என்ன ஆகியிருக்குமோ? சிறந்த வீரன் என்பது அவன் தோற்றத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா?" என்றாள் ரோகிணி.

"வீரனும் வீரன்! தூங்குமூஞ்சி; சோற்றுக் குடுக்கை!" என்று கூறிக் கலகலவென்று நகைத்தான் கந்துலன்.

"சரி! நீ வாயை மூடிக் கொண்டு பேசாமல் வா!" என்று அவனை அடக்கினாள் ரோகிணி.

அதிகமாகப் பேசுவதற்கும் பேச்சைக் கேட்பதற்கும் அவளுக்கு அப்போது பயமாக இருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் மரங்களும் குன்றுகளும் பேய் பிசாசுகளாகவும் பூதங்களாகவும் நின்றுகொண்டிருந்தன. வளர்பிறை நிலவு இருள் சூழ்ந்த இடங்களைத் திட்டுத் திட்டாக எடுத்துக் காட்டி அவள் அச்சத்தை அதிகரித்துக் கொண்டிருந்தது.

ஆந்தைகள் ஒரு புறம் அலறிக் கொண்டே சல்லாபம் புரிந்தன; கோட்டான்கள் மறுபுறம் கூவிக் கொண்டே கொஞ்சிக் குலாவின. சின்னஞ்சிறு வன விலங்குகளின் கும்மாளத்துக்கும் குதூகலத்துக்கும் வேறெந்த நேரமும் கிடைக்கவில்லை போலும். புதர்களுக்கிடையில் நெருப்புத் துண்டங்களைப்போல் தெரிந்த அவைகளின் விழிகளைக் கண்டு ரோகிணி வேர்த்து விதிர்விதிர்த்தாள்.

தைரியம் சொல்லிக்கொண்டே அவளை அணைத்துக்கொண்டு நடந்தான் கந்துலன். தன் தந்தையைச் சந்திக்க வேண்டுமென்ற ஆசை மட்டிலும் அவள் மனத்தில்இல்லாதிருந்தால், அவளுடைய உடலை மட்டுமே கந்துலன் மகிந்தரிடம் தூக்கிக்கொண்டு சென்றிருப்பான். அத்தனை பயம் ரோகிணிக்கு.

அவள் துணிவுள்ள பெண்தான்; துடுக்குத்தனமும் தைரியமும் அவள் உடன் பிறந்தவைதான். ஆனால் அவையெல்லாம் அரண்மனைக்குள் அவளுக்கு உதவி செய்தன. மனிதர்களிடம் அவள் துணிவுடன் பழகத் தெரிந்தவள். இயற்கையுடன் ரோகிணி ஒன்றிப் பழகியதில்லை. இரவு நேரத்துக் கானகத்தின் அச்சம் நிறைந்த அதிசயங்கள் அவளுக்குப் புதுமையானவை; புதிரானவை.

ஒருபுறம் வானத்தை முட்டிக்கொண்டு சரிவாக நீண்டு படுத்துக் கிடந்தது ஒரு மலை. அதன் அடிவாரத்துக்குச் சென்றவுடன், "இளவரசி! இனி நீங்கள் உடைமாற்றிக் கொண்டு இளவரசியாகவே என்னுடன் வரலாம். நம்முடைய வீரர்கள் நடமாடும் இடம் வந்துவிட்டதால் வேற்றுடையில் இருந்தால்தான் ஆபத்து" என்றான் கந்துலன்.

இளைஞனாக இருந்த ரோகிணி சிறு பாறைக்குப் பின்னால் மறைந்து, மறு விநாடியில் புத்தம் புது மலராய், மனங் கவரும் மங்கையாய் வெளியில் வந்தாள். மலையடிவாரத்திலிருந்த பிளவின் வழியாக அவர்கள் விரைந்து சென்றனர். அப்படியும், மலையின் அடிவயிறான குகை அவர்கள் கண்ணில் படுவதற்கு ஒரு நாழிகை ஆயிற்று.

"அதோ பாருங்கள், அங்கே!"

கந்துலன் சுட்டிக்காட்டிய திசையில், பாறைகளுக்கும், செடிப் புதர்களுக்கும் மத்தியில், சிறிய பிளவொன்று தென்பட்டது. தீவர்த்தியின் வெளிச்சமோ, விளக்கு வெளிச்சமோ ஏதோ ஒன்று அதற்குள்ளிருந்த இருளை மெல்ல ஒதுக்கிக்கொண்டிருந்தது. பத்துப் பதினைந்து வீரர்கள் அதற்குக் கீழே பாறைகளின் மேல் உட்கார்ந்திருந்தனர்.

குகை சற்று உயரத்தில் இருந்ததால் சிறு பாறைகளை அதற்குப் படிகளைப் போல் அடுக்கியிருந்தார்கள். படிகளின் ஓரத்தில் காணப்பட்ட மர ஏணி கந்துலனின் கண்களுக்கு அந்த நேரத்தில் புலப்படவில்லை.

"வாழ்க மகிந்தர்! வாழ்க ரோகணம்!" என்று தொலைவில் நின்றுகொண்டே குரல் கொடுத்தான் கந்துலன்.

வீரர்கள் உருவிய வாட்களுடன் விரைந்தோடி வந்து கந்துலனையும் ரோகிணியையும் வளைத்துக் கொண்டு நின்றார்கள். கந்துலனை இனம் கண்டு கொண்ட ஒருவன், அந்த நேரத்தில் அப்படிக் குரல் கொடுத்ததற்காக அவனைக் கடிந்துகொண்டான். ரோகிணியை உற்றுப் பார்த்தபிறகு வீரர்கள் அனைவருமே மூச்சு விடக்கூட மறந்துவிட்டார்கள். இளவரசி என்பதால் அவர்களுக்கேற்பட்ட பணிவும் மதிப்பும் ஒரு புறம் இருக்க, அவளுடைய கண்களில் கலந்தொளித்த காந்த சக்தி அவர்களை அப்படி நிலைகுலைய வைத்தது.

"அரசரிடம் செல்ல வேண்டும்!" என்று மிடுக்குடன் கூறினாள் ரோகிணி.

"சித்தம், இளவரசி!" வழி காட்டுவோரும் புதர்களை விலக்குவோரும், பக்கத்திலும் பின்புறமுமாக நின்று அழைத்துச் செல்வோருமாகக் குகைக்கு முன்னால் காவல் புரிந்த அனைவருமே அவளைச் சூழ்ந்துகொண்டு விட்டனர். ஒருவன் மட்டிலும் மன்னரிடம் செய்தியைத் தெரிவிப்பதற்காக முன்னால் விரைவாக ஓடினான்.

இந்தக் குழப்பம் நிறைந்த காட்சியை, தொலை தூரத்தில் மிகவும் ஆபத்தான நிலையிலிருந்து கொண்டு, திரும்பிப் பார்த்தது மற்றொரு உருவம். நாற்சந்திச் சாவடியில் அவர்களைச் சந்தித்த வீரன் அவன். மலைச்சரிவோடு சரிவாக ஒன்றி அவன் குகையின் பின்புற வாயிலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான்.

அவனுடைய நெஞ்சு பாறையில் உராய்ந்தது; கைப்பிடி நழுவியது; கால்கள் தடுமாறின; பற்றிக் கொண்ட செடி கொடிகள் கையோடு வந்தன. என்றாலும் அவன் தன் முயற்சியை விடவில்லை. மலை குலைந்தாலும் மனம் குலை

யாதவனைப்போல் சிறிது சிறிதாக முன் னேறிக் கொண்டிருந்தான்.

நாழிகை அளவு சுருக்கினாலும் மரணந் தான். எண்ணிப் பார்க்க எலும்புத் துண்டுகள் கிடைக்காது. மறுபடியும் அவன் கீழே திரும்பிப் பார்த்தான்.

குகைக்குள்ளே உறங்கிக் கொண் டிருந்த மன்னருக்கு இதற்குள் செய்தி எட்டிவிட்டது போலும்! தந்தையென்ற உணர்ச்சி அவரைப் பற்றிக் கொள்ளவே, ஓடோடி வந்து அவர் தம் மகளைக் கட்டிக் கொண்டார். பேசுவதற்கு நா எழவில்லை. விம்மினார்; தேம்பினார்; குலுங்கினார்; பதறினார்.

"அப்பா! அப்பா!" என்ற ரோகிணி யின் உருக்கம் நிறைந்த குரலால் வானை முட்டிய அந்த மலையே நடு நடுங்கி நெகிழ்ந்து கொடுத்தது.

கன்றைப் பிரிந்த பசு கதறுவதுண்டு. பசுவைப் பிரிந்த கன்று பரிதவிப்ப துண்டு. தந்தையைப் பிரிந்த மகள் இப்படியும் தவித்துப் புலம்புவது உண்டா?—உண்டா?

இதற்குள் குகையின் பின்புறத்தை அடைந்துவிட்ட வீரன், அந்தக் குரலின் தாக்குதல் தாங்காமல், தன் கண்களின் ஓரத்தில் கசிந்த இரு சொட்டு நீர்மணி களைத் தன்புறங் கையால் துடைத்து விட்டுக்கொண்டான்.

தந்தையும், மகளும் மட்டுமே குகைக் குள் நுழைந்தனர். பெரிய மண் சட்டி ஒன்று அகல் விளக்காக மாறி அங்கு ஒளி அளித்தது. கும்பல் கும்பலாக ஆயுதங்கள், சமையலறைப் பொருள்கள், துணிமணிகள் முதலியவை அங்கே தாறு மாறாகக் கிடந்தன. நல்ல நாட்களில் சாதாரணப் போர்வீரன் படுக்கத் தயங்கும் எளிய படுக்கை ஒன்றில் மகிந்தர் போய் உட்கார்ந்தார்.

குகையைச் சுற்றிப் பார்த்த ரோகிணி, அதே கண்களால் தன் தந்தையாரின் முகத்தையும் உற்றுப் பார்த்தாள். இரு ளில் அதை முன்பு சரியாகப் பார்க்க முடியவில்லை. முகமா அது? முடிதாங்கி ரோகணத்தை ஆட்சி செய்த அதே மன்னர்தாமா அவர்? ரோகிணியின் தந்தையா இப்படி நிறம்மாறி, உருமாறி, குகைவாழ் எலும்புக் கூடாய்க் காட்சி தருகிறார்?-ரோகிணியின் தலை சுழன்றது.

"அப்பா! இனிமேல் என்னால் உங்களை விட்டுப் பிரியவே முடியாது. அப்பா! நான் இங்கேயே உங்களுடன் தங்கிவிடப் போகிறேன். என்னை இனி எங்குமே போகச் சொல்லாதீர்கள் அப்பா!"

தந்தையின் மடியில் படுத்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள் ரோகிணி. எப்படி அவளைத் தேற்றுவதென்று தெரி யாமல், அன்போடு அவள் தலையை வருடிக் கொண்டிருந்தார் மகிந்தர். சொட்டுச் சொட்டாய் அவரது கண்ணீர் ரோகிணிமீது விழுந்து சிதறியது.

"ரோகிணி! பகைவர்களாக இருந் தாலும் பண்பு உள்ளவர்களாயிற்றே சோழர்கள்? உனக்கு அங்கு இருப்பதில் குறையொன்றும் இருக்காதே, அம்மா!"

"பேசாதீர்கள், அப்பா! இங்கு நிலையில் நீங்கள் இருப்பது தெரிந்திருந்தால் இதற்குள் பட்டினி கிடந்தே செத்துப் போயிருப்பேன்."

"நீ இந்த இடத்தில் ஒரு நாள்கூடத் தங்க முடியாது, மகளே! பெண்கள் இருப்பதற்கு ஏற்ற இடமில்லை இது. திரும்பிப் போகத்தான் வேண்டும்."

"அப்பா!" என்று சோகத்துடன் கதறினாள் ரோகிணி. "திரும்பிப் போவ தற்கு ஒரே இடம்தான் இருக்கிறது. அந்த லோகத்துக்கு நீங்களே என்னை உங்கள் கையால் அனுப்பி விடுங்கள். வேறு எங்குமே நான் போக மாட்டேன். போகவே மாட்டேன்!"

முட்டி மோதிக் கொண்ட ரோகிணி தன் உணர்ச்சிப் பெருக்கிலிருந்து மீள் வதற்குச் சில விநாடிகள் சென்றன. மகிந்தர் தமது மகிஷியைப் பற்றியும், மைந்தன் காசிபனைப் பற்றியும் அவ ளிடம் விசாரித்தார். அதுவரையில் காசிபனை மறந்திருந்த ரோகிணிக்கு அவர் கேள்வி தூக்கிவாரிப் போட்டது.

"காசிபனைப் பற்றி என்னிடம் கேட்கி றீர்களே! அவனைப் பற்றி நானல்லவோ உங்களிடம் கேட்க வேண்டுமென்றிருந் தேன். எங்கே அவன்?"



"என்னது !"

"அன்றைக்கே அமைச்சர் கீர்த்தி அவனை அழைத்துக்கொண்டு வந்து விட்டாரே ! அவனை அவர் உங்களிடம் கொண்டுவந்து சேர்க்கவில்லையா ?"

இந்தச் சமயத்தில் குகையின் பின்புறத்தில் இலேசாக ஏதோ சத்தம் கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்த ரோகிணிக்கு இருளில் ஒன்றும் தெரியவில்லை. தன் தந்தையின் முகத்தைப் பரபரப்புடன் நோக்கினாள். காசிபனின் இருப்பிடம் அவருக்கே தெரியாதா ?

நீண்டநேரம் பேசாதிருந்த மகிந்தர், "கீர்த்தி எதையும் முன் யோசனையுடன் தான் செய்திருப்பார். காசிபன் எங்கு இருந்தாலும் பத்திரமாக இருப்பான். அவனைப் பற்றி நீ கவலைப்படாதே, ரோகிணி !" என்றார்.

"அவன் இருப்பிடத்தை அவர் உங்களிடம் கூடவா சொல்லக் கூடாது ?"

அதே கேள்வி அவருடைய மனத்திலும் எழாமல் இல்லை. மெல்லச் சிரித்து அதை மறைத்துவிட்டு, "காரணம் இல்லாமல் அவர் செய்திருக்கமாட்டார். மேலும் இந்தக் காலத்தில் நாங்கள் ஒருவரையொருவர் சந்திப்பதே கஷ்டமாக இருக்கிறது. ஓலைத் தொடர்புகூட வைத்துக் கொள்ள முடிவதில்லை" என்றார். "இந்தக் கவலையை உன் மனத்தைவிட்டே அகற்றிவிடு ரோகிணி! எனக்கு இந்த நாட்டின் முடி கிடைக்காவிட்டாலும் என் மகனுக்கு அதைச் சூட்டிப் பார்த்து விட்டுத்தான் அவர் உயிர் துறப்பார்."

"வேற்று நாட்டு மணிமுடியை அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விட்டால், நாளைக்கே நாடு நம்முடையதாகி விடும்" என்றாள் ரோகிணி. "உங்களுடைய முடி இப்போது என்னிடம்தான் இருக்கிறது. சக்கரவர்த்தி அதை என்னிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார்."

அலட்சியமாகச் சிரித்தார் மகிந்தர். "நீ சிறு பெண். உனக்கு இந்த விவகாரமெல்லாம் தெரியாது. நண்பர்களின் துரோகத்தைக் கூட நம்பலாம் ; பகைவர்களின் தாராளத்தை நம்பவே கூடாது. பெண்களிடம் அவர்கள் காட்டும் பெருந்தன்மையை வைத்துக் கொண்டு, நீ மற்ற விஷயங்களிலும் அவர்களை நல்லவர்களென்று நினைக்கிறாய். அது தவறு, ரோகிணி !"

மணிமுடியைப்பற்றிப் பேச்சு வந்தது.

"அப்பா ! நகரத்தின் புத்தவிஹாரம் முழுதும் அவர்கள் தேடிப் பார்த்து விட்டார்களாம். கிடைக்கவில்லையாம். அங்கிருந்த மணிமுடி வேறெங்கு போயிருக்கும் ?"

"அங்கும் தேடிப் பார்த்து விட்டார்களா ? இப்படியெல்லாம் நடக்குமென்று தெரிந்துதான் முன்பே அதை வேறிடத்துக்குக் கொண்டு வந்து விட்டோம். தேடட்டும், தேடட்டும் ; நன்றாகத் தேடிப் பார்க்கட்டும் !" துன்பத்தைக் கூட மறந்து வாய் விட்டுச் சிரித்தார் மன்னர் மகிந்தர்.

"அது எங்கே அப்பா இருக்கிறது ?"

"உனக்கு ஏன் ரோகிணி இந்தப் பொறுப்பெல்லாம் ; ஆண்களாகிய எங்களுக்கு அதை விட்டுவிட்டு நீ நிம்மதியாக இரு !"

"அரசரையே மந்திரி நம்பாத நாடு இது? இந்த நாட்டில் மன்னர் தமது மகளை நம்பாததில் என்ன வியப்பு ? நீங்கள் என்னிடம் இனி எதையுமே சொல்ல வேண்டாம், அப்பா !" என்று பிணங்கினாள் ரோகிணி.

ரோகிணியின் முதல் வாக்கியம் சுருக்கென்று பாய்ந்து ஊடுருவியது மன்னரின் மனத்தை. ஏற்கனவே காசிபன் மறைந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சியுற்றிருந்தவரை, ரோகிணி தன் சுடுசொல்லால் மேலும் நோகச் செய்து விட்டான். அதுவரையில் மன்னராக இருந்தவர் இதைக் கேட்டவுடன் மனிதராக மாறினார் ; தந்தையாகிவிட்டார்.

கோழையாக இருந்தாலும் மகிந்தர் ராஜதந்திரத்தில் அப்படியொன்றும் சளைத்தவரல்ல. ஆனால் ராஜதந்திரமும் சில வேளைகளில் தனக்குரியவரிடமே தந்திரம் செய்து தப்பிவிடுகிறதே !

மகிந்தர் சுற்றுமுற்றும் உற்று நோக்கி விட்டு, மிகவும் ரகசியமாக, "இந்த மலை



யின் மறு பக்கத்திலுள்ள முதலைச் சுனை உனக்குத் தெரியுமா, ரோகிணி?" என்று தொடங்கி, அதன் இருப்பிடத்தை அவளிடம் விளக்கமாகவே சொன்னார்.

குகையின் பின்புறம் மறைந்து கொண்டிருந்த வீரனுக்கு அவன் இருந்த இடத்திலேயே இருந்தால், இந்த ரகசியம் அவ்வளவு எளிதாகக் கிடைக்குமென்று தோன்றவில்லை. காதில் விழாத தூரத்தில் இருந்து கொண்டல்லவோ அவர்கள் பேசினார்கள்? தன் செவிகளை நன்றாகத் தீட்டிக் கொண்டு மெல்ல, மெல்ல மகிந்தரின் முதுகுப் புறத்தில் நகர்ந்து வந்தான் அவன். ஒன்றையும் விடாமல் கேட்டான். திரும்பிப் போக முயன்றான்.

இன்னும் ஒரு கணம், மின் வெட்டும் நேரம், அவன் ரோகிணியின் கண்களில் படாமல் இருந்திருக்கக் கூடாதா?

நிழலுருவத்தைக் கண்டு திடுக்கிட்ட ரோகிணி, அதைத் தன் தந்தையிடம் காட்டிக் கொள்ளாமல், "இருங்களப்பா, இதோ வந்து விடுகிறேன்!" என்று சொல்லிக் கிளம்பினாள். விரைந்து சென்ற அவளிடமிருந்து அவனால் தப்ப முடியவில்லை. குகையின் திருப்பத்தில் அவர்கள் இருந்ததால், மகிந்தரும் திரும்பிப் பார்த்துவிட்டுச் சும்மா இருந்தார்.

நாற்சந்திச் சாவடியில் ரோகிணியைச் சந்தித்த அதே வீரன் அங்கு நின்று கொண்டிருந்தான். "அப்பா! ஒற்றனப்பா! ஒற்றன்! ஓடி வாருங்கள்!" என்று தன் பலங் கொண்ட மட்டும் கூவினாள் ரோகிணி.

மறு கணத்தில் அவள் எதிர்பாராத ஒரு பேரதிசயம் அங்கே நடந்தது. அந்த ஒற்றன் தன் தாடியை விலக்கி, அவளிடம் தன் முகத்தைக் காட்டிவிட்டு, மீண்டும் அதைப் பொருத்திக் கொண்டான். கொடும்பாளூர் இளவரசன் அவன்! பொல்லாத வீரன் தென்னவன் இளங்கோவேள் அவன்!

"ஆ!" என்று அலறிக் கொண்டு, ரோகிணி தரையில் மயங்கி விழுவதற்குள், பத்துப் பன்னிரண்டு வீரர்கள் இளங்கோவை உருவிய வாட்களுடன் சூழ்ந்து கொண்டனர். மலைக் குகையின் பின்புறப் பாதை எளிதில் தப்பிச் செல்லக் கூடிய பாதையாக இல்லை. வீரர்களிடம்கூட அவன் வாள் வீசித் தன் சாகசத்தைக் காட்டியிருக்க முடியும். ஒருவேளை தப்பிச் செல்ல மார்க்கம் கிடைத்திருந்தாலும் கிடைத்திருக்கும்.

ரோகிணி மயங்கி விழுந்ததைக் கண்ணுற்ற இளங்கோ செயலற்ற ஜடப் பொருளானான். கரங்களைப் பற்றினர் சிலர்; கால்களைப் பற்றினர் சிலர்; கட்டிப் பிடித்தனர் சிலர்; பற்றி இழுத்தனர் சிலர்.

விளக்குச் சட்டியை அவன் முகத்துக் கெதிரே தூக்கிப் பிடித்த மன்னர், அதை அருகில் இருந்தவனிடம் கொடுத்து விட்டுத் தம் ஆத்திரம் தீரும் வரையில் அவன் முகத்தில் அறைந்தார்.

அவருக்குத் தமது மகள்மீது ஆத்திரம். ரகசியத்தைக் கேட்டுத் தொலைத்தாள் அல்லவா? அந்த ஒற்றன்மீது ஆத்திரம், அதைத் தெரிந்து கொண்டானல்லவா? மகள்மீதிருந்த ஆத்திரத்தையும் சேர்த்து வைத்து அவன் முகத்தில் காட்டினார்.

மயங்கிக் கிடந்த ரோகிணி அறையும் சத்தத்தைக் கேட்டுச் சுய உணர்வு பெற்றாள். தன் தந்தையின் மூர்க்கத் தனத்தைத் தடுக்க வேண்டுமென்று அவளுடைய நரம்புகள் அனைத்துமே துடித்தன. 'ஐயோ! அவரை ஒன்றும் செய்யாதீர்கள். என்னுடைய ஒரு துளி ரத்தத்துக்காக அவர் தவித்த தவிப்பு எனக்குத்தான் தெரியும். அவரை விட்டு விடுங்கள்!' என்று அலறத் தோன்றியது.

மகிந்தரின் முகம் பழுக்கக் காய்ச்சிய இரும்பைப் போல் சிவந்திருந்ததைக் கண்டவுடன் அவளால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஒற்றனுக்கு உறுதுணையாக இருந்ததாக அத்தனை வீரர்களும் அவளுக்கு எதிரே திரும்பி விடுவார்கள்.

ஒற்றனின் பொய் மீசையும் தாடியும் மன்னரின் கையோடு வந்து விட்டன. வல்லவரையர் இளங்கோவிடம் சிறு மூட்டையொன்று கொடுத்து அனுப்பினாரல்லவா? காப்பாற்ற முடிந்தவரையில் அது அவனைக் காப்பாற்றியது. இப்போது கைவிட்டுவிட்டது.

வேஷம் கலைந்தது. பல குரல்கள் ஒன்றாக எழுந்தன.

"கொடும்பாளூர் இளவரசன்!"

மகிந்தரின் மனத்திலே நெருப்புப் பற்றிக் கொண்டது. "நீதானா அவன்?" என்று கேட்டுவிட்டு, மகளிடம் திரும்பி, "ரோகிணி! இவனை நீ அரண்மனையில் பார்த்திருக்கிறாயா? இவனை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"இவரை.....இல்லை.....இவனை....எனக்குத் தெரியாதப்பா!"

ரோகிணியின் கண்களுக்கு மட்டுமே புலப்படக் கூடிய புன்னகையின் மின்கீற்று ஒன்று இளங்கோவின் இதழ்க் கோணத்தில் எட்டிப் பார்த்தது.

"இவன் தெரிந்து கொண்ட ரகசியம் இவன் உயிரோடு போய்த் தொலையட்டும்!" என்றார் மன்னர் மகிந்தர். "இவனை நன்றாகக் கட்டி இப்போதே மலை உச்சியிலிருந்து உருட்டிவிடுங்கள்!"

மன்னர் விதித்த மரண தண்டனையைக் கேட்டு ரோகிணி மீண்டும் மயங்கி விழுந்தாள்.

(தொடரும்)


இருமலின் மூலகாரணத்தை அகற்றுங்கள்
SIROLIN
'ROCHE'
ஸிரோலின் சாப்பிடுங்கள்
குடும்பத்தினர் யாவருக்கும் ஏற்ற ஔஷதம்
ஸிரோலின் இருமலை நிறுத்து வதோடு இருமலுக்குக் காரண மான நிக்கிறைக்கும் கிருமி களைக் கொல்லவும் செய்கிறது.
ஜெனரல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

நாட்டு வைத்தியம்

—ஸ்ரீ ஹரி

119. கர்ண தோதம்

பயப்பட வேண்டாம். கர்ணம் என்றால் காது. தோதம் என்றால் குத்தல். கர்ணதோதம் என்றால் காது குத்தல். அவ்வளவுதான்.

காது குத்தல் என்று நம்மவருள் ஒரு சடங்கு உண்டே! குழந்தைக்குக் காதில் ஒரு பூஷணத்தை அணிவித்தல். அதைச் சொல்லுகிறேனோ என்று எண்ணி-சாப்பரிசிக்குக் கையை நீட்ட வேண்டாம். "கருக் கருக்குனு—காதைக் குத்தறதே!" என்று குழந்தைகளும் பெரியவர்களும் சொல்வதைக் கேட்டிருக்கிறோமே! அந்தக் காது குத்தலைப் பற்றித்தான் சொல்ல வந்தேன்.

கர்ண ரோகங்கள் யாவற்றுக்கும் நாமறிந்த வகையில் காரணங்களை முன் கட்டுரையில் தெரிவித்தாயிற்று. ஆனால், நட்ட நடுநிசியில் தூங்கிக் கொண்டே இருக்கும் குழந்தை அடுத்தடுத்து இரண்டு மூன்று தாம் புரண்டு படுக்கிறது; பிறகு சிறிது சிணுங்கத் தொடங்கி, சிணுங்கல் அழுகையாகி அழுகை அலறலாக மாறுகிறது. குழந்தையைச் சமாதானம் செய்து அழுகைக்குக் காரணத்தை அறிய முற்படும்போது காதில் தான் வேதனை என்பது தெரிய வரும். காதைத் தொடும்போதே அழுகை பலமாகும். இதற்குக் காரணம் என்னவாகலாம்......?

அவற்றையும் விஸ்தாரமாகச் சொல்லியாயிற்று. கண்டபடி குழந்தையைக் காதில், வயிற்றில், கழுத்தின் அடிப்புறத்தில், வாயினுள்—தலைமேல்—கண்களின்மேல் என்று கண்ட இடங்களிலெல்லாம் முத்தமிடுவது. நமது மூச்சு நமது வாயில் உள்ள அசுத்தங்கள் குழந்தையின் சரீரத்தில் ஒட்டுவாரொட்டி போல் பரவநேரிடுகிறது. வாயில்-தொண்டையில்—புண்.—டான்சில்—அதைத் தொடர்ந்து காது குத்தல், காதில் சீழ்—ஜலம் வடிதல்—சளி—என்று இப்படி என்ன வியாதிதான் வராது? கண் நோவு கூட வரலாம். அந்தக் கண் நோவு மிகக் கொடியதாகவும் இருக்கலாம். இப்படியும், முன் கட்டுரையில் விளக்கிய வேறு காரணங்களாலும்—(தலை வியர்க்கிறது-அது உட்புறம் ஊறி விடுகிறது ஒன்றே போதுமே!) நட்ட நடுநிசியில் இந்த நோவு உச்ச நிலையை அடையவும்-மேற் சொன்னவிதம் குழந்தை அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருக்கவும் நேர்ந்து விடும்.

அந்த நட்ட நடுநிசியில் எந்த வைத்தியனைத் தேடுவது; குழந்தையைப் பேணி வளர்க்கும் கலையில் பயிற்சிபெற்ற தாயாருக்கு இந்தக் கவலை ஏற்படாது.

ஒரு பல் பூண்டு—அல்லது சிறிது பெருங்காயம். இதை ஒரு உச்சிக்கரண்டி தேங்காய் எண்ணெய்—அல்லது நல்லெண்ணெய்—அல்லது ஆமணக்கெண்ணெயானாலுஞ் சரி — இவற்றுள் ஒன்றிலிட்டுக் காய்ச்சி, எண்ணெயை பட்டும் இதமான சூடுள்ளபோது ஒரு சொட்டுக் காதில் விட்டால் போதும். குழந்தை அழுகையை நிறுத்திவிடும். காதைச் சிறிது பஞ்சினால் மூடி வைக்கலாம்.

மிருதுவான ஒரு துணியைப் பந்து போல் சுருட்டிப் பிடித்துக்கொண்டு கரிக் கும்மட்டியின் அருகிலோ—ஹரிகேன் விளக்கின் அருகிலோ காண்பித்துச் சூடாக்கிச் சூடாக்கிக் காது கன்னப் புறங்களில் ஒத்தினாலும் குழந்தையின் நோவுக்கு இதமாக இருக்கும்.

மூன்று நான்கு வயது வளர்ந்த குழந்தைகளானாலும் பெரியவர்களானாலும் வாத வியாதியின் கீழ் சொன்னபடி (ரூக்ஷமான) தாபஸ்வேதம் செய்தால் நோவு உடனே குறையும்.

சந்தேகத்துக்கு மறுபடியும் சொல்லி விடுகிறேன். ஒரு முழ நீளம் ஒரு முழ அகலம் உள்ள ஒரு துணியைப் பரப்பி, அதன்மேல் கொஞ்சம், அரிசித் தவிட்டை வைத்து. அடுப்பிலிட்டுச் சூடாக்கிய ஒரு ஓட்டாஞ்சல்லியை அந்தத் தவிட்டின் மேல்வைத்து மேலுஞ் சிறிது தவிட்டினால் மூடித் துணியைக் குவித்து - யாவற்றையும் கிழிபோல் கட்டிக் கொள்ளவும். சூடாக்கிய ஓட்டாஞ்சல்லியின் உஷ்ணம் தவிட்டின் வழியாக வந்து துணியைத் தாண்டி வந்து உறைக்கும். அந்தச் சூடு வலிக்கு ஹிதமாகத் தோன்றும், ஒரு தரம் சூடாக்கின ஓட்டாஞ்சல்லி—10

நிமிஷம் வரையில் போதுமான உஷ்ணத்தைக் கொடுக்கும். அதற்குள் இன்னுமொரு ஒட்டாஞ்சல்லியைச் சூடாக்கிக் கொள்ளலாமே! இவ்வாறு—ஒன்றிரண்டு கிழிசலை உபயோகிப்பதற்குள் காது வலி மட்டுமல்ல, பல்வலி இவற்றைத் தொடர்ந்து ஒருபுறத்தில் மட்டும் ஏற்படும் தலைவலி ஆகிய சகலமும் சமனமாகிவிடும்.

வளர்ந்தவர்களுக்கானால் இவ்வளவு சிரமமில்லை. சூடாக்கிய ஒட்டாஞ்சல்லியை பரத்திருக்கும் தவிட்டைச் சிறிது இப்படியும் அப்படியும் திரவி ஒட்டியிருந்த கிடைக்கும் சூட்டை வேண்டிய அளவில் ஒக்கத்தட்டிக் கொளலாம். குழந்தைகளுக்காகும் போது—நமது புறங்கையில் கிழியை வைத்துச் சூடு எவ்வளவு இருக்கிறதென்று தெரிந்த பிறகுதான் கிழியை நேரிடக் காதுப்புறத்தில் வைக்கலாம். மேலும் பெரியவர்களுக்கு இரண்டொரு சொட்டு இஞ்சியின் ரஸத்தில் சிறிது இந்துப்புவைக் கரைத்து ஒன்றிரண்டு சொட்டு காதில் விட்டுப் பஞ்சினால் மூடினால் உடனே வலி குறையும்.

சிலருக்கு வரும் இக்காதுக் குத்தலில் ஒரு விசேஷமுமுண்டு. குளிர் பனிக் காலங்களில் சிறிதளவு தணுப்புத் தட்டினாலும், மற்றுள்ள காலங்களிலும் மோட்டாரில் நெடுந்தூரஞ் செல்வது, திறந்த ஜன்னலின் அருகில் உட்கார்ந்தபடி ரயிலில் பிரயாணஞ் செய்வது முதலிய காரணங்களால் வேகமாக வீசும் காற்றைக் கொள்வதால் காது குத்தல் காதின் சுற்றுப் புறங்களில் வீக்கம் என்று இப்படியொரு உபத்திரவம் ஏற்படுவதுண்டு.


மற்றும் சிலருக்கோ—வெய்யிலில் அதிக வியர்வை ஏற்பட நேரிட்டால் போதும்—காது குத்தல், பல்வலி ஜலதோஷம் முதல் மார்ச்சளி, இருமல், பிராங்கைடிஸ் வரையில் எதுவேனுமானாலும் நோட்டமில்லாமலே ஏற்படுவதுண்டு. இவ்விரு இனத்தைச் சேர்ந்தவருக்கும் பொதுவாக மேற்சொன்ன விதம் தாபஸ்வேதம் (நெய்ப்பில்லாதது) உடனே வலியைக் குறைக்க உபயோகமாகும் ஓர் உபாயம். மேற்கொண்டும், பல்வலி, தலைவலி, மார்ச்சளி போன்றவைகளுக்கு அந்தந்தச் சந்தர்ப்பங்களில் சொன்ன சிகிச்சைகளைச் செய்வது நல்லது.

* * *

குழந்தைகளாயிருந்து ஒரு காரணத்தினாலோ, வேறொரு காரணத்தினாலோ அடிக்கடி காதுவலி வரும் இயல்புள்ளவராயின் அந்தக்குழந்தைகளுக்குத் தினசரி உச்சியிட்டுத் தலையில் ஊற விடவும்—முடி சீவவும்—எண்ணெய்க்குளி நாளில் தலைக்குமட்டும் தேய்த்துக் குளிப்பாட்டவும் ஒரு தைலத்தை உபயோகித்தல் அவசியம்.


வில்வத்தின் இலையை இடித்துப் பிழிந்த ரஸம் 8 அவுன்ஸ். துளசியை இடித்துப் பிழிந்த ரஸம் 8 அவுன்ஸ். இவற்றுடன் தேங்காய் எண்ணெய் 16ம், தோல் சீவின வசம்பு 1 தோலாவை வெண்ணெய்போல் அரைத்துக் கல்கமாகச் சேர்த்துக் காய்ச்சவும். கல்கம் மணல் பாகமாக வரும்போது இறக்கி வடிகட்டி வைத்துக்கொண்டு மேற்சொன்ன விதம் உபயோகிக்கவும். காதில் குத்தல் வலி முதலியவை இருக்குமானால் முன்சொன்ன சிகிச்சைகளில் ஒன்றை அப்போதைக்கு மட்டுஞ் செய்யவும். அப்படிக் கில்லாவிடில் காதில் ஒரு மருந்தும் விட வேண்டாம்.

மூன்று நான்கு வயதான குழந்தைகளானால் பீனஸாந்தகம், அஸனவில்வாதி போன்ற தைலங்களில் ஒன்றைத் தலைக்குத் தினசரி தடவி முடி சீவ உபயோகிக்கலாம். இந்தக்குழந்தைகளுக்கும் காதில் நேரில் ஒரு மருந்தும் விட வேண்டாம். தலைக்குத் தேய்க்கும் தைலத்தினாலேயே குணமாகி விடும். தலைக்கு எண்ணெய் தேய்த்தோ, தேய்க்காமல் வெறுந்தலையிலோ ஜலம் விட்டுக் குளிப்பதைக் கூடுமான வரையில் குறைப்பது நல்லது. வாரத்தில் ஒரு தரமோ, அல்லது பத்து தினங்களுக் கொரு முறையோ இத்தலைக் குளிப்பதைச் செய்யலாம். அப்போதும் தலைக்கு மட்டும் மேற்சொன்ன தைலங்களுள் ஒன்றை உபயோகிக்க வேண்டும்.


ப்ரீஸ்
Breeze
Breeze
மேனியின் ஆரோக்கியத்தையும்
அழகையும் ஓங்கச் செய்வது ப்ரீஸ்!
ஆரோக்கியத்துடன் மிளிரும் மேனியே பெண்மையழகின் இலட்சணம். மணங்கமழும் ப்ரீஸ் சோப்பில் 'ஆக்டமர்' அடங்கி யுள்ளது; சருமக் களங்கங்களுக்குக் காரணமான கிருமிகளிடமிருந்து உங்கள் சருமத்தை விடுவிக்கும் பொருளே 'ஆக்டமர்'. மேனி யழகின் பராமரிப்பையும், புது மலர்ச்சியையும் விரும்புவோர் தேர்ந்தெடுப்பது ப்ரீஸ்தான்! நீங்களே உபயோகித்துப் பார்த்துத் திருப்தி பெறுங்கள்.
சரும நலனுக்கான 'ஆக்டமர்' கலந்துள்ள சோப்
BZ.13-50 TM

சங்கமம்

ஏ.எஸ்.ராகவன்



மாலை வெய்யிலுடன் உறவாடிக் கொண்டு 'பிசுபிசு' வென்று மழையின் ஊசிக் கால்கள் இறங்கிக் கொண்டிருந்தன. காற்றின் சுழற்சி வேறு. உதிரும் மத்தாப்புக் கம்பிகள் போல் வெள்ளி இழைகள் இப்படியும் அப்படியுமாய்த் துள்ளித்துள்ளி விழுந்தன. சில சமயம் நேராகவும், சில சமயம் பக்கவாட்டிலும், சில சமயம் பின்னிக் கலந்தும் மழையின் நாட்டியம் நடந்து கொண்டிருந்தது.

பார்த்துக்கொண்டே ஜன்னல் அருகில் உட்கார்ந்திருந்தேன். வாசலில் குழந்தை சித்ரா விளையாடிக் கொண்டிருந்தாள். பொம்மையைக் குளிப்பாட்டி, ஆடை அணிவித்து, அதற்கு உணவு கொடுத்துத் தூங்கச் செய்யும் விளையாட்டு. இந்த விளையாட்டைத்தான் அடிக்கடி அவள் விளையாடுகிறாள். அதைப் பார்க்கும் போதெல்லாம் என் மனத்தில் வேதனை எழும். இந்தக் குழந்தையை இப்படிக் குளிப்பாட்டி, உச்சி மோந்து, உணவு தந்து அன்போடு பேண வேண்டியவள் அவளை ஈன்ற மூன்று மாதங்களிலேயே கண்ணை மூடி விட்டாள். அந்தக் குறை தாய்மையாக வழிந்து நிறைவு பெற விரும்புகிறது போலும்!

அந்தப் பொம்மைக்கு அம்பி என்று பெயர் வைத்திருக்கிறாள் சித்ரா. அதை யாரும் தொடக் கூடாது. முறைத்துக்கூடப் பார்க்கக் கூடாது? 'இப்படிப்பொத்துனு போடுறியே?' என்று கடிந்து கொள்வாள். சித்ராவுக்குத் தோழிகள் தேவையில்லை. சுவரைப் பார்த்துக் கூட அவள் இந்த மாதிரி கடிந்து கொள்வாள்.

'' தூங்குடா, அம்பி... தூங்கு.''

தன் பிஞ்சு விரல்களால் பட்டுப் போன்ற பொம்மையின் உடலைத் தட்டித் தூங்கச் செய்யலானாள் சித்ரா.

வெளியே ஒத்திகை முடிந்து ஊழிக்கூத்து துவங்கி விட்டது. வானத்தின் கண் திறந்து வையத்தை வெறித்துப் பார்த்தது. கடகடவெனச் சிரித்தது. காற்று சீறிப் பாய்ந்து விரைந்தது. ஊசிக் கால்கள் உலக்கைக் கால்களாயின. ஜன்னலை மூடி விட்டு நான் வாசலுக்கு வந்தேன்.

'' சித்ரா! உள்ளே வா. சாரல் அடிக்கும்.''

அம்பியை அணைத்துக் கொண்டு அவள் உள்ளே வந்தாள். கூடத்து முற்றத்தில் குளமாக நீர் தேங்கியிருந்தது. அதைக் கண்டதும் சித்ரா கைகளைக் கொட்டி, '' அப்பா! கப்பல் விடலாமாப்பா ?'' என்றாள்.

'' வேண்டாம். மழையில் நனைந்தால் உடம்புக்கு ஆகாது '' என்றேன்.

'' நனையாமல் விடறேம்பா '' என்று கெஞ்சினாள் குழந்தை.

அவளுடைய ஆசையை நிறைவேற்ற முயன்றேன். இரண்டு மூன்று காகிதக் கப்பல்களைத் தயார் செய்து கொடுத்தேன். நீரில் அவற்றை மிதக்க விட்டாள் சித்ரா. கப்பல்கள் மிதந்தன, தள்ளாடி தகர்ந்தன, சரிந்தன, அமிழ்ந்தன.

ஒவ்வொரு கப்பலாக அவை புறப்படுவதையும் மழையைத் தாங்காது அமிழ்வதையும் காண எனக்கு வேதனை அதிகரித்தது. என் வாழ்வில் இப்படி எத்தனை கப்பல்கள் புறப்பட்டன! எல்லாம் காகிதக் கப்பல்கள்!

முதல் கப்பலில் நானும் அம்மாவும் இருந்தோம். நான் கண் திறப்பதற்கு முன்பே என் தந்தை கண்ணை மூடி விட்டாராம். கருவிலேயே இந்தத் 'திரு'வைப் பெற்றவன் நான். எங்கள் கப்பல் சிறிது தூரம் போயிற்று. அம்மா அதைச் செலுத்த எத்தனை பாடு பட்டாள்! அவள் கை சலித்தது. கப்பலும் கவிழ்ந்தது. நான் மட்டும் தப்பினேன்.

அடுத்த கப்பலில் நானும் என்னை வளர்த்த அத்தையும் புறப்பட்டோம். அத்தைக்குப் பருத்த உடல். அவளுடைய வியாதியைத் தணிக்கும் மருந்துகளை நாடி ஓடுவதிலேயே எனக்குப் பொழுது போயிற்று. கப்பலைச் செலுத்துவதும் என் வேலையாகி விட்டது. இம்முறை அத்தை போய் விட்டாள்.

மூன்றாவது முறையாக நானும் வசந்தியும் புறப்பட்டோம். முன்பெல்லாம் கடலின் பரப்பும், நீலமும் மட்டுமே தெரிந்த எனக்கு இப்போது நிலவு தெரிந்தது; தென்றல் தெரிந்தது. மகிழ்ச்சி துள்ளியது. இப்படிச் சென்ற கப்பலும் கவிழ்ந்து விட்டது; வசந்தி போய்விட்டாள்.

இதற்கு முன் நான் ஒருவனாகத்தான் மீண்டேன். இப்போதோ சித்ராவோடு நீந்த வேண்டியிருந்தது. நிலவையும் தென்றலையும் குழைத்து வசந்தி தந்த அன்புச் செல்வம் அவள். இப்போது எனக்குக் கடல் தெரியாது. வானம் தெரியாது. காற்றும் தெரியாது. சித்ரா மட்டுமே தெரியும்.

இந்தக் கப்பல்....

"அப்பா! அப்பா! அதோ பார்!" என்று கையைக் கொட்டினாள் சித்ரா.

"என்னம்மா?"

கூடத்துக் குளத்தில் எதிர் எதிரே வந்த இரண்டு கப்பல்கள் மோதிக் கொண்டன. பிறகு இரண்டுமாக ஒரே கதியில் பிரியாமல் கிழக்கு நோக்கி ஓடின. தண்ணீரின் நுழை வாயிலில் தயங்கிச் சிறிது நேரம் நின்றன. எப்படியோ அவை இரண்டும் பிரியாமல் அங்கும் நுழைந்து செல்லலாயின. எனக்கு இது வியப்பாக இருந்தது. என் வரையில் இது வரை கவிழாத கப்பலே கிடையாது.

பெருமூச்சு விட்டேன் நான்.



மழை நின்றது. இருள் சூழ்ந்து கொண்டது. சமையற்காரக் கிழவர் எங்களுக்கு உணவு படைத்து விட்டுப் படுக்கப் போய் விட்டார். அவருடைய குறட்டை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

"என்னம்மா!"

"நான் ஆனா ஆவன்னா எழுதுவேனே!"

"அப்படியா?"

"ஒன்னு, ரெண்டு நூறு எழுதுவேன்."

"பேஷ்! பேஷ்!"

"படம், பட்டம், ரம்பம் எல்லாம் எழுதுவேன்...அணில் பாடம் வரைக்கும் தெரியும்."

"பொய் சொல்றே!"

"நெஜமாத்தாம்பா...எங்க டீச்சர் நல்ல டீச்சர், அப்பா. இப்போ எழுதிக் காட்டட்டுமா!"

"வேண்டாம்டா, கண்ணே! காலையிலே எழுது. மார்க் போடறேன்."

"நேத்திக்கு நூற்றுக்குத் தொள்ளாயிரம் மார்க்கு போட்டாங்க எங்க டீச்சர்."

"உன் புத்திசாலித்தனத்துக்கு இன்னும் நிறையப் போடலாமே!"

சித்ராவுக்கு ஆனந்தம். தூங்கிப் போய் விட்டாள். ஆனால் நான் தூங்குவதெப்படி? வசந்தி போன பிறகு என் கப்பல் நகரவே இல்லை. நங்கூரம் பாய்ச்சியதுபோல் நின்று கொண்டேயிருக்கிறது.

காலையில் சித்ரா பள்ளிக்கூடம் சென்றதும், நான் என் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தேன். அரை மணி நேரம் கழித்துக் கதவு திறந்தது. சித்ரா உள்ளே வந்து புத்தகப்

பையைத் தூர எறிந்து விட்டுக் கட்டிலில் படுத்தாள். ஏன் பள்ளியிலிருந்து திரும்பி வந்து விட்டாள்?

"சித்ரா!"

"என்னப்பா?"

"பள்ளிக்கூடம் போகவில்லை?"

"போனேனே....இன்னிக்கு லீவு."

"எதற்கு அம்மா லீவு?"

"எங்க டீச்சர் லீவு. எனக்கும் லீவு."

இந்தப் பதிலைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பு வந்து விட்டது. "உங்க டீச்சர் லீவு என்றால் வேறே வாத்தியாரே இல்லையா? இப்படி வரக் கூடாது. சித்ரா!" என்றேன்.

அவளுக்கு என் வாதம் பிடிக்கவில்லை. முகத்தைச் சுளித்தாள். பிறகு புத்தகக் கட்டை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

என் அறைக்கு வந்து மறுபடியும் நடையும் குமைச்சலுமாகக் கிடந்தேன். மறுபடியும் அரை மணிகூட ஆகியிருக்காது. வாசல் கதவு திறந்தது. சித்ரா நுழைந்தாள். இந்தத் தடவை நான் கேட்கிறவரை அவள் காத்திருக்கவில்லை. "எனக்கு இந்த டீச்சரைப் பிடிக்கலைப்பா. நல்ல டீச்சர் இல்லை இவர்" என்று கூறினாள்.

அதற்கு மேல் அவளை வற்புறுத்த எனக்கு விருப்பமில்லை. விட்டு விட்டேன்.

தன் டீச்சரைப் பற்றி வாய் ஓயாது வர்ணிப்பாள் சித்ரா. தேவதா விசுவாசம் டீச்சர் மேல். எப்படியோ அவள் மனத்துக்கு ஆறுதலாக ஒரு நல்ல ஆசிரியை அமைந்தாளே என்று மகிழ்ந்தேன்.

இந்தத் தருணத்தில் எனக்கு மாற்றல் உத்தரவு வந்தது. நானாக விரும்பிக் கேட்ட மாற்றம்தான். ஒரு வேளை இடம் மாறினால் மன நிலையும் மாறும் என்று தோன்றியது.

சித்ராவை அருகில் இருந்த பள்ளியில் சேர்த்தேன். சமையற்காரக் கிழவர் என்னோடு ஒட்டிக் கொண்டு வந்திருந்தார்.

சித்ரா முதல் நாள் பள்ளியிலிருந்து வந்ததும், முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். "குழந்தை காலையில் சாப்பிட்டவள்தான். காப்பிகூட வேண்டாம் என்கிறாள்" என்றார் கிழவர்.

நான் கவலையோடு அவள் அருகில் சென்றேன். "சித்ரா! ஏனம்மா இப்படி உட்கார்ந்திருக்கே? உடம்பு என்ன செய்கிறது?"

"ஒன்றுமில்லைப்பா..."

எனக்கு உள்ளூறப் பயம், இந்தக் கப்பல் என்னை மோசம் செய்து விடப் போகிறதே என்று.

"காப்பி கூடச் சாப்பிட வில்லையாமே?"

"வேண்டாம்பா."

"ஏன்?"

அவள் என்னை நிமிர்ந்து பார்த்தாள். அவளா பார்த்தாள்! வசந்தி அல்லவா பார்த்தாள்! வாரி அணைத்துக் கொண்டு, "என்னடா, கண்ணு, சொல்லு. என்ன வேணும், சொல்லு?" என்று கூறினேன்.

"இந்த டீச்சரை எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை, அப்பா."

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. இதுவா காரணம்? "அட அசடே, போகிற இடத்துக்கெல்லாம் உன் டீச்சர் வர முடியுமா? இதோ பார், நாளைக்குக் கடுதாசி எழுதி உன் டீச்சரை வரவழைக்கிறேன். சரிதானே?" என்றேன்.

அவள் முகம் மலர்ந்துவிட்டது. "நெஜமா, எழுதுவாயா, அப்பா?" என்றாள்.

"இதோ எழுத ஆரம்பித்து விட்டேன்" என்று கூறி உட்கார்ந்தேன்.

ஆனால் நான் என்ன எழுதினேன் 'என்பது அந்தக் குழந்தைக்கு எப்படித் தெரியும்?" "ஏ விதியே, உன் கழுத்தை நொறுக்கிப் போட்டு விடும் வல்லமை எனக்கு இல்லையே! இத்தனை ஓட்டைக் கப்பல்களைக் கொடுத்து என் கைகளை ஏன் சளைக்கச் செய்கிறாய்? இதெல்லாம் உனக்கு விளையாட்டாக இருக்கலாம். ஆனால் இந்த விளையாட்டை என்மேல் தானா நீ ஏவ வேண்டும்? அதிலும் உயிருக்கும் உயிரான என் குழந்தை மீதுதானா நீ உன் கைத்திறனைக் காட்ட வேண்டும்? வேண்டாம். உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். எந்தப் புயலுக்கும், எந்தக் கொந்தளிப்புக்கும் சளைக்காத நல்ல கப்பலில் என்னை ஏற்றி விடு" என்று எழுதினேன்.

பார்த்துக் கொண்டே அருகில் நின்ற சித்ரா, "இந்தாப்பா, விலாசம் எழுது," என்று கவரை நீட்டினாள்.

அவளுடைய ஜாக்கிரதையைக் கண்டு எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவளை நான் ஏமாற்றுகிறேன். அது என்னால் முடியும். இதே போல் என்னை ஏமாற்றும் விதியிடம் என்ன செய்வேன்?

"உன் டீச்சர் பெயர் தெரியாதேம்மா?"

"வனஜா டீச்சர்னு எழுதுப்பா..."

"மிஸ் வனஜா டீச்சர் என்று எழுதிப் பள்ளிக்கூட விலாசத்தை எழுதினேன். "இந்தக் கடுதாசி கிடைத்ததும் உன் டீச்சர் வந்துடுவா. காப்பி சாப்பிடு, போ" என்று கூறினேன்.

"கவரைக் கொடுப்பா, தபாலில் சேர்த்து விடுகிறேன்!" என்று கூறிக் கையை நீட்டினாள் அவள்.

இதேதடா விளையாடி விடும் போலிருக்கிறதே என்று கலவரப்பட்டுப் போனேன். "தபால் ஸ்டாம்பு ஒட்டணுமே" என்றேன்.

"வேண்டாம்பா. எங்க டீச்சர் நல்ல டீச்சர்... ஸ்டாம்பு கேட்க மாட்டாள்."

வேறு வழியின்றி அந்தக் கடிதத்தைச் சித்ராவிடம் கொடுத்தேன். எடுத்துக் கொண்டு சித்ரா ஓடிவிட்டாள்.

அடுத்த இரண்டு நாட்களும் அவள் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போனாள். பாடங்களைப் படித்தாள். தன் டீச்சர் வந்து விடுவாள் என்கிற நம்பிக்கை அவளை ஊக்குவித்துக் கொண்டிருந்தது.

பத்து நாட்களுக்குப் பிறகு ஒரு பகல். உணவுக்கு வரும்போது சித்ரா எப்போதும் போல் வரவில்லை. வாசலிலிருந்து ஒரு குதி குதித்துக் கூடத்துக்கு வந்தாள். கையைக் கொட்டி ஆர்ப்பரித்தபடியே, "எங்க டீச்சர் வந்துட்டாளே.... எங்க டீச்சர் வந்துட்டாளே!" என்றாள்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. "என்ன? என்ன?" என்றேன்.

"ஆமாப்பா....கடுதாசி போனதும் அவள் வந்துட்டாப்பா!"

"உன்னிடம் அப்படிச் சொன்னாளா?"

"சொல்லாவிட்டால் தெரியாதா?"

"பேஷ்! இனிமேல் உனக்கு அப்பாகூட வேண்டாம். அப்படித்தானே?"

"போப்பா!"

அவள் ஓடி விட்டாள்.

நாட்கள் ஓடின.

ஒரு நாள் அலுவலகத்திலிருந்து வந்த நான் சித்ரா கட்டிலில் துவண்டு படுத்திருப்பதைக் கண்டேன். காலை முதல் வயிற்றுப் போக்காம். இப்போது காய்ச்சல் வேறு சேர்ந்து கொண்டது. கிழவர் கையைப் பிசைந்தபடி நின்றுகொண்டிருந்தார். என் கப்பல் ஆட்டம் கண்டுவிட்டதோ!

டாக்டரிடம் ஓடினேன். மருந்துக் கடைக்கு ஓடினேன். வீட்டுக்குள்ளே காரணமின்றி ஓடிக் கொண்டிருந்தேன்.

"சித்ரா, சித்ரா! என்னம்மா செய்கிறது?"

நடு இரவில் அவள் அருகில் அமர்ந்து புலம்பும் எனக்குப் பதில் கூற யார் வருவார்கள்? கிழவரின் குறட்டை வீட்டைத் தூக்கிக் கொண்டிருந்தது.

"சித்ரா! சித்ரா!"

பதில் இல்லை.

கட்டிலில் புரண்டு படுத்தாள். எப்படி இருந்த உடம்பு எப்படி ஆகிவிட்டது.

"அப்பா!"

"என்னம்மா?"

"அம்பி எங்கேப்பா?"

"இதோ இருக்கானேம்மா." பொம்மையை எடுத்துக் கொண்டு வந்து அவள் கையில் திணித்தேன்.

"அதோ டீச்சர்! எங்க டீச்சர் வராங்க!" கையைக் கொட்டி ஆர்ப்பரித்தாள் அவள்.

காய்ச்சலில் பிதற்றுகிறாள் என்றே எனக்குத் தோன்றவில்லை. நான் கூடத் திரும்பி விட்டேன். இருளில் பாதி திறந்திருந்த கதவு முழுவதும் திறந்து கொண்டது. அங்கே ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள்.

நான் வியப்புடன் அவளைப் பார்த்தேன்.

"சித்ரா!" ஒரே ஓட்டமாகக் கூவிக் கொண்டு கட்டிலை நோக்கிப் பாய்ந்தாள் அந்தப் பெண்.

"டீச்சர்!"

இரண்டு உள்ளங்கள் அங்கே கூடின. சிரித்தன; பேசின. நான் அந்தப் பெண்ணைப் பார்த்தேன். அவள் யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும். தக்க சமயத்தில் வந்து கப்பலைக் கவிழ்ந்துவிடாமல் காப்பாற்றினாளே! அது போதும்.

"மருந்து கொடுத்தீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"உம்..."

"இளைத்து விட்டாளே குழந்தை!" என்று கூறினாள்.

"எப்போதும் உங்கள் நினைவுதான்!" என்றவன் அவளைப் பார்த்தேன். மாநிறம் தான். கலைந்திருந்த கேசம் தன் அடர்த்தியையும் நீளத்தையும் வெளிக் காட்டியது. உருண்டைக் கண்களில் வேதனையின் வாட்டம் தேங்கி நின்றது. அழகைவிட அன்பின் ஆட்சி அவளிடம் கொடி கட்டியிருந்தது என்பதை உணர முடிந்தது.

"சித்ராவைப் பார்க்காமல் இருப்புக் கொள்ளவில்லை. தூக்கம் பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்தபோது குழந்தை கூப்பிட்ட மாதிரி இருந்தது. யார் என்ன சொன்னாலும் சரியென்று புறப்பட்டு விட்டேன்" என்று கூறினாள்.

"யார் எப்படி எண்ணினால் என்ன? ஓர் உள்ளத்தின் குரலை மற்றோர் உள்ளம் கட்டாயம் கேட்கும். செவிடாகிப் போன மரக் காதுகளைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை" என்றேன்.

அவள் என்னையே பார்த்தாள். பிறகு தலையைக் குனிந்து கொண்டு, "உங்கள் கடிதம் கிடைத்தது. ஆனால் கடிதமா அது? இரண்டு நாட்கள் நான் கலங்கிப் போய் விட்டேன்" என்றாள்.

"என்னை மன்னித்து விடுங்கள். சித்ராவைச் சமாதானப்படுத்த அந்தப் பைத்தியக்காரத் தனத்தைச் செய்தேன். அவளுக்கு உங்கள் மீது உயிர்!"

கட்டிலில் சித்ரா நிம்மதியாகத் தூங்கினாள். அவள் உடல் திடீரென்று தேறி விட்டதாக எனக்குத் தோன்றியது.

"கடிதத்தைப் பார்த்ததும் முதலில் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. கடைசியில் கடிதத்தின் கீழ் உருண்டை எழுத்துக்களில் 'சித்ரா' என்று எழுதியிருந்ததைப் பார்த்ததும்தான் ஊகித்துக் கொண்டேன்."

"அவள் அதில் கையெழுத்துப் போட்டிருந்தாளா?" என்று வியந்தேன்.

"ஆமாம்."

எனக்குச் சித்ராவின் முன்ஜாக்கிரதை வியப்பையே அளித்தது. இத்தகைய பிணைப்பு இவர்களுக்குள் எப்படி ஏற்பட்டது?

"அவள் தான் குழந்தை. ஏதோ ஆசைப் பட்டாள். ஆனால் என்னாலும் அந்தப் பிணைப்பிலிருந்து விடுபட முடியவில்லையே! மாற்றல் பெற்று இங்கே வருகிற வரையில் எனக்குத் தூக்கம்கூட வரவில்லை. சாப்பாடு பிடிக்கவில்லை" என்றாள் அவள்.

நான் பெருமூச்சு விட்டேன். "எனக்கும் மாற்றல் வேண்டும். யார் தருவார்கள்? விதியை நோக்கி இப்போது நான் ஒரு கடிதம் எழுதப் போகிறேன். அதில் நான் எழுதப் போவது..." என்பதற்குள் அவள் இடைமறித்தாள்.

"எனக்குத் தெரியும். இந்த இரவில், இருளில் என்னை அழைத்து வந்த சக்திக்குத் தலை வணங்குகிறேன்" என்றாள் அவள்.

அதே சமயம் கட்டிலில் புரண்ட சித்ரா, "அம்மா!" என்று முனகினாள்.

"இதோ வந்துவிட்டேண்டா, கண்ணு!" என்று குனிந்தாள் வனஜா.

நான் அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தேன்.

தாய்மையின் பரிவும் பிஞ்சு நெஞ்சின் ஏக்கமும் சங்கமமாகிய அந்த உள்ளக் கடலிலே, இதுகாறும் நங்கூரம் பாய்ச்சி நின்ற என் கப்பல் மெள்ள மெள்ளத் தன் பயணத்தைத் துவக்கியது.

அத்திகிரி அருளாளன்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

திருமழிசை ஆழ்வார் திருமழிசையை விட்டுக் காஞ்சிபுரத்துக்கு வருகிறார். அங்கே **கணி கண்ணன்** என்ற புலவன் இவருக்குச் சிஷ்யனாகவும் நண்பனாகவும் அமைகிறான். இருவரது புகழையும் பெருமையையும் கேட்ட பல்லவ அரசன் கணிகண்ணனை அழைத்து, அவரது ஆச்சாரியாரை அரண்மனைக்கு அழைத்துவந்து தன்மேல் ஒரு பாட்டு பாடச்செய்ய வேண்டும் என்கிறான். 'நாக்கொண்டு மானிடம் பாடேன்' என்ற வைராக்கியம் உடையவர் ஆயிற்றே, அவரை எப்படிக் கூப்பிட்டு வருவது என்று கணிகண்ணன் சொல்கிறான். அப்போது நீராவது என் மீது ஒரு பாட்டுப் பாடுமே என்கிறான் அரசன். குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனில்லையே நான். என்னாலும் அது இயலாதே என்று கையை விரித்து விடுகிறான் கணி கண்ணன். உடனே கோபமுற்று அரசன் உம்மை நாடு கடத்துவேன் என்கிறான். கணி கண்ணனும் சளைக்கவில்லை. நீ யென்ன என்னை நாடு கடத்துவது? நானே போகிறேன் என்று சொல்லித் தன் ஆச்சாரியரான திருமழிசை ஆழ்வாரிடமும் தகவல் கொடுத்துப் புறப்பட்டு விடுகிறான் காஞ்சியை விட்டு. சிஷ்யனுக்குப் பின்னேயே ஆழ்வாரும் புறப்படுகிறார். புறப்படுவதற்கு முன் கச்சி மணிவண்ணப் பெருமானுக்கும் ஒரு கட்டளை பிறப்பித்து விட்டே புறப்படுகிறார். கட்டளை இதுதான்.

> கணிகண்ணன் போகின்றான்
> காமருபூங் கச்சி
> மணிவண்ணா! நீ கிடக்க
> வேண்டா—துணிவுடைய
> செந்நாப்புலவனும் செல்கின்றேன்
> நீயும் உன்றன்
> பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்

சிஷ்யன் பின்னாலே குரு, குருவின் பின்னாலே பெருமாள், பெருமாள் பின்னாலே ஊரில் உள்ள மக்கள் எல்லோருமே கிளம்பி விடுகிறார்கள் காஞ்சியை விட்டு. பல்லவ மன்னன் தான் அறியாது செய்த பிழைக்காக இரங்கி, ஓடிச் சென்று கணி கண்ணன் காலில் விழுந்து அவனைத் திரும்பும்படி அழைக்கிறான். அவனும் 'பிகு' பண்ணாமல் ஊர் திரும்புகிறான். மழிசையாரும் திரும்புகிறார், பெருமானுக்கு மாற்று உத்தரவு போட்டு விட்டு.

> கணிகண்ணன் போக்கொழிந்தான்
> காமரு பூங்கச்சி
> மணிவண்ணா நீகிடக்க
> வேண்டும்—துணிவுடைய
> செந்நாப்புலவனும் செலவொழிந்தேன்
> நீயும் உன்றன்
> பைந்நாகப் பாய்விரித்துக்கொள்

என்பதே மாற்று உத்தரவு. உத்தரவுக்குக் கீழ்ப்படிகிறார் பெருமாள். இந்தப் பெருமாள் அன்று முதல் **சொன்னவண்ணம் செய்த பெருமாள்** என்று பெயர் பெறுகிறார். இந்த யதோத்காரியே கோமளவல்லியுடன் திருவெஃகாவில் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கிறார்.


இந்தப் 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலின்' இலக்கியப் பிரசித்தியோடு போட்டி போட்டுக்கொண்டு, காஞ்சியில் மற்றொரு இடத்தில் கொலு விருப்பவனே **வைகுந்தப் பெருமாள்**. சிற்பக்கலைக்கு இலக்கியமாக, கைலாசநாதர்கோயில் என்றால் விஷ்ணு அளிக்கும் பரிசு இந்தப் பரமேசுவர **விண்ணகரம்**. இதில் விசேஷம் என்னவென்றால் கைலாசநாதர் கோயிலைக் கட்டிய ராஜசிம்ம பல்லவன் மகனான பரமேசுவரவர்மனே வைகுண்டப் பெருமானுக்கு இந்தப் பரமேசுவர விண்ணகரத்தைக் கட்டியிருக்கிறான். அத்தனை சமரச மனோபாவம் தந்தைக்கும் மகனுக்கும். வைகுண்டநாதன் பரம பதத்தில் வீற்றிருக்கும் திருக்கோலம், பாலாழியில் அறிதுயில் கொள்ளும் நிலை எல்லாவற்றையும் காண வேண்டுமானால் இந்தக் கோயிலுக்குள் நுழைய வேணும். இது தவிர பல்லவ மன்னர் சரித்திர பரம்பரையைப் பற்றி ஆராய்ச்சி பண்ண விரும்புபவரும், இக்கோயிலுள் நுழைந்து உள் பிராகாரத்தை ஒரு சுற்றுச் சுற்றினால், கல்லிலே உருவாகி யிருக்கும் சரிதையையே தெரிந்து கொள்ளலாம் எளிதாக.

இன்று நாம் காண இருப்பது, இந்த இலக்கியப் பிரசித்தி பெற்ற யதோத்காரியையும் அல்ல, சரித்திரப் பிரசித்திபெற்ற வைகுண்டப் பெருமானையும் அல்ல. இருவருக்கும் மேலான அருளாளனாக வரப்பிரசித்தியுடைய **வரதரைக்** காணத்தான் இவ்வளவு தூரம் நடந்து வந்திருக்கிறோம். காஞ்சியில் உள்ள விஷ்ணு கோயில்களிலெல்லாம் பெரிய கோயில் இந்த **வரதராஜப் பெருமான் கோயில்**தான். ஆம்! அவன் அத்திகிரி என்னும் மலை மேலேயல்லவா ஏறிக் கொண்டு நிற்கிறான். படைப்புத்தொழில் புரியும் பிரமனுக்கு மறதி ஏற்படுகிறது. ஞாபக சக்தி குறைகிறது. (சரிதான்! அப்படி அவர் ஞாபக சக்தி இழந்திருந்த காலத்தில் செய்த படைப்புகளே, கால் இல்லாமலும், கை இல்லாமலும், தலை இல்லாமலும் ஏன், மூளை இல்லாம

மகாமரியாதை வாயில் - நாலு கால் மண்டபம்



லும் பிறக்கும் பிறவிகள் போலும்.) பிரமனே இதைப் போக்கிக் கொள்ள ஒரு யாகம் செய்கிறார். யாக குண்டத்திலிருந்து எழுந்த புண்ணிய கோடி விமானத்தில் தேவராஜனை வரதன் தோன்றி பிரமனுக்குள்ள மறதியைப் போக்குகிறான். அன்று பிரமனுக்குக் காட்சி கொடுத்த கோலத்திலேயே தங்கி விடுகிறார் இந்தத்தலத்திலே. திசை யானைகள் பூஜித்த தலம் ஆனதினால் அத்திகிரி என்று பெயர் பெற்றது என்பர் ஒரு சாரார். இல்லை, ஐராவதம் என்ற தேவேந்திரனது யானையின் மீது ஏறி நின்று தரிசனம் கொடுத்ததால் அத்தியூர் என்று வழங்கப்படுகிறது என்பர் மற்றொரு சாரார். யானை போன்ற உயர்ந்த கட்டுமலையிலே பெருமாள் எழுந்தருளியிருப்பதுஎன்னவோ உண்மை. மலைமேல் நிற்கும் இம் மாதவனைப் பூதத்தாழ்வார்,



நூற்றுக்கால் மண்டபத் தூண்

அத்தியூரான் புள்ளை ஊர்வான்
அணிமணியின்
துத்திசேர் நாகத்தின் மேல்
துயில்வான்—முத்தீ
மறையாவான் கடல் நஞ்சு
உண்டான் தனக்கும்
இறையாவான் எங்கள் பிரான்


என்று பாடி மகிழ்கிறார்.

இந்த அத்தியூரானது கோயில் 1200 அடி நீளமும், 800 அடி அகலமும் உடைய பெரிய மதில் சூழ்ந்த கோயிலாக இருக்கிறது. இவரைக் காண மேலக்கோபுர வழியாகத்தான் நுழைய வேணும். பரந்த மைதானத்தைக் கடந்தால், நல்ல உயரமான தூண்களும் அழகான கோபுரமும் உடைய நாலு கால் மண்டபத்தைக் காண்போம். இதன் பின் கோபுரத்தோடு கூடிய மகா மரியாதை வாயிலையும் கடந்தால் திருமஞ்சன மண்டபத்துக்கு வந்து சேருவோம். இனி வட பக்கம் திரும்பிப் பன்னிரண்டு படிக்கட்டுகளில் ஏறினால் ஒரு மகா மண்டபத்தை அடைவோம். அந்த மகா மண்டபத்தையும் அதற்கு மேற்கேயுள்ள முக மண்டபத்தையும் கடந்தால் **பெருந்தேவித் தாயார்** சந்நிதி வந்து சேருவோம். பெருந்தேவி உண்மையிலேயே பெரிய இடத்துத் தேவி என்பதை அவள் உடுத்தியிருக்கும் ஆடையும், அணிந்திருக்கும் நகைகளுமே சொல்லும். நிரம்பச் சொல்வானேன்? ஒரே வைர மயம். உச்சி முதல் உள்ளங்கால் வரை அப்படியே வைத்து அழுத்தியிருக்கிறார்கள்.

கற்சிலையாகவும், செப்புச் சிலையாகவும் இருக்கிறாள் அவள் என்பர். என்றாலும் அவளது திருமுக மண்டலத்தைத் தவிர, மற்றவை எல்லாம் நவரத்தின சிலையாகவே தோன்றும். இவளை வணங்கி அருள் பெற்றபின் திரும்பவும் படிகள் இறங்க வேண்டும். கருடாழ்வார் சந்நிதிப்படி கடக்க வேண்டும். கருடாழ்வாரை எதிர்நோக்கி யோகாசனத்தில் இருப்பவர் **குகா நரசிம்மர்**. இவர் ஒரு சிறு குகைக்குள்ளேயே இருக்கிறார். இவரைத்தான் 'மன்று மதில் கச்சி வேளுக்கைஆளரி' என்று **திருமங்கை மன்னர்** பாடியிருக்கிறார். இவரே இக் கோயிலில் முதல் முதல் பிரதிஷ்டை செய்யப்பட்டவர் என்பது புராண வரலாறு.

இந்தக் குகை நரசிம்மரை வலம் வந்து மேற் பிராகாரத்துக்கு வந்து சில படிகள் ஏறினால் ஒரு சிறு மண்டபம் வரும். அதன் பின்னும் இருபத்திநான்கு படிகள் ஏறவேணும். இந்தப் படிகளை ஏறிக் கடந்து பின்தான் அத்திகிரி வந்து சேர்வோம். அதன் பின்னும் ஆறு படிகள் ஏறிக் கடந்தால் அத்திகிரி அருளாளனைக் கண்டு தரிசிப்போம். ஆஜானுபாகுவாக நீண்டுயர்ந்து தங்கக் கிரீடமும், தங்கக் கவசமும் தரித்துக் கம்பீரமாக நிற்கிறார் அவர். இந்த அழகு வாய்ந்த வரதர் அருள்கொழிக்கும் திருமுக விலாசம் உடையவர். இவரைக் கண்டு தானே, 'ஐயுறவும், ஆரிருளும், அவ்வழியும் அடைந்தவர்க்கு மெய்யருள் செய்திடும் திருமால் வேழமலை மேயவனே' என்று மெய்யுருகி நின்றிருக்கிறார் **வேதாந்த தேசிகர்**. இவரது உற்சவமூர்த்தம் மிக்க அழகு வாய்ந்தது. அவரது முகத்தில் நிறைய வடுக்கள் இருக்கின்றன. அவையெல்லாம் போரில் ஏற்

வைகுண்டப் பெருமாள் கோயில்





தூத்துக்குடி ஹார்வி மில்ஸ் உதவி மானேஜர் திரு டி. ஆர். பார்த்தசாரதி அவர்களின் புதல்வி சௌ மதுரவல்லிக்கும் திரு என். வெங்கடேசனுக்கும் விவாகம் நடைபெற்றது.



திரு பகஷி. சு. சிங்காரம் செட்டியார் அவர்களின் புதல்வி சௌ. பர்வதகுமாரிக்கும் திரு பாலசுப்பிரமணியத்துக்கும் திருமணம் விமரிசையாக நடந்தது.

பட்ட காயங்கள் என்பார்கள். மூர்த்தி சற்றுப் பின் சாய்ந்து மிடுக்காகவே இருக்கிறார். இவரைப் பல கோலங்களில் அலங்காரம் பண்ணிப் பார்க்க விரும்புபவர்கள் உத்சவ காலங்களிலே இங்கு செல்ல வேணும். முகம்மதியப் படையெடுப்பின் காரணமாக, இவ்வரதர் 1690-ல் ஆலயத்தினின்றும் எடுத்துச் செல்லப்பட்டு உடையார்பாளையத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்தார் என்றும், மறுபடியும் 1710-ல் தோடர்மால் என்பவர் மூலம் திரும்பவும் கோவிலுக்குக் கொண்டு வரப்பட்டார் என்றும் அறிகிறோம். இதை ஞாபகப்படுத்தும் விழா ஒன்று இன்றும் நடந்து கொண்டிருக்கிறது.

அத்திகிரி அருளாளனை வணங்கியபின், கச்சி வழித்தான் மண்டபம் வழியாக வந்து, மலையை விட்டு இறங்கி வெளியே வரலாம். கோயிலை விட்டு வெளியே வருமுன், முற்றத்தில் உள்ள நாலு கால் மண்டபத்துக்கு வடக்கே இருக்கும் **அனந்த புஷ்கரணியையும்** அதனை அடுத்து நூற்றுக்கால் மண்டபத்தையும் பார்த்து விடலாம். குதிரையையும் யாளியையும், அவற்றின் மீது ஏறிச் சவாரி செய்யும் வீரர்களையும் உடைய கற்றூண்கள் நிறைந்தது இம் மண்டபம். மன்மதன், ரதி முதலிய சிற்ப வடிவங்களையும் கல்சங்கிலி முதலிய திறன்மிகு வேலைகளையும் அங்கு கண்டு களிக்கலாம். இவை வேலூர் விரிஞ்சிபுரம் முதலிய தலங்களில் உள்ள நாயக்கர் காலத்துச் சிற்ப வடிவங்களோடு ஒப்பிடத் தகுந்தவை அல்ல. காலத்தால் பிற்பட்டதோடு கலை அழகிலுமே பிற்பட்டதாகத் தான் தெரிகின்றன. நூற்றுக்கால் மண்டபத்துக்கு வடக்கே அனந்தபுஷ்கரணி. **அனந்தனான ஆதிசேஷன்** இருந்து தவம்செய்த இடம். இந்த அனந்த சரஸின் நடுவிலே ஒரு நீராழி மண்டபம். அந்த மண்டபத்தின் அடித்தளத்தின் உள்ளே ஒரு சிறிய **அத்திவரதர்** இருக்கிறார். அத்திவரதர் என்றால் அத்திமரத்திலே உருவானவர்தான். அவர் அந்தத் தண்ணீருக்குள்ளேயே முழுகிச் சயனத் திருக்கோலத்திலேயே இருக்கிறார். நாற்பது வருஷங்களுக்கு ஒரு முறையே குளத்தில் உள்ள நீரையெல்லாம் இறைத்து அவரை வெளியே கொணர்



ஸ்ரீ தண்டபாணிக்கும் சௌ திரிபுரசுந்தரிக்கும் சிக்கலில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.



கோவை முனிசிபல் பள்ளி ஆசிரியர் திரு கிருஷ்ணனுக்கும் சௌ. ஜயலக்ஷ்மிக்கும் விவாகம் சிறப்பாக நடந்தேறியது.



ஜி. ஈ. ஸி. இந்தியா கம்பெனியின் உதவி மானேஜர் திரு பீ. ஏ. சுந்தரம் அவர்களின் புதல்வி சௌ ஜயலக்ஷ்மி திரு வி. மகாதேவனை மணம் புரிந்து கொண்டார்.



ராஜா ஸ்ரே கம்பெனியின் அதிபர் திரு வி. ஆர். சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி சௌ. சரோஜாவுக்கும், டாக்டர் எம். வி. கணபதிக்கும் திருமணம் நடந்தது.

கிறார்கள். ஒரு மண்டல காலம் பூசை புனஸ்காரம் எல்லாம் நடக்கும். அதன்பின் திரும்பவும் யதாஸ்தானத்துக்கே, ஆம்! தண்ணீருக்குள்ளேயே முழுகி விடுவார். ஆழ்ந்த தூக்கத்திலும் அமிழ்ந்து விடுவார். (சரிதான், இவர் கும்பகர்ணனையுமே தூக்கி அடிக்கும் நித்ரத்வப் பெருமை உடையவர் போலும்!) இந்த அத்திவரதரே ஆதிவரதர் என்பது கர்ண பரம்பரை. இவற்றையெல்லாம் பார்த்த பின்னும் அவகாசம் இருந்தால், இக்கோயிலிலேயே பெரிய கோபுரமாக விளங்கும் கிழக் கோபுரத்தையும் பார்க்கலாம். நந்தவனம் முதலியவைகளையும் கண்டுகளிக்கலாம்.

வரதர் கோயிலைவிட, அவருக்கு நடக்கும் உத்சவங்கள் பிரசித்தமானவை. வரதரது பிரம்மோத்சவம் பங்குனி சித்திரை மாதங்களில் நடக்கும் பிரம்மோற்சவத்தை விடப் பிரசித்தியுடையது. வைகாசி பூர்ணிமையில் நடக்கும் கருடசேவை. அதிகாலையிலேயே வரதராஜர் கருடன்மீது ஆரோகணித்துக் கோயிலை விட்டுப் புறப்படுவார். இந்தக் கருடசேவையைக் காணப் பல்லாயிரக்கணக்கான மக்கள் காத்துக் கிடப்பார்கள் வீதிகளில். 'அஞ்சேல்' என்று அருள் புரியும் அத்திகிரி அருளாளன் சங்கு சக்ரதாரியாய்க் கருடன்மீது கம்பீரமாக எழுந்தருளும் காட்சி கண் கொள்ளாக்காட்சியாக இருக்கும். 'கஞ்சி வரதப்பா!' என்றால் 'எங்கு வருதப்பா!' என்று கேட்கும் ஏழை ஏதலர்கள் மலிந்த நாட்டிலே கச்சி வரதன் எல்லோருக்கும் அருள் புரியும் அருளாளனாக இருக்கிறான் என்ற நம்பிக்கையே மக்கள் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்க வேண்டும்.

இந்த அத்திவரதர் அருளுக்குப் பாத்திரமான பக்தர்கள் எத்தனையோ பேர். காஞ்சியிலே மனைவியுடன் தங்கியிருந்து குடும்பம் நடத்திப் பின்னர் துறவு மேற்கொண்டவர் **ராமானுஜர்**. காஞ்சியில் இருந்தபோது அருளாளன் அபிஷேகத்துக்கு இரண்டு மைலுக்கு அப்பால் உள்ள சாலைக் கிணற்றில் இருந்து திருமஞ்சன நீர்த்தத்தைச் சுமந்து கொண்டு வந்தவர் அவர். ராமானுஜருக்குப் பின் வைணவக் கோட்டையைக் கட்டிப் பாதுகாத்த பேரறிவாளன் **வேதாந்த தேசிகர்.**



சென்ட்ரல் ரயில்வேயைச் சேர்ந்த திரு துரைசாமிக்கும் சௌ. பிரமீளாவுக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் திரு பிரேம்ஜியும் சௌ. கமலியும் மணம் புரிந்துகொண்டனர்.

அவருமே அத்திகிரியானிடம் அளவிலாப் பக்தி கொண்டவர். 'காசி முதலாய நன்னகர் எல்லாம் கார்மேனி அருளாளன் கச்சிக்கு ஒவ்வா!' என்ற அழுத்தமான கொள்கை உடையவர். ராமானுஜரது ஆசிரியர் என்று சொல்லத்தக்க பெருமை உடைய **திருக்கச்சி நம்பியும்** வரதராஜனின் நல்லருளுக்கு ஆளானவர். இவரைப் பற்றி ஒரு சுவையான கதை.

வரதனுக்குக் கைங்கர்யம் செய்து நேருக்கு நேர் பேசும் வாய்ப்பும் பெற்றிருக்கிறவர் அவர். அதனால் தான் எல்லோரினும் சிறந்தவர் என்ற கர்வம் அவருக்கு. இவருடைய அடிப்பொடியைத் தலையில் அணிந்து கொள்கிறான் தாழ்த்தப்பட்ட ஒருவன். இவனைப் பற்றி வரதனிடம் கேட்டபோது, அவனுக்கு முக்தி நிச்சயம் என்கிறார் அவர். அவனோ மோக்ஷ உலகத்திலும் நம்பியின் அடிப்பொடி சூடுவதையே பாக்கியமாகக் கருதுகின்றான். ஆதலால் திரும்பவும் வரதனிடம், தனக்கும் மோக்ஷம் சித்திப்பது உறுதி தானே என்று கேட்கிறார் நம்பி. அது சந்தேகத்துக்கு உரியது என்று கையை விரித்து விடுகிறார் வரதர். பகவத் பக்தியைக் காட்டிலும் பாகவத அபிமானமே சிறந்தது என்பதை வரதராஜரே திருக்கச்சி நம்பிக்குக் கற்பித்தார் என்று பெறப்படுகிறது இதனால்.

இராமானுஜர், வேதாந்த தேசிகர், திருக்கச்சி நம்பிகளைப் போலவே, **கூரத்தாழ்வாரும்** இங்கேயே தங்கி, வைணவ மதப் பிரசாரம் செய்த பக்தர். இன்னும் எண்ணிறந்த பக்தர்கள் ஆபரணங்களை வரதருக்கு அளித்து மகிழ்ந்திருக்கிறார்கள். வெங்கடாத்திரி சுவாமிகள் அளித்துள்ள கொண்டை அழகுடையது. அதைவிடப் பிரபலமானது கிளைவ் அளித்துள்ள மகாப் பதக்கம். இந்த வரதனை,

நீலமே, காரின் முகிலே
நெடும் கடலின்
கோலமே அத்திகிரிக்
கோமானே—மூலமென
மாத்தாமரை மடுவில்
மால்யானை ஓலமிட
காத்தாய் கடைபோகக் கா

என்று நாமும் கூப்பிடலாம், **பெருந்தேவனாரோடு** சேர்ந்து. கூப்பிட்டால் அவனுமே ஓடி வருவான் கருடன் மேல் ஏறிக் கொண்டு

தமிழ் கூறும் நல்லுலகம்

பம்பாய் வடக்குப் பகுதியிலுள்ள மாதுங்காவில் கலை, இலக்கிய, கலாசாரத்துறையில் ஐந்து ஆண்டுகளாகப் பணி செய்து வரும் பாரதி கலா மன்றத்தின் இவ்வாண்டு பாரதி விழா செப்டம்பர் 26, 27, 28 தேதிகளில் மூன்று நாட்கள் கலைவிழாவாக நடைபெறும்.

இலக்கியமேதைகள் பலர் விழாவில் கலந்து கொண்டு மூன்று நாட்களும் சொற்பொழிவாற்றுவார்கள். விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பாரதி பாடல், கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். பம்பாய் மக்களுக்கு இலக்கிய விருந்துடன் சிறந்த கலை நிகழ்ச்சிகளுக்கும் பாரதி கலா மன்றத்தார் ஏற்பாடு செய்துள்ளனர்.

★

பம்பாய் தென்னிந்திய ஆதிதிராவிட மகாசன சங்கத்தின் இருபதாவது ஆண்டு பேரவைக் கூட்டம் ஆகஸ்டு 23 ந் தேதி சங்கத் தலைவர் திரு வி. எஸ். பால்ராக அவர்கள் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது.

புத்தாண்டு நிர்வாகிகள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

★

ரூர்கேலா தமிழ் இலக்கிய மன்றத்துவக்க விழாவும், மன்ற நூல் நிலையத் திறப்பு விழாவும் அண்மையில் விமரிசையாக நடந்தேறின. நூல்நிலையத் திறப்பு விழாவுக்குக் கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் திரு ப. ந. தியாகராசன் அவர்கள் தலைமை வகித்துச் சொற்பொழிவாற்றினர். மாலையில், மன்றத் துவக்க விழாவுக்கு ரூர்கேலா இந்துஸ்தான் எஃகு தொழிற்சாலை நிலைய நிர்வாகி திரு எம். கணபதி அவர்கள் தலைமை வகித்து, மன்றத்தினைத் துவக்கி வைத்தார். திரு ப. ந. தியாகராசன் அவர்கள் 'நமது இலக்கியப் பரம்பரை' என்பது பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். கலை நிகழ்ச்சிகளுக்குப் பின் விழா இனிது முடிவடைந்தது.

★

"**இ**ந்தோர் வாழ் தென்னிந்திய பக்த கோடிகள் சமீபத்தில் ஸ்ரீகுமாரய்ய அவர்கள் இல்லத்தில் ஒன்றுகூடி "ஸ்ரீ கண்ணன் பிறந்த கோகுலாஷ்டமி" நன்னாளை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பித்து, பஜனையுடனும், ஸ்ரீமதி ஸரோஜா சர்மா அவர்களின் இன்னிசைக் கச்சேரியுடனும் விமரிசையாக நடந்தேறியது.

★

கோரேகான் தமிழ்ச்சங்கத்தினர் பம்பாய் வந்திருந்த பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களுக்கு வரவேற்பு அளித்துக் கௌரவித்தனர். பேராசிரியர் அவர்கள் இன்றையத் தமிழகச் சூழ்நிலையையும், வெளிநாட்டுத் தமிழர்களின் பணியையும் கூறி, இலக்கியச்சுவை ததும்பும் ஓர் அற்புதச் சொற்பொழிவாற்றினர்.

கடந்த 6–9–59ல் சங்கம் திரு கல்யாணசுந்தரனார் நினைவு நாளைக் கொண்டாடியது. சங்கத்தலைவர் திரு அரிஹரன் அவர்கள் திரு வி. க. வின் தொண்டுகளைக் குறிப்பிட்டார். பல அன்பர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கண்கள் உறங்காவோ?

மாயாவி

அத்தியாயம் 9

இது உறுதி

சுந்தரம் அந்தச் சில நிமிஷங்கள் பிசாசாக மாறி விட்டான். அவன் அறைக்குள்ளே பாய்ந்த பாய்ச்சல், வீணாவைத் தானாவதியின் இரும்புப் பிடியிலிருந்து இழுத்த இழுப்பு, பிறகு அவனை ஒரு பக்கமாகத் தள்ளி விட்டுத் தானாவதியை மொத்திய மொத்தல் எல்லாம் மனிதச் செயல்களாக இருக்கவில்லை; அசுர சக்தி வாய்ந்த ஒரு பிசாசின் செயல் போலவே இருந்தன. அவனுடைய செயல்கள் மட்டுமல்ல; தோற்றம்கூட அப்பொழுது பேய்த் தோற்றமாகவே இருந்தது. அழகிய கிராப்புத் தலை அலங்கோலமாகக் கலைந்திருந்தது. கண்கள் உதிரச் சிவப்பாக மின்னின. முகம் கோவையாகச் சிவந்திருந்தது. பற்களிலே ஒரு வெறிக் கடிப்பு. இவற்றுடன் அழுக்குத் துணியைப் பாறையில் ஓங்கி அடிப்பது போல் இரு கைகளாலும் அவன் தானாவதியைப் புடைத்துக் கொண்டிருந்த காட்சியைக் காண வீணாவுக்கே சிறிது பயமாகத்தான் இருந்தது.

கடைசியில் அவன் கைகள் ஓய்ந்தன. ஆத்திரம் ஓரளவு தீர்ந்தது. அத்தனை அடியையும் அசட்டையாக விழுங்கி ஏப்பம் விட்டவன் போல் தரையில் அசையாது கிடந்த தானாவதியைத் தனது பூட்ஸ் காலால் இடுப்பில் ஒரு உதை கொடுத்து எழுப்பினான். "ஓடு நாயே! இனிமேல் யாரிடமாவது இப்படிக் கேவலமாக நடந்துகொண்டாயானால் உன் உயிர் உன்னுடையதில்லை. ஓடு சீக்கிரம்" என்று மீண்டும் அவனுடைய முதுகில் ஒரு குத்து விட்டுக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினான்.

அப்போதைக்குச் 'செத்தோம் பிழைத்தோம்' என்று ஓடினான் தானாவதி. அவன் தெருவில் சென்று மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்தான் சுந்தரம். பிறகு பித்துப் பிடித்துப் போய் நின்றுவிட்ட வீணாவை நோக்கி ஒரு நெடு மூச்சு விட்டுக் கசங்கிப் புழுதி படிந்துவிட்ட தனது கோட்டு, பாண்டு ஆகியவற்றைத் தட்டிச் சீர்ப்படுத்திக்கொண்டு வாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

ஒரு நிமிஷத்துக்குள் ஒருவர் மனத்தில் ஓராயிரம் எண்ணங்கள் சுழலக் கூடுமென்றால் அப்பொழுது வீணாவின் உள்ளத்தில் குறைந்தது ஐயாயிரம் எண்ணங்களாவது சுழன்றுதான் இருக்க வேண்டும்.

ஏனென்றால் அவள் தானாவதியிடம் சிக்கிக் கொண்டதற்கும் இதோ சுந்தரம் அவளை மீட்டுவிட்டுப் போய்க்கொண்டிருப்பதற்கும் இடையே ஐந்து நிமிஷங்கள் ஓடிவிட்டிருந்தன. ஆனால் வீணாவின் உள்ளத்தில் அப்பொழுது ஆயிரம் எண்ணங்களும் சுழலவில்லை; ஐயாயிரம் எண்ணங்களும் சுழலவில்லை. ஒரே ஒரு கேள்வி தான் அந்த ஐயாயிரம் எண்ணங்களின் வேகத்துடன் சுழன்றது. "இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்?"


தன்னைக் காப்பாற்றியதற்காகச் சுந்தரத்துக்கு வெறுமனே வந்தனம் மட்டும் தெரிவித்து விட்டுப் போக விட்டு விடுவதா, அல்லது...?

கேள்வி விரிந்தது. வந்தனம் தெரிவிக்க வேண்டியது என்னவோ கடமைதான். அவர் வந்து தன்னை மீட்டிராவிட்டால் இந்நேரம்....அவள் உள்ளம் அதை நினைக்கவே கூசியது. ஆனால் சுந்தரத்துக்கு வந்தனம்தெரிவித்ததோடு பிரச்னை தீர்ந்து விடவில்லையே! அவன் எதற்குப் பயந்தானோ, அது நடந்தே விட்டதே!

மாலையில் துயர வெள்ளம் மடை திறந்து பாய விகாஸ் உரைத்த மொழிகள் அவள் காதுகளில் அப்பொழுது கணீரென்று ஒலித்தன.

"ஆம் வீணா! உங்களைப் போன்றவர்களின் அசட்டுப் பிடிவாதமும், ஆதரவற்ற நிலையும் எந்த மனிதனையும் அரக்கனாக்கி விடும்!"

அவன் அப்படிக் கூறிச் சில மணி நேரம்கூட ஆகவில்லை. அதற்குள் அது மெய்ப்பிக்கப்பட்டு விட்டது. அப்படியானால் தங்களுக்குப் பாதுகாப்புக் கவசம் அவசியம்தான்! ஆனால் அந்தக் கவசத்தைப் பூணத் தீர்மானித்த பிறகு அதை உதறியவளாயிற்றே நான்! அதுவும் எதற்காக உதறினேன்? விளையாட்டுப் போக்காக உதறினேனா? அசட்டையாக உதறினேனா? இல்லை, ஆணித்தரமான காரணம் ஒன்றுக்காக உதறினேன். ஆயிரக்கணக்கானவர்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று அணியத் துணிந்த அந்தக் கவசம் நான் உயிரென நேசித்து வரும் மாலாவுக்கு இயல்பாக



வும் எளிதாகவும் கிட்ட இருக்கும் வாழ்வைப் பறித்துவிடும் என்றல்லவா அதை உதறித் தள்ளினேன்! ஆகையால் இப்பொழுது நான் என்ன செய்வது?

அன்று என் செயல் வடிகட்டின தன்னலமாகும் என்று அதைச் செய்வதில்லை என உறுதி பூண்டேன். ஆனால் இப்பொழுது அது சமூகத்தாரின் கண்களில் தன்னலமாகப் பட்டாலும் என் வரையில் நிச்சயமாகப் பாதுகாப்புக் கவசந்தான் என்பது நிதரிசனமாகி விட்டதே!

வீணாவால் சட்டென்று ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. அவிழ்க்க முடியாத இரண்டு குறுக்குச் சிக்கல்களுடைய கேள்வியாக இருந்தது அது. ஒரு சிக்கலை அவிழ்க்கப் போனால் மற்றொன்று இன்னும் நன்றாக இறுகிக் கொண்டது. அதே சமயம் அவள் உடனடியாக ஏதாவது ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டியும் இருந்தது.

இதோ சுந்தரம் கிளம்பி விட்டார். நான் எப்படிக் கெட்டு அழிந்தாலும் பரவாயில்லை; மாலா வாழ்ந்தால் போதும் என்று முடிவுறுத்துவதாக இருந்தால் அவரை நிறுத்தி வந்தனம் மட்டும்தெரிவித்து அனுப்பினால்போதும். அல்லது நான் தன்னலமெனக் கருதியது தன்னலமில்லை; அது தற்காப்பு என்று கருதி அதை ஏற்க முடிவு செய்தால், அம்முடிவையும் இப்பொழுதே சுந்தரத்திடம் வெளியிட்டாக வேண்டும். ஏனென்றால் இப்பொழுது அதை அவரிடம் வெளியிடத் தவறினால் பின்னர் எப்பொழுதுமே வெளியிட முடியாது போய் விடலாம். இவ்வளவு தூரத்துக்கு வந்த பிறகுகூட என் மனம் மாறவில்லை என்று கண்டால், இனி அது என்றுமே மாறாது என்ற முடிவுக்குத்தான் அவர் வந்து சேருவார். பிறகு, ஏற்கனவே என்னைச் சந்திப்பதைத் தவிர்த்து வரும் அவர், கனவில்கூட என் முகத்தில் விழிக்க விரும்ப மாட்டார்.

" ஆமாம், விரும்பத்தான் மாட்டார். ஆதலால் இரண்டிலொன்று உடனே முடிவு செய்" என்று மனம் அவளை விரட்டியடித்தது.

'ம்... சீக்கிரம்! எது வேண்டும் உனக்கு? வாழ்வா? சாவா? சொல் உடனே! சொல்! சொல்! சொல்!'

"நில்லுங்கள்!" என்று சட்டென்று கூவினாள் வீணா.

ஆனால் சுந்தரம் நிற்கவில்லை. போகிற போக்கில் சில வார்த்தைகளை இறைத்துக் கொண்டே நடந்தான். "என்னை வெளியே விரட்டிய இடத்துக்கு அழையா விருந்தாக வந்தது தவறுதான். அதற்குத் தண்டனை ஏதேனும் அளிப்பதாக இருந்தால் தெருவில் நிற்கிறேன், வந்து அளிக்கலாம்."

வீணா ஓடி அவன் முன்சென்று இரு கைகளையும் விரித்து வழியை மறித்தாள். "இதெல்லாம் என்ன பேச்சு! உள்ளே வாருங்கள். நர்ஸ் திரும்பி வரும் வேளை. அவள் நம்முடைய வாதத்தைக் கேட்டுச் சிரிக்கவா?"

" அப்படி ஒன்றும் வேண்டாமென்று தான் திரும்பிப் போகிறேன். போகிறவனை வழிமறித்து வம்புக்கு இழுத்தால்... விடுங்கள் வழியை!" அவன் குரலில் கண்டிப்பு மிதந்தது.

" இப்படிச் செய்வதற்கு நீங்கள் இங்கே வந்து என்னைக் காப்பாற்றியே இருக்க வேண்டாமே!"

" அது என் கடமை; செய்தேன்!"

"அது போல் எனக்கும் கடமை உண்டு என்பதை மறந்துவிட வேண்டாம்."



"அந்தக் கடமையை என்னை வெளியில் போக விட்ட பிறகு நிறைவேற்றிக் கொள்வதில் தடையில்லை. இதோ சற்று முன் தானுவதியின் முதுகு பிரிந்தது போல் என் முதுகும் பிரியக் கூடும் என்பதை எதிர்பார்த்து அதைத் தாங்கிக்கொள்ளத் தயார் செய்து கொண்டு தான் வந்திருக்கிறேன்."

"இப்படியெல்லாம் பேசி என்னை வதைக்காதீர்கள்."

"நான் ஏன் உங்களை வதைக்கிறேன், நீங்களே உங்களை வதைத்துக் கொள்ளத் துணிந்து விட்ட பிறகு?"

அவன் திடுக்கிட்டு அவள் முகத்தை நோக்கினான். "என்ன? நான் என்னை வதைத்துக் கொள்ளத் துணிந்து விட்டேனா?" என்றான்.

"பின் என்ன? ஆனால் அதை ஒழுங்கான முறையில் செய்து கொள்ளலாம். இரண்டு அலமாரிகள் நிறைய மருந்து இருக்கிறது இங்கே. அதில் ஒன்று கூடவா உயிரைப் போக்கும் விஷத்தன்மை உடையதாக இராது?"

அவன் குழம்பினான். "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

கூடத்தில் எரிந்து கொண்டிருந்த பெட்ரோமாக்ஸ் விளக்கு திடீரென்று இரண்டொரு தடவைகள் 'குப்'பென்று தீ நாக்கைச் சிந்திப் பற்றி எரிந்து விட்டுப் பிறகு அணைந்தது. அவர்களைச் சுற்றி ஒரே இருள்.

"அட இழவே! எண்ணெய் தீர்ந்து விட்டதா?" என்றாள் வீணா.

"இல்லை; என்னை வெளியேறச் சொல்லி அவசரப்படுத்துகிறது."

இருளில் வீணாவின் முகம் போன போக்கைச் சுந்தரத்தால் காண முடியவில்லை. ஆயினும், "தயவுசெய்து பின் கட்டில் தொங்கும் ஹரிக்கேன் விளக்கை எடுத்து வர மாட்டீர்களா?" என்று அவள் இறைஞ்சுவது அவனுக்குக் கேட்டது.

"நீங்களே போய் எடுத்துக் கொள்ளலாம். நான் இதோ போய்க் கொண்டிருக்கிறேன்."

வீணாவுக்குத்தான் கண் தெரியவில்லையே தவிர, அவள் கைகளுக்குக் கண் தெரிந்தது. அவை நீண்டு சுந்தரத்தின் இரு கரங்களையும் பற்றிக் கொண்டன. "எனக்கு அங்கே போகப் பயமாக இருக்கிறது; தயவு செய்யுங்கள்."

அவன் சட்டென்று அவள் கைகளை உதறினான். ஆனால் தெருவை நோக்கி நடக்கவில்லை. பின்கட்டை நோக்கிச் செல்வதைக் காலோசையிலிருந்து அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

சுந்தரம் விளக்கை எடுத்து வந்து அவளுடைய மேசை மீது வைத்து விட்டு, "வருகிறேன்" என்று கிளம்பினான்.

வீணா ஒன்றும் சொல்லவில்லை. அவளும் அவன் பின்னால் நடக்கத் தொடங்கினாள்.

அவள் தன்னைத் தொடருவதைக் கண்ட அவன், "எங்கே வருகிறீர்கள்? அழையாத விருந்தாளிக்குரிய தன் கடமையை நிறைவேற்றவா?" என்றான், முகத்தில் ஓர் ஏளனச் சிரிப்பு மிளிர.

தன்னைக் குத்திக் காட்டவே அவன் இப்படித் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறான் என்பது வீணாவுக்கு இப்பொழுது தெரிந்து விட்டது. ஆதலால் அவள் அவன் பேச்சுக்குப் பதிலளிக்காமல், "எனக்கு இங்கே தனியாக இருக்கப் பயமாக இருக்கிறது" என்றாள்.

உண்மையாகவே அவனுக்கு அப்பொழுது பயமாகத்தான் இருந்தது.

"சாகத் துணிந்தவர்கள் சமுத்திரத்தைக் கண்டு பயப்படுவதா? வியப்பாக இருக்கிறதே!" சுந்தரம் இப்பொழுது நடக்க வில்லை. நின்று அவளை நோக்கித் திரும்பிக் கேட்டான்.

"எதற்காக என்னை இப்படிச் சாகத் துணிந்தவள்—சாகத் துணிந்தவள் என்கிறீர்கள்? எனக்கு விளங்கவில்லையே!"

"ஆமாம், வாழ்வு இருந்தும் வாழ விரும்பாதவர்களைச் சாகத் துணிந்தவர்கள் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது?"

"ஆனால் அந்த வாழ்வை நான் ஒதுக்கியாக வேண்டியிருந்ததே!"

"ஒதுக்கியாகவேண்டியிருந்ததா? எதற்காக?"

"அதைச் சொல்லத்தான், சொல்லி அன்று நான் உங்களிடம் கடுமையாக நடந்துகொண்டு விட்டதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவதற்காகத்தான் உங்களைப் பலதடவைகள் சந்திக்க முயன்றேன். ஆயினும் அதை நான் சொல்லாவிட்டாலும், இதற்குள் உங்கள் அம்மா சொல்லியிருப்பார்களே!"

"அம்மாவிடம் போய், 'என்னை ஒரு பெண் அடித்துத் துரத்தி விட்டாள்; காரணம் கேட்டபோது உன்னைக் கேட்டுக்கொள்ளச் சொன்னாள்!' என்று முறையிட்டுக் கொள்ளும் அளவுக்கு எனக்குப் பைத்தியம் பிடித்து விடவில்லை!" சுந்தரத்தின் பேச்சில் அவன் உள்ளத்திலிருந்த கசப்பு முழுதும் திரண்டு வெளிப்பட்டது.

"அப்படியானால் அது உங்களுக்குத் தெரியவே தெரியாதா?" என்று வினு ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"தெரியாது; தெரிந்துதான் என்ன ஆக வேண்டும்?"

"இல்லை; அதை நீங்கள் கட்டாயம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். தெரிந்து கொண்டால் என்மீது உங்களுக்கு இத்தனை வெறுப்பு ஏற்படாது."

"எனக்கு யார்மீதும் எந்த விதமான வெறுப்பும் கிடையாது. என் விருப்பும் வெறுப்பும் யாரை என்ன செய்துவிட முடியும்? வீணாக நான் உங்களை வெறுப்பதாகக் கற்பனை செய்து கொள்ளாதீர்கள். அப்படி வெறுப்புடையவனாக இருந்தால், அணையிலிருந்து திரும்பியதும், தானாவதி இங்கே நோயாளியாக அநுமதிக்கப் பட்டிருப்பதாக அப்பா அம்மாவிடம் கூறிக் கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டு, மனம் கலங்கி, உடைகளைக்கூட மாற்றிக் கொள்ளாமல் இங்கே விழுந்தடித்து ஓடி வந்திருக்க மாட்டேன்."

"ஆமாம்! நீங்கள் இன்று என் மானத்தைக் காப்பாற்றினீர்கள்; உயிரைக் காப்பாற்றினீர்கள். அதற்கு முதலில் என் மனமார்ந்த நன்றியை ஏற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறே அன்று நான் உங்களிடம் கடுமையாக நடந்து கொண்டு விட்டதற்கும் தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள். அது மன்னிக்க முடியாத குற்றந்தான். ஆயினும் உங்கள் அம்மா எனக்கு அவ்வளவு வெறியை ஊட்டி விட்டார்கள். என்னைப் பொறுத்திலே தட்டி நிலை தவறும்படி செய்து விட்டார்கள்."

"அப்படியானால் என் அம்மாவும் அப்பாவும் நாம் இணைசேருவதை மனமொப்பி ஆதரித்துத் தட்டிக்கொடுத்துச் 'சபாஷ்' பட்டம் வழங்குவார்கள் என்று எதிர்பார்த்துத்தான் என்னை மணக்கச் சம்மதித்தீர்களா?"

"இல்லை, அப்படியில்லை. அவர்கள் எதிர்ப்பையும் கண்டனத்தையும் எதிர்பார்த்துத்தான் இருந்தேன். ஆனால் என்னால் இன்னொரு பெண்ணின் வாழ்க்கைக் கதவு மூடப்பட்டுவிடும் என்பது உங்கள் அம்மா விளக்கித்தான் எனக்குத் தெரிய வந்தது."

சுந்தரம் திடுக்கிட்டான். "என்ன? இன்னொரு பெண்ணின் வாழ்க்கைக் கதவு மூடப்படுமா? உங்களாலா? எப்படி? யார் அவள்?"

"ஆமாம்; நான் வெறுமனே உங்களைச் சுற்றி அலைந்து கொண்டிருந்தாலே போதுமாம்; எங்கள் மாலாவின் திருமணம் தடைப்பட்டு விடுமாம்."

சுந்தரத்துக்குச் 'சுரீர்' என்றது இச் செய்தி. அவன் இதுவரையில் மாலாவைத் தான் காதலித்து வந்ததாக வினுவிடம் கூறவில்லை. அதைச் சொல்லித் தொலைத்து விட்டாள் போலிருக்கிறது அம்மா. சரி, இனி இந்தப் பிறவியில் வினுவின் மனம் மாறாது; மாறினாலும் அவள் நம்மைக் கண் திறந்து பார்க்க மாட்டாள் என்று அவன் முடிவுறுத்தி விட்டான். இருந்தாலும் பேச்சில் விட்டுக் கொடுத்துவிட விரும்பவில்லை.

"அப்படியானால் ஒரு குடும்பத்திலுள்ள விதவை மறுமணமுயற்சியில் ஈடுபட்டால் அந்தக் குடும்பத்திலுள்ள இதரக் கன்னிப் பெண்களுக்குத் திருமணம் நடக்காதாமோ? அம்மா சரியான புரளிதான் கட்டி விட்டிருக்கிறாள். சரியானபடித்தான் உங்களுக்குக் கடுக்காய் கொடுத்திருக்கிறாள். ஆனால் நான் உங்களை ஒன்று கேட்கலாமா? தன் மகன் ஒரு விதவையுடன் சுற்றுவது பிடிக்காமல், இப்படி அவள் பயமுறுத்தி யிருக்கலாம்


கல்கெமிகோவின்
காஸ்டரால்
இனிமையான மணமுடைய
விளக்கெண்ணெய்
கூந்தலைச் செழிப்பாக
வளரச் செய்கிறது
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட்,
கல்கத்தா-29
தென் இந்தியா ஆபீஸ்:
5/149, பிராட்வே, மதராஸ்-1
CAS-IA/58-59 TM

என்பது உங்கள் அறிவில் படவே இல்லையா?''

"அதை நான் சிந்திக்கவில்லை தான். இருந்தாலும் வாழவேண்டிய எங்கள் மாலாவின் வாழ்வைப் பறித்து நான் மறுவாழ்வு சமைத்துக் கொள்ள விரும்பவில்லை.''

"சரி, விரும்பா விட்டால் அது தான் உங்கள் தலைவிதி என்று எண்ணிக் கொள்கிறேன். வாழ்வு இருந்தும் வாழ விரும்பாமல் சாகத் துணிந்தால் யாரால் அதைத் தடுக்க முடியும்? நான் வருகிறேன்.'' சுந்தரம் மூன்றும் முறையாகக் கிளம்ப எத்தனித்தான். ஆனால் வீணா அளித்த பதில் அவனை ஆணி அடித்து நிறுத்திவிட்டது.

அவள் முகத்தில் முறுவல் நெளியச் சொன்னாள்: "ஆனால் நான் அப்படிச் சாகத் துணிந்தாலும் கூடச் சாக முடியாது போலிருக்கிறதே!''

"என்ன?'' சுந்தரம் அவள் முகத்தை விளக்கு வெளிச்சத்தில் நோக்கினான்.

"ஆமாம், என்னைக் காப்பாற்றத் துணிந்தவர்கள் இருக்கும்போது எப்படிச் சாக முடியும்?''

சுந்தரம் ஏளனமாக நகைத்தான். "இப்போது நான் வந்தது போல வழிப்போக்கர்கள் எப்பொழுதும் அழையா விருந்தாளியாக வந்து கொண்டே இருக்க மாட்டார்கள், நினைவிருக்கட்டும். தவிர, உங்கள் மீது பாய்ந்த புலி உயிருடன் சுதந்திரமாகத் திரிந்து கொண்டுதான் இருக்கப் போகிறது. நாளைக்கு மறுபடியும் அது பாயாது என்பது என்ன நிச்சயம்? நீங்கள் என்ன உங்களைச் சுற்றி முள் வேலியா அமைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

வீணாவின் முகத்தில் மிதந்த குறுநகை இன்னும் மாறவில்லை. "ஆமாம்!'' என்றாள் அவள். "இன்று இல்லை; ஆனால் என் போன்றவர்களுக்கு அது தேவை என்பதைப் புரிந்துகொண்டு விட்டேன். அமைத்துக் கொள்ளவும் தீர்மானித்து விட்டேன்.''

"ரொம்ப நல்லது. பலம் பொருந்திய முள் வேலியாக அது இருக்கட்டும்'' என்று அசட்டையாகக் கூறி விட்டு அவன் மீண்டும் கிளம்பினான்.

"எங்கே புறப்பட்டு விட்டீர்கள்?''

"கடமை முடிந்து விட்டது. காப்பாற்றி விட்டேன்; எச்சரித்து விட்டேன். இனி என்ன வேலை எனக்கு இங்கே?''





கால் வேலை!

"வாரத்தில் ஒருநாள் காலையில் 7-30 மணியிலிருந்து 10-30 வரையில் அரிசிக் கடையில் 'க்யூ' வரிசையில் நிற்பதற்கு ஓர் ஆள் தேவை. மணிக்கு எட்டணாக் கூலி கொடுக்கப்படும்... கால் உள்ளவர்கள் யாரும் மனுப் போடலாம்!''

—ஒரு விளம்பரம்

நடிகர்!

பணக்காரராக இருப்பதில் அவ்வளவு செலவு இல்லை. ஆனால் வாழ்க்கையில் பணக்காரராக நடிப்பதற்குச் செலவு மிகவும் அதிகம்.

நிரந்தர உருளைக்கிழங்கு!

வயதானவர்களின் ஆகாரத்தைப் பற்றி ஒரு வார்த்தை:

"நீங்கள் உருளைக்கிழங்கு சாப்பாட்டில் சேர்த்துக் கொண்டால் முதலில் அது உங்கள் வாயில் கொஞ்ச நேரமும் வயிற்றில் கொஞ்ச நேரமும் இருக்கும்; பிறகு இடுப்பிலும் முழங்கால்களிலும் நிரந்தரமாக இருக்கும்.''

என்ன கஷ்டம்!

"கஷ்டங்கள் எப்போதும் ஒத்தையாக வராது; இரட்டையாகவே தான் வரும்.''

"அதான் கல்யாணம் செய்துகொள்ள இரண்டுபேர் வேண்டியிருக்கிறதோ?''

யாருக்கு பயம்?

கணவன்: இரவு திருடன் வந்தானாமே? என்னை ஏன் நீ எழுப்பவில்லை?

மனைவி: நீங்கள் பயப்படப் போறீங்களே என்றுதான்!

தலையெழுத்து!

ஜெயில் போலீஸ்காரர்: தன்னுடைய கை எழுத்துக்கூடப் போடத் தெரியாத கைதிகளும் இங்கு நிறைய இருக்கிறார்கள்!

மற்றவர்: அதில் பிறத்தியாருடைய கையெழுத்து மட்டும் போடத் தெரிந்தவர் சிலர் இருப்பார்களே!

கட்டாயக் கடன்!

"குறிப்பிட்ட நண்பர் கடன் கேட்கிறாரே, கொடுக்கலாமா?'' என்று ஒருவர் தம் மனைவியை ஆலோசனை கேட்டார்.

"தாராளமாகக் கொடுங்களேன்'' என்றாள் மனைவி.

"என்ன இது! கடன் கொடுத்தால் சிநேகம் போய்விடும் என்பாயே? இப்பொழுது கொடுக்கச் சொல்கிறாயே!''

"அவருடைய சிநேகம் உங்களுக்கு வேண்டாம் என்றுதான் கடன் கொடுக்கச் சொல்கிறேன்!'' என்றாள் மனைவி.

"உங்கள் கடமை இன்னும் முடிந்து விடவில்லையே!" வீணா மெதுவாகத் தனது நாற்காலிக்கு நடந்து அதில் உட்கார்ந்து கொண்டாள். சுந்தரத்தின் பார்வையும் அவளைத் தொடர்ந்து நாற்காலியில் லயித்தது. அவன் கண்களில் ஒரு பெரிய கேள்விக்குறி மிதந்ததைக் கண்டு வீணாவே மீண்டும் பேசினாள்: "அந்த வேலியை நீங்கள்தான் அமைத்துத் தர வேண்டும்!"

சுந்தரத்தின் கால்கள் அவனை அறியாமலே அவளுடைய மேசையை நோக்கி நடந்தன. "நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள், வீணா?" படிப்படியாக அவளுடைய கருத்து இறங்கி வருவதை வீணாவால் உணர முடிந்தது. அது அவளுக்குத் தெம்பூட்டியது. "என்னை 'நீங்கள்' என்று அழைக்க வேண்டாமே. 'நீ' என்று அழைக்கும் உரிமையைத்தான் ஏற்கனவே வழங்கியிருக்கிறேனே!" என்றாள் அவள்.

"அந்த உரிமையை வழங்கிய வீணா தான் அற்பாயுளில் போய் விட்டாளே. இப்பொழுது இங்கே இருக்கும் வீணா...."

"புதியவள்தான். ஆனால் அந்த அற்பாயுள் வீணாவைப் போன்றவள் இல்லை. சொல்லித் தெரியாததைக் குட்டுப்பட்டுத் தெரிந்து கொண்டிருப்பவள் இவள்."

"வீணா!" சுந்தரம் சட்டென்று எதிரிலிருந்த பெஞ்சில் அமர்ந்து மேசைக்கு அருகே கையை நீட்டி அவள் கையைப் பற்றினான்.

"சுந்தர்! எனக்குப் புத்தி வந்து விட்டது. சந்தோஷந்தானே?"

கைகள் ஒன்றையொன்று இறுகப் பற்றியிருந்தன. அவை போலவே உள்ளங்களும் ஒன்றையொன்று பின்னிக் கொண்டன. நிமிஷ நேரம் நான்கு கண்கள் தங்கள் அகரப் பசியைத் தீர்த்துக் கொண்டன. இருந்தாலும் சுந்தரத்தால் இன்னும் அவளை முற்றிலும் நம்ப முடியவில்லை. "எனக்கு இன்னும் நம்பிக்கைப்படவில்லை. உன் மனம் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கிறது."

"இனி அது மாறாது. இது உறுதி. என் செயலால், யார் கெட்டாலும், யார் வாழ்ந்தாலும், மானத்தைக் காத்துக்கொள்ள, உங்களை என் பாதுகாப்புக் கவசமாக்கிக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன், சுந்தர்!"

வாசலில் காலடிச் சத்தம் கேட்கவே பின்னிக் கொண்டிருந்த இருவர் கரங்களும் பிரிந்தன. லலிதாதான் வருவதாக இருவரும் எண்ணித் திரும்பினர். ஆனால் உள்ளே வந்தது அவள் இல்லை; மாலா!

(தொடரும்)

தேன்கூடு

அத்தியாயம் 49

மனச்சாட்சி

அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு வெளியில் வரும்போது தானே குற்றம் புரிந்துவிட்டு, அதற்கான தண்டனையையும் அனுபவித்துவிட்டு, அந்த வேதனையிலிருந்து முற்றிலும் விடுபடாமல் தள்ளாடுவது போன்ற உணர்ச்சியே ஒவ்வொருவருக்கும் உண்டாயிற்று. தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டு உடலும் உள்ளமும் புழுங்க உட்கார்ந்திருந்த கூட்டம் விடுதலை பெற்றதுபோல் வெளிப்பட்டது. கொடூரமான காட்சிகளை அதிர்ச்சியோடு பார்த்ததனால், முறுக்கேறிய நரம்புகள் தளர்ச்சியுற்றுக் களைத்துப்போயிருப்பது ஒவ்வொருவர் முகத்திலும் தெரிந்தது.

சுசீலாவுக்கு அன்று இருந்த உற்சாகமெல்லாம் பஞ்சாகப் பறந்து போய்விட்டது. படம் ஒன்றைப் பார்த்ததாகவே படவில்லை. கொலையையும் குற்றங்களையும் பக்கத்தில் நின்று பார்த்துவிட்டு, கையாலாகாமல் திரும்பி வருவது போல் தோன்றியது. காய்ந்து வறண்ட நெஞ்சில் குதூகலத்துக்கு ஏது இடம்?

குற்றத்தினால் ஒரு நாளும் ஆதாயமில்லை என்பதைக் காட்டுவதுதான் படத்தின் நோக்கம். குற்றவாளி எத்தனை திறமைசாலியாக இருந்தாலும், தைரியமுள்ளவனாக இருந்தாலும், புத்தி கூர்மையுடையவனாக இருந்தாலும் இறுதியில் குற்றம் என்னவோ அவனைத் தன் விஷப் பற்களால் தீண்டாமல் விடுவதில்லை என்பதை மிகத் தெளிவாகவும் நுணுக்கமாகவும்தான் காட்டியது படத்தின் கதை. படத்தின் நுட்பமும் லட்சியமும் எதுவாக இருந்தாலும், எல்லாம் முடிந்தபிறகு நெஞ்சிலே மிஞ்சியிருந்தது என்ன? வேதனைதான்; அதனால் துன்பம்தான்; சோர்வுதான்! வேறு என்ன?

"போயும் போயும் இந்தப் படத்துக்கு வந்தோமே!" என்று பெரிதும் மனத்தாங்கலுடன் கூறினாள் சுசீலா. செல்வத்தின் செழிப்பும் கம்பீரமும் சேர்ந்த கண்ணபிரானையும் தன்னையும் இணைத்து எல்லாரும் பார்ப்பதை அவள் கவனிக்கத் தவறவில்லை. அதனால் உண்டான கூச்சமும் அவள் பேச்சிலே தொனித்தது.


"ஏன், உனக்குப் படம் பிடிக்கவில்லையா, சுசீலா? ரொம்ப நன்றாக எடுத்திருக்கிறார்களே!" என்றான் கண்ணபிரான், வண்டியின் வலது பக்கமாக வந்துகொண்டே.

அதை அவள் மறுத்துச் சொல்லத்தான் எண்ணினாள். ஆனால் வாயிலிருந்து வெளிப்பட்டவை என்னவோ வேறு: "உங்களுக்கு நன்றாக இருந்தால் சரிதான். எனக்குப் பிடிக்காவிட்டால் என்ன?" இதைச் சொல்லும்போதே, 'உங்களுக்காக எதை வேண்டுமானாலும் பொறுத்துக்கொள்ள நான் தயங்க மாட்டேன்!' என்று அவனுக்குச் சொல்வதுபோலிருந்தது.

அவன் பாதையிலேயே கருத்தூன்றியவாறு வண்டியைச் செலுத்தினான். பிறருக்குத் தன் முகம் தெரிய வேண்டாம் என்று அவள் தன்னையறியாமலே அவனருகே நெருங்கி உட்கார்ந்துகொண்டாள். நீலத் துகில் போர்த்த இரவும் சிலுசிலுவென வீசிய குளிர்ந்த காற்றும் அவளுடைய சலிப்பைப் போக்கிச் சிறிது உற்சாகத்தைக் கொடுத்தன. அவனுக்குப் பக்கத்திலே மேலே படும் அளவில் அமர்ந்திருப்பது இன்று என்றுமில்லாத குதூகலத்தையும் குதுகுதுப்பையும் தந்தன. எத்தனையோ நாட்கள் அவனுடன் வண்டியிலே போயிருக்கிறான். ஆயினும் இன்றுதான் வாழ்க்கையின் இன்பமான பிரயாணம் உண்மையில் தொடங்கியது போல் அவளுக்குத் தோன்றியது. அவன் மட்டும் அன்று துணிந்து அவ்வாறு நடந்துகொண்டிராவிட்டால் இன்று யாருக்கு அது நஷ்டம்? பழி வருவதாக இருந்தால்கூட ஏற்கத் துணிந்து, தன்னுடைய நன்மையை நாடி அவன் நடந்துகொண்டிருப்பதாகவே அவனை வாழ்த்தியது அவள் உள்ளம். தன்னுடைய அன்பையும் காதலையும் அவன் மிகவும் பெருமைப்படுத்தியிருப்பதை இந்த மூன்று நாட்களாக உணராமல் போனதற்காக அவள் தன்னையே நொந்து

ஆர்வி





கொண்டாள். இன்று இறைவனுடைய சந்நிதியிலே நடந்து விட்ட பிழைகள் எல்லாம் புனிதமடைந்துவிட்டன என்று அவள் திடமாக நம்பினாள். கண்ணபிரானுக்கு இது பெண்மையின் அறியாமை என்று இளப்பமாகப் படலாம்; மூட நம்பிக்கை என்று கேலியாக இருக்கலாம். கடவுள் நம்பிக்கை இல்லாமல் இருப்பதற்கான வசதிகள் உடையவன் அவன். அவன் எப்படியிருந்தாலும், உண்மையே மாறாக இருந்தாலும் கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கும் வடிவம் அவளுக்கு வெறும் கல்லாகத் தோன்றவில்லை. கோடானு கோடி மனிதர்களின் மனச் சாட்சியாகவே காட்சியளித்தது. மனிதனுடைய அந்தரங்கத் துயர்களையெல்லாம் வாங்கிக்கொண்டு, ஆறுதலையும் நம்பிக்கையையும் வழங்கும் அசையாத சக்தியாகவே அந்தக் கல் வடிவம் தோற்றமளித்தது. மனிதனைவிட அவளுடைய மனச்சாட்சிமீது நம்பிக்கை கொள்வது எப்படி அறியாமையாகும்? அது எப்படிப் பேதமையாகும்? மனிதனுடைய பகுத்தறிவு எதன்மீது நம்பிக்கை கொள்ளும்படி சொல்கிறது? அழகான பேச்சைக் கேட்டால் ஆனந்தப்படலாம்; கைதட்டி ஆரவாரமும் செய்யலாம். ஆனால் அதற்குமேல் மனிதனுடைய துன்பங்களையும் துயர்களையும் துடைக்கும் வன்மை அதற்கு உண்டா?...

"ஷீலா!"

"ம்."

"என்ன யோசனை?"

அவள் மெல்லச் சிரித்துவிட்டு, "வண்டி இப்போது எங்கே போகிறது?" என்று கேட்டாள்.

கண்ணபிரான் ஒன்றும் பதில் சொல்லாமல் இருந்தான்.

"இல்லை; வண்டி ஸ்ரீராம்நகருக்கே போகட்டும்......" சுசீலாவின் குரல் அழுத்தமாகவே ஒலித்தது. அவன் காலும் பிரேக்கை அழுத்தியது.

"அப்படியானால்—?"

"அப்படியானால் வண்டியைத் திருப்ப வேண்டியது தான்! இதெல்லாம் வீண் பேச்சுக்கு இடமாகும். என்னைக் கொண்டு போய் விட்டுவிட்டுப் போய்விடுங்கள்! இப்படிக் கண் விழித்தால் உடம்புதான் என்னத்துக்கு ஆகும்? அது என்னமோ நான் சொல்லி விட்டேன்!"

கண்ணபிரானுக்குப் பேச்சு வராமல் குரல் அடைத்தது. எழில் வடியும் அவள் விழிகளை அவன் பார்க்க முயன்றான். பிறகு மெல்ல அவள் விரல்களை எடுத்து ஒரு முறை அழுத்தமாகப் பிடித்துவிட்டு, "சரி! உன் விருப்பத்தைக் கெடுக்க நான் விரும்பவில்லை!" என்று வண்டியை ஓடித்துத் திருப்பினான்.

வண்டியின் வேகம் அவன் கோபத்தைக் காட்டுவது போல் அவளுக்குத் தோன்றியது. "இதோ என்னைப் பாருங்கள்! கோபமா?" என்று இனிமை சொட்டக் கேட்டாள் அவள்.

"ஊஹூம்!" என்று அவன் தலையை அசைத்தான்.

"ஆமாம், இதற்கெல்லாம் என்னிடம் கோபம் வரக் கூடாது. என்ன, சரிதானா?"

"சரிதான்!"

"சும்மா, மேலுக்காகச் சொல்லக் கூடாது!" அவள் குரல் கொஞ்சியது.

"இல்லை" என்று பதிலளித்தான்.

வண்டி அவள் வீட்டு வாசலில் வந்து நின்றதும், "தாகமாக இருந்தால் ஏதாவது கொண்டு வரட்டுமா?" என்று கேட்டாள் அவள்.

"அப்படியானால் வண்டியிலிருந்தபடியே திரும்பிப் போ என்றுதானே சொல்கிறாய்?"

"பார்த்தீர்களா? இப்படியெல்லாம்தானே பேச வேண்டாம் என்கிறேன்!"

"பின்னே நீ சொல்வதற்கு வேறு என்ன அர்த்தம்!"

"இதற்கெல்லாம் அர்த்தம் தேடாதீர்கள். அது அவ்வளவு சீக்கிரத்தில் புரியாது!" என்று அவள், அவன் கைகளைத் தன் கைகளிலே எடுத்து வைத்துக் கொண்டாள். இரண்டும் விலக விருப்பமின்றி ஒருகணம் தயங்கின.

"சொல்லுங்களேன், ஏதாவது குளிர்ச்சியாகக் கொண்டு வரட்டுமா?"

"ஊஹூம்; சூடாகத்தான்!"

"பேச்சைப் பாருங்......" அவள் உதடுகள் அதற்கு மேல் அசையவில்லை. அவள் மனம் இளகி விட்டது ஒரு நொடியில். ஆனால் அடுத்த கணமே அவள் தன் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு, "சரி, புறப்படுங்கள்! நான் வருகிறேன்!" என்று இருளிலே படியேறிச் சென்று கதவைத் தட்டினாள்.

கிழவி வந்து கதவைத் திறந்துவிட்டுப் போனபிறகும் வண்டி புறப்பட்டதாகத் தெரியவில்லை. கதவைத் தாளிட்டுக் கொள்ளும் சாக்கில் அவள் வெளிச்சத்தைப் போட்டு விட்டு, வாசலையே பார்த்தாள். அவள் செய்வதை யெல்லாம் பார்த்துக் கொண்டு கண்ணபிரான் வண்டியிலேயே உட்கார்ந்திருந்தான்.

போய் விட்டு வரும்படி அவள் கையை விசிறினாள். அவன் பேசாமலே இருந்தான். அவன் வண்டி போகும் வரையில் கதவை எப்படிச் சாத்திக்கொண்டு போவது? எவ்வளவு நேரம்தான் வாசற்படியிலேயே நிற்க முடியும்?

அவள் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, விளக்கைப் 'பொக்'கென்று அணைத்தாள். நிலைப்படியை விட்டு உள்ளே வந்து, கதவை மெல்லச் சாத்தினாள். தாழ்ப்பாளைப் போட்டுவிட்டு, கதவிலேயே காதை வைத்துக் கொண்டு நின்றாள். வண்டி புறப்படுவதாகவே தெரியவில்லை. அவனை வாசலில் நிறுத்திவிட்டு, இப்படிச் செய்வது முறையற்றதாக அவளுக்குத் தோன்றியது. ஆனாலும் வேறு வழி என்ன? அவள் மாடிக்குச் சென்று, விளக்கைப் போட்டு விட்டுக் கீழே வாயில் முற்றத்தைப் பார்த்தபோது, வண்டி வெளிவாசலில் நெளிந்து போய்க் கொண்டிருந்தது. அப்புறம் அது எங்கும் தயங்கவில்லை; நிற்கவில்லை.

அப்பொழுதுதான் அவனுக்கு நினைவு வந்தது. 'ஆகாகா! கீழே விழுந்த கடிதத்தை அவளிடம் கொடுக்காமல் போய் விட்டேனே!' என்று நெஞ்சருகே செருகி வைத்திருந்த கடிதத்தை வெளியில் எடுத்தான். சினிமாத் தியேட்டரில் அவன் வர நேரமானதால் அவள் அதை மடித்து வைத்துக் கொண்டாள். அவன் வந்து இருளிலே பக்கத்தில் உட்கார்ந்து கொண்டதும் அவள் நினைப்பே மாறி விட்டது. படத்திலும் புதிரான கட்டம்; பக்கத்தில் புதிரான உணர்ச்சிகளை எழுப்பும் அவன். அவள் கடிதத்தை மறந்தேபோனாள்.

படுக்கையில் படுத்துக் கொண்டு விளக்கை அணைக்கப் போனபோதுதான் அவளுக்குப் புதிய எண்ணம் ஒன்று உண்டாயிற்று. தன்னுடைய







புகைப்படத்துடன் சேர்ந்தாற்போலவே வைத்துக்கொண்டு வரும்படியாக அது என்ன அவ்வளவு முக்கியமான கடிதம்?

மேல் நாட்டார் கல்யாண நிச்சயம் செய்து கொண்டதுமே, தங்களுடைய நாள்குறிப்பு டைரியைக் கொடுத்து விடுவார்களாமே — அப்படித்தான் இதுவும் இருக்கட்டுமே ! 'எனக்கு இனி தெரியக் கூடாது என்று ஏதாவது உண்டா ? அதையும்தான் பார்த்து விட்லாமே !' என்று எழுந்து, டிராயரிலிருந்து அதை எடுத்து வந்து, பிரித்துப் படிக்கலாஞள் :

" அவரே பட்டணத்துக்கு வருவதால் அங்கேயே போய்ப் பார்க்கலாம். என் பெயரைச் சொன்னல் போதும். அவர் தெரிந்துகொண்டு விடுவார். நானும் சொல்லி யனுப்புகிறேன். இப்போதைக்கு வேண்டியதை அவரிடம் வாங்கிக் கொள்ளலாம். 'பிளைஸ் அண் கோ. (பிரைவேட்) லிமிடெட், இண்டிச்சாலை, அடையாறு.' இந்த இடத்தில்தான் அவர் தங்கியிருப்பார். பிற பின்.

—சபாபதியா பிள்ளை."

பக்கிரியிடமிருந்து வந்து, பாபுவின் பையில் கிடந்த கடிதம்தான் அது-பாஞ்சாலி தேடி வந்தது. ஆனல் இதைப் படித்ததும் கசிலாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. யாரோ யாருக்கோ எழுதிய கடிதம் : அதிலும் பிற்பகுதி மட்டும்தான் இருந்தது. 'இது எதற்காக இவருடைய பையில் இருக்க வேண்டும் ? இவரிடம் யாரோ இதைக் கொடுத்துவிட்டுப் பார்க்க வந்திருப்பான் போலிருந்தது ! இதை எதற்காக இவ்வளவு பத்திரமாகப் பைக்குள் வைத்துக்கொண்டு வந்திருக்கிருர் ?'

கண்ணபிரானுடைய விசித்திரமான போக்கை எண்ணியவாறு அதை மடித்து டிராயருக்குள் வைத்துவிட்டு அவள் படுத்துக் கொண்டாள். அவள் நிலையில் நின்றபோது அவன் வண்டியிலிருந்தபடியே பார்த்த பார்வை இன்னமும் கண்முன் தோன்றிக்கொண்டேயிருந்தது. ஒருகால் அவன் மனம் மிகுந்த வேதனையை அடைந்திருக்குமோ? அப்படியாளுல் உடனே எழுந்து அவனைப் பார்க்கப் போகலாமா என்றுகூட அவள் எண்ணிஞள். ஆயிரம் மைல்களுக்கு அப்பால் பிறந்து வளர்ந்தவனுடைய சுகம், துக்கம் இரண்டும் இன்று தன்னுடையது போல் ஆகிவிட்டது. என்ன விந்தை ! காலத்தையும் தூரத்தையும் கடந்து அவர்களை ஒன்றாக்கிச் சேர்த்து வைத்தது எது ? கசிலா மெல்ல மெல்லத் தூக்கத்தினுள்ளே ஆழ்ந்து கொண்டிருந்தாள் !

அங்கும் கண்ணபிரான் காரை வைத்துக் கொண்டுதான் காத்திருந்தான். கனவு என்ருல் அதற்கு ஓர் எல்லையில்லையா ? அங்கே கூடவா அளவுக்கு மீறிய நிகழ்ச்சிகள் ! இத்தனைக்கெல்லாம் பிறகு அவன் முகத்தில் ஒருத்தி எப்படி விழிப்பது ? விடியற் காலையில் எழுந்ததுமே இந்த எண்ணம்தான் அவளுக்கு உண்டாயிற்று.

ஆனல் அவள் எப்படி விழித்தாளோ, அது அவளுக்கே தெரியவில்லை. அவளை அழைத்துப் போகக் கண்ணபிரான் வந்ததுதான் தெரியும். அதிலிருந்து அவள் தன் வசத்திலேயே இல்லை. அவன் ஆட்டி வைத்தபடியெல்லாம் ஆடுகிறோமே என்ற எண்ணமே இடையில் உண்டாகவில்லை. தன் போக்கை அறிந்து, விருப்பத்தை அறிந்து, சங்கடத்தை உணர்ந்து அவன் ஒவ்

வொரு சிறு காரியத்திலும் மிக மிக இனிமையாக நடந்து கொள்வதாகத் தான் அவளுக்குப் பட்டது. கனவை விட நனவு மெருகேறி யிருந்ததாக அவள் உணர்ந்தாள்.

"ஊருக்கு எப்பொழுது புறப்படப் போகிறீர்கள்?"

"இது என்ன கேள்வி, திடீரென்று? நான் இங்கே இருப்பது உனக்குப் பிடிக்க வில்லையா?" என்று கேட்டான் அவன்.

"அதற்கு இல்லை. நானும் உங்களுடன் வந்து விடலாம் என்றுதான்!"

கண்ணபிரான் ஒரு கணம் திகைத்து, "அது எப்படி முடியும், லீலா?" என்றான்.

"ஏன் முடியாதாம்? என் மாமா நாகலிங்கம் அங்கே இல்லையா? போனதும் அவருடன் இருக்கிறேன். அப்புறம்...."

"அப்புறம் என்ன—சொல்லேன், பாக்கியையும்!"

லீலா தலையைக் கவிழ்த்துக் கொண்டே, "அப்புறம் நான் எங்கே இருக்க வேண்டுமோ அங்கே அவர் என்னைச் சேர்த்து விடுவார்!" என்றாள்.

கண்ணபிரான் முதலில் கேட்ட உற்சாகத்தோடு இந்த வார்த்தைகளைக் கேட்டு ரசிக்கவில்லை. ஆயினும் அவன் சிரித்துக் கொண்டே, "உனக்கு அங்கே போக வேண்டும் போலிருக்கிறது. எனக்கு இங்கேயே இருந்தால் தேவலை போலிருக்கிறது!" என்றான். அவ்வளவு சீக்கிரத்தில் அவள் மேற்கொண்டு திட்டங்கள் போடுவது அவனுக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. 'இவள் என்ன கொடுத்து விட்டாள், அதற்குள் இவ்வளவு எதிர்பார்க்க?' என்பதுபோல் இருந்தது அவன் சிரிப்பு.

தன்னைவிட, தான் உயர்ந்ததாக மதிக்கும் எல்லாவற்றையும் அவனுக்குச் சமர்ப்பணம் செய்து விட்ட எண்ணத்தில்தான் அவள் இருந்தாள். அதை அவன் புரிந்து கொண்டானா, புரிந்து கொள்ளவில்லையோ! புரிந்துகொள்ள வேண்டும் என்றுதான் அவள் மனச்சாட்சி எதிர்பார்த்தது.

அத்தியாயம் 50

'மறந்து விடுங்கள்!'

பாபுவுக்கு வேலை சரியாக இருந்தது. சண்முகம் ஒரு பக்கமாகவும் அவன் ஒரு பக்கமாகவும் காலை நேரங்களில் சில மணி நேரம்தான் சுற்றினார்கள். ஆனால் சண்முகத்தை விட அவன் பங்கில்தான் அதிர்ஷ்டம் என்னவோ இருந்தது.

பேப்பர் கடை கிட்டப்பா, கொட்டைப் பாக்கைச் 'சரக்சரக்'கென்று சீவிக் கொண்டே, "அப்பா! பகுத்தறிவு! இதுக்கு என்னடா சொல்றே? இரண்டு பேருமாத்தான் புறப்படறீங்க; இரண்டு பேருமாத்தான் தெருவைச் சுத்தறீங்க! ஒரு நாளைப்போல் உன்னைவிட இரண்டு மடங்கு அவன் பேப்பர் கொண்டு வரானே, அது அதிர்ஷ்டம்னு சொல்றியா, சாமர்த்தியம்னு சொல்றியா?" என்று சண்முகத்தைப் பார்த்துக் கேட்டான். கிட்டப்பா பேசும் போது பட்டை கட்டின குதிரையைப் போல் ஒரு பக்கமாகப் பார்த்துக் கொண்டுதான் பேசுவான். சண்முகம் வர வர, குருவுக்கும் மிஞ்சின சிஷ்யனாகி வருவதாக அவனுக்கு ஒரு மனத்தாங்கல் இருந்தது.

அவர்கள் பேசிய விஷயங்கள் என்னவோ முக்கிய மில்லை. ஆனால் சண்முகத்தை விடப் பாபுவுக்கு முகராசி அதிகம் இருப்பதாகத்தான் அவர்கள் பொதுவாக ஒப்புக் கொண்டார்கள். கிட்டப்பா அவர்கள் இருவருக்கும் கை முதலாகத் தலைக்குப் பதினைந்து ரூபாய் அன்று காலையில் கொடுத்தான். சண்முகத்துக்குச் சரியாக மூன்று ரூபாய்கள் கூடக் கிடைக்கவில்லை. பாபுவுக்கோ ஆறு ரூபாய் லாபம் வந்திருந்தது. இது எப்படி? ஆனால் சண்முகத்திடம் பாபுவுக்கு இருந்த மதிப்பு அதிகமாயிற்றே தவிர, சிறிதும் குறையவில்லை. இதெல்லாம் முழுதும் ஒருவனுடைய அதிர்ஷ்டத்திலும் சாமர்த்தியத்திலுமா இருக்கின்றன? புரியவில்லை அவனுக்கு.

மீசைப் பக்கிரிக்குத் திடீரென்று கையிலே பணமும் புத்தம் புது உடைகளும் எப்படிக் கிடைத்தன? இதுபோல் பல விஷயங்கள் அவனுக்குக் கொஞ்ச நாட்களாகப் புரியத்தான் இல்லை. உஷாவுக்கு அவனிடம் என்ன அப்படி ஓர் ஒட்டுதல்? குப்பனுக்கும் பொன்னிக்கும் அந்த வீட்டில் அவனிடம் மட்டும் என்ன அத்தனை அன்பு? சண்முகத்துக்குத் தேவானையிடம் அத்தனை வீம்பு ஏன்? தேவானைக்கு அவனிடம் அத்தனை அன்பு எதனால்? இதில் யாருடைய அன்பு அதிகம்? சேகர் அடிக்கடி சங்கத்துக்கு வந்து தன்னைப் பார்ப்பானேன்? இதற்கெல்லாம் விடை காணும் திறமை அவனுக்கு இல்லை. மாலை நேரங்களில் சங்கத்தை உயிருள்ள இடமாக இயக்கு

வழியிலேயே அவனுடைய எண்ணம் சுழன்றுகொண்டிருந்தது. சம்பாதிப்பதில் சாப்பாட்டுக்குப் போக மீதியையெல்லாம் சங்கத்துக்குப் பெஞ்சும் பீரோவும் மேஜையும் பலகையும் வாங்குவதிலேயே அவன் செலவழித்தான். சண்முகமும் அவனும் சேர்ந்து இடைவிடாமல் பல திட்டங்கள் செய்தார்கள். இரவுப் பாடசாலை ஒன்றை முதலாகத் துவக்கினார்கள். நாலுபேர்கள் வெளியே வந்து கூடுவதும் பத்திரிகைகள் படிப்பதும், வீண் பேச்சுப் பேசிவிட்டுக் கலைவதுமாக இருந்த சங்கத்தில், இப்பொழுது ஓர் ஒழுங்கான வேலை என்று ஒன்று தொடங்கிவிட்டது. தோட்டத்திலுள்ள குழந்தைகளை அழைத்து வைத்துக் கொண்டு, அவர்களுடைய பள்ளிப் பாடங்களுக்கு உதவியாகச் சொல்லிக் கொடுப்பதுதான் முதல் படி. ஆனால் தோட்டத்துக் குழந்தைகள் படிக்க வந்தால்தானே? நாலுபேர்கள் தவறினால் இந்துபேர்கள் வருவார்கள். பல நாட்கள் ஒரே ஒருபையன்தான் வந்து உட்கார்ந்து தூங்கிவிழுவான். இது பாபுவுக்கு அதைரியத்தையும் உற்சாகமின்மையையும் தான் கொடுத்தது. ஆனால் சண்முகம் எப்போதும்போல் ஒரே மாதிரியாகத் தான் இருந்தான். அவன் கோட்டைகள் கட்டுவதில்லை; மனம் இடிந்தும் போவதில்லை. அதிகப் படிப்பு இல்லாத சண்முகத்துக்கு இத்தனை தெம்பும் உறுதியும் எங்கிருந்து வந்தன?

பாபுவுக்கு அவனைப் பார்க்கப் பார்க்கப் பிரமிப்புத்தான் உண்டாயிற்று. உஷாவைச் சந்திக்க நேர்ந்த போதெல்லாம் அவனைப் பற்றி ஒரு வார்த்தையாவது கூறாமல் போக மாட்டான். உஷா கல்லூரி நாட்களில் அந்த வழியாக வண்டியை விடச் சொல்லி இரண்டு மூன்று நிமிஷமாவது அவனைப் பார்த்து விட்டுப் பேசாமல் போவதில்லை. பொதுக் காரியம் ஒன்றில் ஈடுபட்டிருக்கும் பாபுவை உற்சாகப் படுத்துவதற்காகவே வாரத்தில் சில நாட்கள் அங்கே போவதாக அவள் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். குப்பனிடமும் பொன்னியிடமும் பேசுகையில் சந்தர்ப்பம் கிடைத்த போது இப்படித்தான் கூறிவந்தாள். பாபுவும் அப்படியே எண்ணினான்.

"நான் சங்கத்தில் எப்படி வேலை நடக்கிறது என்று பார்க்கத்தான் வருகிறேனே தவிர, சண்முகத்தைப் பற்றி விசாரிக்க அல்ல!" என்றான் அவள் ஒரு நாள்.

"அவன் வேறு அல்ல; சங்கம் வேறு அல்ல. அவன் இல்லாவிட்டால் சங்கம் ஏது?" என்றான் பாபு.

உஷாவுக்கு அவன் பேச்சு கொஞ்சம் பொருமையாகத்தான் இருந்தது. இவனுடைய உள்ளத்தில் யாருக்கு இடம் அதிகமாக இருக்கிறது என்பதை அவள் அறிய விரும்பினாள். எந்தக் காரணத்தைக் கொண்டும் சண்முகத்தோடு சம பங்கு இடம் பெற அவள் விரும்பவில்லை. தன்னுடைய பங்கு கணிசமான அளவுக்கு அதிகமாக இருக்க வேண்டும் என்றுதான் அவள் எதிர்பார்த்தாள்.

ஒரு மாதம் மெல்ல ஓடிச் சென்றது. வீட்டில் எதுவும் குறிப்பிடும்படி நடக்கவில்லை. கண்ணபிரானை இந்தப் பக்கத்திலேயே காணவில்லை. கல்யாணப் பேச்சு எந்த மட்டில் இருக்கிறது என்றும் தெரியவில்லை. உஷா ஒரு நாள் மாலையில் வெள்ளையன் தோட்டத்துக்குச் சென்றபோது அங்கே சண்முகம் மட்டும்தான் கவலையோடு உட்கார்ந்திருந்தான்.

"பாபு இல்லையா?"

"ஊரில் இல்லை, அம்மா! மதுராந்தகம் வரையில் போயிருக்கிறான்! நாளைக்கு வந்து விடுவான்!"

"சரி; அப்புறம் வருகிறேன்!" என்று எழுந்திருக்கப் போனாள் அவள்.

"அம்மா, ஒரு வார்த்தை!"

"என்ன?"

"சொல்லுகிறேன் என்று கோபித்துக் கொள்ளக் கூடாது. நீங்கள் செல்வத்தில் பிறந்து, செல்வத்தில் வளர்ந்தவர்கள். அவன்-பாபுவைத்தான் சொல்கிறேன்—சேற்றில் முளைத்து, சேற்றில் புரள்கிறவன்! நட்பு என்பது சம நிலையில் உள்ளவர்களிடம் இருப்பதுதான் பொருத்தம்; நல்லதும்கூட. இதுபோன்ற நட்பினால் கெடுதல் என்று ஏற்பட்டால் யாரை அது அதிகமாகப் பாதிக்கும், தெரியுமா? என்னை மன்னித்து விடுங்கள்! அவனிடம் உங்களுக்கு உண்மையான மதிப்பும் நல்ல எண்ணமும் இருந்தால் அவனை மறந்து விடுங்கள்!" என்றான்.

உஷா பொறி கலங்கிப்போய் நின்றாள். "சரி நான் வருகிறேன். இனி நான் அவனைப் பார்க்க இங்கே வர மாட்டேன்!" என்று சொல்லிவிட்டு, பைத்தியம் பிடித்தவள்போல் வண்டியில் போய் ஏறினாள்.

சண்முகம் இதை அவளிடம் சொல்ல எத்தனை நாட்களாகக் காத்திருந்தானோ, தெரியாது! இப்படிச் சொல்ல என்ன நடந்துவிட்டதோ, அதுவும் தெரியாது. ஆனால் அவன் பேச்சு பெரிய தடிகொண்டு மண்டையில் வன்மையாக ஓங்கி அடித்ததுபோல் இருந்தது அவளுக்கு.

செல்வத்தில் புரள்வதாக அல்லவா சண்முகம் சொன்னான்? ஆனால் தன்னை விடத் துர்ப்பாக்கியம் மிகுந்தவள் எந்தக் குடிசையிலும் இருக்க மாட்டாள் என்று அவள் இடிந்து போனாள்.

(முதல் பாகம் முற்றிற்று)

பல் முளைக்கும் பிராயமா?

வேதனையின்றி இலகுவாகப் பல் முளைக்க உதவுவது பிரமிட் பிராண்ட் கிளிஸரின்





பல் முளைக்கும் பிரச்சினையா? புண்பட்ட ஈறுகளா? மென்மையான துணியொன்றை உங்கள் விரல்மீது சுற்றிக்கொண்டு பிரமிட் கிளிஸரினில் நனைத்தெடுத்து குழந்தையின் ஈறுகள்மீது இலேசாகத் தேய்த்திடுங்கள். அது சட்டென்று குணமளிப்பதுடன், சிறுவர்கள் ரசிக்கும் இனிய சுவையுள்ளது. மருத்துவத்திற்காகவும், அழகுசாதனங்களுக்காகவும், பருவகாலங்களுக்காகவும் பயன்படும் சுத்தமான பிரமிட் கிளிஸரினுக்குப் பற்பல வீட்டு உபயோகங்களும் உண்டு.

இலவசம் துண்டுப் பிரசுரம்! இக்கூப்பனைப் பூர்த்தி செய்து "இந்துஸ்தான் லீவர் லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 409, பம்பாய்" என்ற விலாசத்திற்கு அனுப்புங்கள்.

பிரமிட் கிளிஸரினின் வீட்டு உபயோகங்களை விவரிக்கும் இலவசத் துண்டுப் பிரசுரம் ஒன்றை அனுப்பவும்.

என் பெயரும் விலாசமும்	நான் கிளிஸரின் வாங்கிய மருந்துக் கடையின் பெயரும் விலாசமும்
....	....
....	....
....	....

KWH

விநியோகஸ்தர்கள்: ஹி.லி.ஹ.(இ)ப்ரை.லிட்., பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை PYG 13-58 TM



இப்பெரும் காப்பியங்களில் நடுநாயகமாக வைத்துப் போற்றப்படும் பெருமை வாய்ந்த நூல் மணிமேகலை. இது போன்ற பண்டைக் காவியங்கள் படமாக வருவது வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால் அது பண்டைக் காவியத்துக்கு மதிப்பு தரும் விதத்தில் இருந்தால்தான் அதைப் பார்த்து சந்தோஷப்பட முடியும்.

தமிழ் மொழியைப் பற்றிப் பெருமை பேசுவதும், பண்டைத் தமிழ்க் காவியங்களைப் பற்றிப் பெருமை பேசுவதும் மாத்திரம் போதாது. புராதன சிற்பச் சின்னங்களையும், அரிய கல்வெட்டுக்களையும் கால வெள்ளம் அழித்து விடாமல் பாதுகாப்பது போல், பண்டைக் காலத்துக் காவியங்களையும் காக்க வேண்டும். அத்துடன், சுவை குன்றாமல், பழைமைக்கு இழுக்கு நேராமல் படமாக்க முடியுமானால் மேற்படி காவியங்களை வெள்ளித் திரையில் காட்ட முயலவேண்டியதுதான்.

மேல்நாட்டுப் படங்களில் புனித பைபிள் கதைகள் அற்புதமாகத் தயாரிக்கப்பட்டு வெளியாவதைப் பார்க்கிறோம். அந்தக் கதைகளின் உள்ளடங்கிய கருத்துக்களை உயர்வாகக் காட்டுகின்றன அவர்கள் படங்கள். ஆனால் நம் நாட்டில் அப்படியில்லை. பண்டைக் காலத்துக் காவியங்களிலிருந்து படம் தயாரிக்கப்பட்டு வெளியாகிறது என்ற செய்தியைப் பார்த்தாலே ஒரு வேதனை ஏற்படுகிறது- காரணம், காவியத்தின் நயமான பகுதிகளை எத்தனை விதமாகக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி யிருக்கிறார்களோ என்ற பயம்தான்.

சேகர் ஆர்ட் பிலிம் எண்டர்பிரைசஸ் தயாரித்து வெளியிட்டிருக்கும் "மணிமேகலை" நல்ல முறையில்தான் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், காவியத்தின் பண்டைப் பெருமை ஒளி விட்டுப் பிரகாசிக்கும்படி படத்தைத் தயாரித்திருந்தால் அது தமிழ் மொழிக்கே அரிய சேவை செய்ததாக இருந்திருக்கும்.

மணிமேகலையின் கதை யாவரும் அறிந்தது தான். மாதவி—கோவலன் மகள் அவள். அவளது இளம் பிராயத்து வாழ்க்கை நிகழ்ச்சிகளைவிடப் பிற்பகுதி, அதாவது அவள் துறவுபூண்ட கதைதான் உருக்கமானது; காவியமாகப் புனைந்து கூறுவதற்கு ஏற்றது. 'மணிமேகலை துறவு' என்பதுதான் அப் பழம் பெரும் காவியத்தின் பண்டைப் பெயர். கன்னிப் பெண்ணாக வளர்ந்து, மங்கைப் பருவம் அடைந்தும் மாசுபடாத மாணிக்கமாகவே திகழ்ந்தாள் மணிமேகலை. போதி மரத்தடியில் அமர்ந்து அறிவின் நிறைவை எய்திய புனித புத்த பகவான் அருளால் பசிப்பிணி தீர்க்கும் பாத்திரமான அமுதசுரபியைப் பெற்று அகிலமனைத்தும் சென்று உண்டி கொடுத்து உயிர் காத்தாள்.

இதில் காதல் காட்சிக்கு அதிகமாக இடமில்லாதது படாதிபதிகளுக்குப் பெருங் குறையாகத்தான் இருக்கும்!

முளை விடும் தருணத்திலேயே கருகிப் போன தன் காதலை நினைந்து உருகி உயிர் துறக்க நேர்ந்த இளவரசன் உதயணன் பாத்திரம் மிகவும் அருமையானது. மிகமிக மென்மையானதும் கூட.

டி. ஆர். மகாலிங்கம் இளவரசன் உதயணனாக வருகிறார். "ஆண்டவன் தமிழனடா!" "கண்களின் வெண்ணிலவே" என்ற பாடல்களைச் சொந்தக் குரலில் கணீரென்று பாடியிருக்கிறார். அவ்வளவுதான். இந்தப் படத்தில் அவரைப் பற்றி வேறொன்றும் சொல்லுவதற்கில்லை!

என். எஸ். கிருஷ்ணன், மதுரம் இருவரும் படத்தில் சிறிது நேரமே வருகின்றனர். ஆயினும் என். எஸ். கிருஷ்ணனுடைய இயல்பான ஹாஸ்யங்கள் மிகவும் பொருத்தமாக இடம் பெற்றிருக்கின்றன.

இந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாவதற்கு முக்கிய காரணம் சிறந்த நடிகையான பி. பானுமதி மணிமேகலையாக நடிப்பதுதான். இது அவருக்குப் பொருத்தமான பாகம் என்பதைப் படம் பார்ப்பவர்கள் நிச்சயம் ஒப்புக் கொள்வார்கள்.

இளவரசனைக் காதலித்த போதும், தாயின் உரையால் மனம் மாறி அவன் காதலை



மணிமேகலை

— காந்தன்

உதறித் தள்ளியபோதும், பானுமதியின் நடிப்பு பாராட்டும் விதத்தில் இருக்கிறது. இத்துடன் சொந்தக் குரலில் அற்புதமாய்ப் பாடியிருக்கிறார். ''உலகமே ஒரு சிறைச்சாலை'' என்ற கம்பதாசனின் பாட்டு பானுமதியின் குரலில் மிகவும் நயமாக ஒலிக்கிறது. சூழ்நிலைக்கு ஏற்றவாறு அந்தப் பாட்டும் நன்றாய் அமைந்திருக்கிறது.



மணிமேகலையின் அன்னை மாதவி காவியத்தின் கனிவுறு பாத்திரம்; மணிமேகலையின் இளம் உள்ளத்தில் துறவு நினைவை உறவு கொள்ளச் செய்த உத்தம பாத்திரம்.

சந்தியா அந்த நல்ல பாத்திரத்தை ஏற்று நல்ல முறையில் நடிக்கிறார். நிதானமும் மெய்ப்பாடும் கலந்து தோன்ற அவர் நடிப்பு பாராட்டத் தக்க விதத்தில் இருக்கிறது. கோவலனுக்கும் தனக்கும் நேர்ந்த வைடல் விபரீதமாக முடிந்ததை அவள் மணிமேகலைக்கு எடுத்து உரைக்கிறாள். அது பின்னணி நிகழ்ச்சியாகக் காட்டப்படுகிறது. நன்றாயிருக்கிறது.

அறவண அடிகளாகத் தோன்றும் செருகளத்தூர் சாமா பழைய நடிகர். பிரமாதமாக நடித்திருக்கிறார். பாவம் குன்றுமல் பேசியிருக்கிறார். அவர் மட்டும் இந்தப் படத்தில் இல்லையென்றால் கதை விளங்குவதே கொஞ்சம் கஷ்டமாய்ப் போய்விடும்.

தமிழ்ப் படங்களின் பழைய வசனகர்த்தா இளங்கோவன் ''மணிமேகலை''க்குத் திரைக் கதை வசனம் எழுதியிருக்கிறார். வசனம் நன்றாயிருக்கிறது.

நேரில் கண்டு களிக்க முடியாத அபூர்வக்காட்சிகளை யெல்லாம் தத்ரூபமாய்க் காட்டக் கூடிய வசதிகள் சினிமா உலகில் சர்வசாதாரணம். கொஞ்சம் சிரமப்பட்டு முயற்சி எடுத்துக் கொண்டால் நல்ல முறையில் படங்கள் அமையும்.



மணிமேகலையும் இளவரசன் உதயணனும் சந்திக்கும் உப வனத்தைச் சிறிது விஸ்தாரமாகவும் பழைமையாகவும் காட்டியிருக்கலாம்.

அமுதசுரபி மணிமேகலைக்குக் கிடைக்கும் காட்சி அற்புதமாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

மணிமேகலையூராய்ச் சென்று அமுத சுரபியின் உதவியினால் மக்கட் குலத்தின் பசிப் பிணியைப் போக்குவது வெறும் படமாயிருக்கிறது; உயிர் இல்லை. அன்னம் ஊட்டிடும் தெய்வ மணிக்கையின் மகிமையைநன்கு விளக்கமுறச் செய்திருக்க வேண்டும். அமுத சுரபியின் அற்புதச் சக்தியும் பிரமிக்கத்தக்க விதத்தில் புனையப்பட்டிருக்க வேண்டும். மணிமேகலை காவியத்தின் முக்கிய அம்சம் அமுதசுரபி. படத்தில் அதன் மகிமை துளிக்கூடத் தெரியவில்லை.

மணிமேகலை புத்தபகவானைத் தியானித்த வண்ணம் சிலைபோல் நிற்கிறாள். அவள் பக்கத்தில் அமுதசுரபி ஓயாமல் உணவை வழங்குவதாகப் படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. பசிப்பிணியால் துன்புற்ற மக்கட்குலம் எங்கெங்கிருந்ததோ, அங்கெல்லாம் போய் மணிமேகலை அமுதசுரபியின் உதவியால், அவர்களை வருத்திய பசியைப் போக்கி, வயிறார உணவளித்ததாகக் காவியம் கூறுகிறது. சினிமாவில் இது ஒன்றும் காட்ட முடியாத காட்சியல்ல. தமிழ்ப் படத்துக்கு அகில உலகப் புகழ் ஏற்பட வேண்டுமானால்சிரமமும் சிரத்தையும் எடுத்துக் கொண்டு பண்டைக் காவியப் பெருமையையும் மனத்துட்கொண்டு காட்சிகளைத் தத்ரூபமாக அமைக்க முனைய வேண்டும்.

படத்தில் பதினேழு பாடல்கள் இருக்கின்றன. சந்தேகத்துக்கு இடமின்றிக் கொஞ்சம் அதிகம்தான். அசரீரியின் பாட்டாக ஜி. ராமநாதனின் குரலில் ஒலிக்கும் ''வந்தாயா மகனே'' என்ற நீண்ட பாட்டு மிகவும் உருக்கமாயிருக்கிறது.

உதயணனின் தாய்—அரசி, தன் மகன் உயிர் இழந்ததற்கு மணிமேகலையே காரணம் என்று கருதி உள்ளம் குமைகிறாள். அதன் காரணமாக அவளைப் பலவிதத்திலும் கொடுமைப் படுத்துகிறாள். பிறகு மணிமேகலையினால் அறிவு தெளியப்படுகிறாள். திரைக் கதையிலும் இந்தக் காவியப் பகுதியையே பின்பற்றியிருந்தால் இன்னும் சுவையாயிருந்திருக்கும். அந்தக் கட்டம் மிகவும் அவசரமாக ஓடிவிடுகிறது. அரசியின் மனம் திருந்துவதாகவே காட்டப்படவில்லை. அது ஒரு குறைதான்.

''மணிமேகலை'' படத்தைப்பற்றி நம் கருத்து: பானுமதியைப் பார்க்கலாம்; பாட்டைக் கேட்கலாம்; நடிப்பை ரசிக்கலாம். டி. ஆர். மகாலிங்கத்தின் பாட்டை மட்டும் கேட்கலாம்.

அவருடைய அசிரத்தை என்னுடைய லாபம்!



இது என்னுடைய கோட்டு அல்ல; ஆனால் இப்பொழுது என்னுடையதாகி விட்டது. என் எஜமானர் மிகச்சிறந்த தையல்காரர்களிடம் தம் ஆடைகளைத் தைத்துக்கொள்கிறார் என்பது உண்மையே ஆனால் 'ஸான்பொரைஸ்ட்' முத்திரையுள்ள துணிகளையோ, தயாரான ஆடைகளையோ அவர் சிரத்தையுடன் கவனித்து வாங்குவதில்லை என்பது தெளிவான விஷயம். இப்படியே எப்பொழுதும் அவர் அசிரத்தையாக இருக்கட்டும்! அவர் ஆடைகளும் அவர் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்கி, எனக்குச் சொந்தமாகட்டும்! பருத்தித் துணியோ, தயாரான ஆடைகளோ வாங்கும்போது 'ஸான்பொரைஸ்ட்' முத்திரை இருக்கிறதா என்று கவனிப்பது அவசியம் என்பதை மட்டும் என் எஜமானர் அறிவாரானால், பல சலவைகளுக்குப் பிறகும் அவை உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்காது என்பது திண்ணம். ஆனால் இதுபோன்ற அற்புதமான இலவசப் பரிசுகள் எனக்குக் கிடைக்காதே!

லேபில் மேல்

·SANFORIZED·

என்ற முத்திரையுள்ளதா என்றுபாருங்கள், உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்காது.

'ஸான்பொரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுயட் பீபாடி அண்டு கோ. இன்கார்பொரேடட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப் பட்டுள்ளது. இந்தக் கம்பெனியின், 'சுருங்காது' என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் துணிகளில் மட்டுமே 'ஸான்பொரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

விவரங்களுக்கு: 'ஸான்பொரைஸ்ட்' ஸர்வீஸ், 95, மெரீன் டிரைவ், பம்பாய்-2.

SAN-58-4A-TAM












போலீஸ் நூற்றாண்டு விழா


1. சென்னையில் போலீஸ் நூற்றாண்டு விழா டாட்டூ காட்சிகளைக் கண்டு களித்தார் மத்தியப் பாதுகாப்பு மந்திரி வி. கே. கிருஷ்ணமேனன்; 2. டாட்டூ காட்சியில், எஸ். ஏ. பி. போலீஸ் வீரரின் பிரமாதப் பாய்ச்சல்; 3. அழகுற அமைந்த போலீஸ் ஸ்டேஷனுக்கான கோப்பைப் பரிசை ஸ்ரீமதி பாலகிருஷ்ண ஷெட்டி, நகர போலீஸ் கமிஷனரிடம் அளிக்கிறார்; 4. சென்னை சினிமா நடிகர்கள் போலீஸின் சேவையைப் பாராட்டி கவர்னர் தலைமையில் கேடயப் பரிசு அளிக்கிறார்கள்; 5 & 6 எஸ். ஏ. பி. வீரர்களின் வளைய வித்தையும், பஞ்சாபி ஒயிலாட்டமும்; 7. அருணோதயத்தில் தாமரை மலர்வதுபோல் போலீசார் மலர்கிறார்கள். 8. குழந்தைகளை மகிழ்வித்த ஏழரை அடி உயர் போலீஸ் அணியாட்டம்.











கோடை வருமுன் ஓர் சலுகை

சுலப தவணை
முறையில்
விலை கூடுதலின்றி
வாங்குங்கள்

- இதுவரை இம்மாதிரி சலுகை அளித்தது கிடையாது.
- 1959 செப்டம்பர் 1ம் தேதி முதல் டிசம்பர் 31ம் தேதி வரையில்தான் இந்த சலுகை அளிக்கப்படும்.
- நீங்கள் எவ்வளவு சீக்கிரமாக வாங்குகிறீர்களோ அவ்வளவுக்குத் தவணைக் கட்டணம் குறைகிறது.

மற்ற விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள உஷா விசிறி விற்பனையாளரை காணுங்கள்.

உஷாவை வாங்கி நிம்மதி அடையுங்கள்

ஜே இன்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா-31

ஏஜண்ட்ஸ் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
120, அரமனைக்காரத் தெரு, சென்னை

அன்புப் பரிசு

லக்ஷ்மி சுப்பிரமணியம்

ஒரு வழக்கு சம்பந்தமாக மேட்டுப்பாளையத்துக்குப் போக நேர்ந்தபோதுதான் அரியநாயகத்தை நான் சந்திக்க நேர்ந்தது.

பத்து ஆண்டுகளுக்குமுன் கல்லூரியில் பி.ஏ. வகுப்பில் நாங்கள் ஒன்ருகப் படித்தவர்கள். மேற்கொண்டு சட்டப் படிப்புக்காக நான் சென்னை போனபோது அவன் நீலகிரியிலிருந்த தன் மாமாவின் எஸ்டேட்டைப் பார்த்துக்கொள்ளப் போய்விட்டான். காற்றில் பிய்த்துக் கொண்டுவிட்ட காற்ருடியைப் போல், அப்புறம் வாழ்க்கையில் நாங்கள் வெவ்வேறு மூலைகளில் ஒதுங்கி விட்டோம்.

எதிர்பாராத விதமாகத் திடீரென்று அரியநாயகத்தைச் சந்தித்தபோது, என் மனம் மகிழ்ச்சியால் நனைந்தது. அவன் தங்கியிருந்த முசாபிரி பங்களாவில் அன்று நாங்கள் நெடுநேரம் வரை உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். கல்லூரியில் கழித்த நாட்களிலிருந்து, அன்று வரை, இருவருடைய வாழ்க்கையிலும் நடந்த நிகழ்ச்சிகளைப் பரிமாறிக் கொண்டு அனுபவித்தோம்.

“இவ்வளவு தூரம் வந்துவிட்டு நீ எஸ்டேட்டுக்கு வராமல் போகக்கூடாது. என்னோடு வந்து நான்கு நாட்களாவது தங்கி விட்டுத்தான் போக வேண்டும்!” என்று அரியநாயகம் வற்புறுத்தவே, நான் அவனுடன் புறப்பட்டேன்.

நாங்கள் எஸ்டேட்டை அடைந்த போது நன்ருக இருட்டி விட்டது. வீட்டுக்குள் நுழைந்ததும் கணப்பு அடுப்பின் கதகதப்பான வெம்மை என்னை வரவேற்றது.

கணப்பின் அருகிலேயே கட்டிலில் படுத்து இருவரும் தலையிலிருந்து கால் வரையில் தடித்த கம்பளியைப் போர்த்துக் கொண்டோம். கைகளை மறைத்த ஸ்வெட்டர், கழுத்தையும் தலையையும் சுற்றிக் கட்டியிருந்த கம்பளி ஸ்கார்ப், கால்களை இறுக்கியபடி முழங்கால் வரை இழுத்து மூடியிருந்த ஸாக்ஸ் இவை மூட்டிய வெது வெதுப்பு. உடலின் வெம்மை வெளியே சிதருமல் காத்தன. அரியநாயகம் பேசிக்கொண்டே இருந்தான். நான் என்னையறியாமல் உறங்கிப்போனேன்.

காலையில் எனக்கு முன்னுல் அரியநாயகம் எழுந்து வேலைக்குப் போய்விட்டான். கூலிகள் குடிசைகளை விட்டுக் கிளம்பி வரிசையாக ஆஜர் கொடுக்க வந்து விட்டார்கள். மேஸ்திரிகள் புத்தகமும் கையுமாகக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தார்கள். வேலையாட்களின் குழந்தைகள் குடிசைக்கு வெளியே திரிந்து கொண்டிருந்தார்கள். கஞ்சியும், சோறும் சமைத்துக் கொண்டிருந்த தமிழ்ப் பெண்கள்; கறுத்த வாளிப்பான உடலில் எண்ணெய் மெருகிடச் சிவப்புச் சேலையும் வாரி முடிந்த கொண்டையில் தலைத் தொப்பியுமாகத் திரிந்த படகப் பெண்கள்; முதுகில் கூடையைச் சுமந்து கொண்டு வெள்ளி மெட்டி ‘கிளிர் கிளி’ரென்று சப்திக்கச் சரிந்த நடைபாதையில் துள்ளி ஓடிய தோதவக் கன்னிப் பெண்கள்; மஞ்சள் நிற மேனியில் பச்சை குத்திய பூவேலைகள் அணி செய்ய, உருண்டைக் கன்னங்களில் வெள்ளிக் காதணியின் மினுக்கு நிழலிட, இடையில் குழந்தையைத் துணியில் முடிந்து கொண்டு முதுகில் சுமையைத் தாங்கி நடந்த குறும்பப் பெண்கள்; கம்பளிப் போர்வையும் கழியுமாகத் திரிந்து கொண்டிருந்த வேலையாட்கள்.

நான் கண் விழித்தபோது விடிந்து வெகு நேரமாகிவிட்டதை உணர்ந்தேன். பனிப் படலம் ஓரளவு விலகி இலேசான வெய்யில் தலைகாட்ட ஆரம்பித்தது!

காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு நாங்கள் இருவரும் தோட்டங்களில் வேலையைப் பார்வையிடப் போனேம். ஒவ்வொரு செடியின் ரகத்தையும் உயர்வு தாழ்வையும் பற்றி, அரியநாயகம் எனக்கு விளக்கிக் கொண்டே வந்தான். அவன் பேச்சைக் கவனித்த போது, விலைமதிப்புள்ள இரத்தினங்களையும் வைரங்களையும் மதிப்பிடும் வியாபாரியின் கலை நுணுக்கம், அதில் இருப்பதுபோல் எனக்குத் தோன்றியது.


மிதியுண்ட தழைகள் தரையில் மெத்து மெத்தென்றிருந்தன. காலில் கெட்டிச் செருப்போடு அரியநாயகத்தின் பின்னுல் ஓவர்ஸியர் நடந்த போது அது அழுந்தி எழுந்தது. மஞ்சத்தில் நடப்பது போன்ற பிரமையை உண்டாக்கியது.

அருகில் இருந்த ஒரு சிறிய விடுதியில் என்னை உட்கார வைத்துவிட்டு ஓவர்ஸியரும் அரியநாயகமும் ஆலைக்குப் போனுர்கள். அங்கே உட்கார்ந்த நான் அன்று வந்த செய்தித் தாளைப் படிக்கலானேன். தோட்டத்தில் செடிகளை நறுக்கிய வேலைக்காரனின் கத்திரியின் சத்தம் தாளத்தோடு இணைந்து வந்தது. இலேசான குளிர்; மரத்துப் போன கைகால்கள் வெய்யிலின் சூடேற விறைப்பலே எழுந்து வெளியேவந்தேன்.

வாசலில் நின்ற வேலைக்காரன் கையெடுத்துக் கும்பிட்டான். அவனை வெறித்துப் பார்த்தேன். என் உடல் சிலிர்த்தது. அவன் உடல் முழுதும் தழும்புகள். முகத்தில் கோரமான கீறல் வடுக்கள். அவன் இரும்பிய







"அடப் பாவி! நீ கஜேந்திரா நாடகக் கம்பெனியில் பிரதான நடிகனாக இருந்தாயே!"

"ஆமாம், பண்டார மகிமை என்கிற நாடகத்திலே நடிச்சுக்கிட்டு இருந்தபோது எனக்கும் நடிகைக்கும் தகராறு வந்தது. பேசாமே அப்படியே புறப்பட்டுட்டேன்!"

போது முதுகில் வெட்டி விட்டது போன்ற ஆழமான பிளவு. அவன் என் கண்களில் படர்ந்த அருவருப்பை உணர்ந்திருக்க வேண்டும். "புலி அடிச்சுப் போடப் பார்த்திச்சு, சாமி!" என்றான்.

இவ்வளவு கடுமையான காயங்களுக்குப் பின் அவன் பிழைத்ததே ஆச்சரியந்தான்!

"அப்புறம் புலியை யார் கொன்றார்கள்?"

"ஐயாதான்!"

அரியநாயகத்துக்கு வேட்டையில் இருந்த ஈடுபாடு எனக்குத் தெரியும். ஆனால் அவன் ஏனோ இதுவரையில் அதைப் பற்றி என்னிடம் பேசவே இல்லை. புலித்தோல் விரித்த சோபா, சுவரில் மாட்டியிருந்த மான் கொம்பு, பக்குவம் செய்து பஞ்சடைத்து வைத்திருந்த சிறுத்தைத் தலை - யாவும் என் நினைவுக்கு வந்தன.

யாவையும் பார்த்த போதும்கூட, கடந்த இருபத்து நான்கு மணி நேரமாக எவ்வளவோ பேச்சுக்கிடையே, அதைப் பற்றி நாங்கள் பேசாமலே இருந்து விட்டது எனக்கே வியப்பாக இருந்தது.

மாலையில் வீட்டுக்குத் திரும்பிய போது என் கண்கள் சுவரில் மாட்டப்பட்டிருந்த பொருள்களைத் தேடின. அவைகளிடையே துப்பாக்கியைக் காணோம். அரியநாயகம் வேட்டையாடும் பழக்கத்தை விட்டு விட்டானோ? அந்த முடிவுக்கு அவன் வரக் காரணம்? என் மனம் ஆவல் உந்த விதிர்த்து நின்றது.

தேநீர் அருந்தியதும் அறைக்குப் போய் உடைகளை மாற்றிக் கொண்டு வெளியே தோட்டத்துக்கு வந்தேன். காட்டு மல்லிகையின் மணம் என்னைக் கவர்ந்தது. பின்னிக் கிளைத்திருந்த பூஞ்செடிகளின் அடியில் ஒளியும் நிழலும் விளையாடின. பின்புறம் மரத்தடியில் அவன் கண்களை மூடியபடியே நிற்பதைக் கண்டேன். அவன் அருகே போய்க் கவனித்தேன்.

அழகான சிறு பளிங்குக்கல் மேடை. தூய வெண்ணிறமான அதன் மேல் பொறித்திருந்த கரிய எழுத்துக்கள் என் பார்வையை ஈர்த்தன. "பொன்னியின் நினைவுக்கு" என்று அதில் எழுதியிருந்தது. அதன் மேல் ஒரு பூங்கொத்து வைக்கப்பட்டிருந்தது.

கண் விழித்த போது அவன் இமைகளில் நீர்க்கறை படிந்திருந்தது. என்னைப் பார்த்த பின்னும் அவன் சிறிது நேரம் பேசவில்லை. என் கண்கள் அந்தப் பளிங்கு மேடையில் பதிந்து நின்ற எழுத்துக்களை நாடின. "பொன்னி யார்?" என்று நான் வாய் திறந்து கேட்கவில்லையே ஒழிய அவன் புரிந்துகொண்டு விட்டான், என் கேள்வி என்னவென்று.

"வா போகலாம்!" என்று அவன் அழைக்கவே நான் கேட்க எண்ணியதை அவனே சொல்லப் போகிறான் என்பதைப் புரிந்து கொண்டேன். மனம் ஆவலினால் துடிதுடிக்க அருகில் போனேன்.

முன் வராந்தாவில் இருவரும் நாற்காலிகளைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தோம். அவன் பேசத் தொடங்கினான்:

"இன்று காலையில் நீ விடுதியில் ஒரு வேலையாளைப் பார்த்திருப்பாய். அவன் முகத்திலும் முதுகிலும் உள்ள வடுக்களையும் நிச்சயம் கவனித்திருப்பாய். ஒரு புலியுடன் போராட வேண்டி வந்தபோது அவன் அடைந்த காயங்கள் அவை.

நான் இங்கே முதன் முதலில் வந்தபோது, அவன் இங்கே இல்லை. நான்தான் அவனை வேலையாளாக அமர்த்திக்கொண்டேன். அப்போது என் மாமா உயிரோடு இருந்தார். நிர்வாகம் அவர் கையில்தான் இருந்தது. வேலையின் நுணுக்கங்களை அவர் சிறிது சிறிதாக எனக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். தொழிலின் நயங்களை அறிந்து கொள்வதோடு இன்னொரு பொழுது போக்கும் என்னை அப்போது அவரோடு சேர்த்து வைத்தது.

மாமா வேட்டையில் கெட்டிக்காரர். ஓடும் மானை இருநூறு கஜ தூரத்திலிருந்து கடக்கூடியவர். புதர் மறைவில் உள்ள மிருகத்தை ஊகத்தினாலேயே காயப்படுத்தும் திறமையை அவரிடம்தான் நான் கண்டிருக்கிறேன். எழுந்து மறையும் மாலை நேரங்களில், எவ்வளவோ தடவைகள், அவர் குறி தவறாமல் வேகமாய்ச் செல்லும் பறவைகளைச் சுட்டு வீழ்த்தியதுண்டு. சிறுத்தையைப் போல் வலிவோடு பாய்ந்து செல்லும் வேகம், வேங்கையைப் போலக் குறி தவறாமல் பார்க்கும் திறமை, வேட்டை நாயைப் போலக் காற்றில் வரும் வாசனையைக் கொண்டே மிருகத்தின் இருப்பிடத்தைச் சொல்லக் கூடிய ஊகம்,

—இவை யாவும் அவருக்கு இருந்தன. அவர் வேட்டையில் சேகரித்திருந்த அபூர்வமான பொருள்கள் எத்தனை எத்தனையோ! நீலகிரிக்கு வந்த துரைகள் பலருக்குப் புலி நகம் முதல் யானைத் தந்தம்வரை, அவர் பரிசு கொடுத்திருக்கிறார்.

நான் புதிதாக வேட்டையாடக் கற்றுக் கொண்ட நாட்கள் அவை. அவருடன் போவதனால் எனக்கும் ஓரிரு வேட்டைகளில் வெற்றி கிடைப்பதுண்டு. எனது வெற்றி மாமாவின் திறமைக்கு முன் எம்மாத்திரம்? இருந்தாலும் என் மாமாவின் பெண் என்னை இல்லாத பரிகாசங்களெல்லாம் செய்வாள். அப்பொழுதெல்லாம் மாமா எனக்காகப் பரிந்து பேசுவார். பின்னும் என்னை மணந்து கொண்டதும் அவள் எனக்காக அவரிடம் பரிந்து கொண்டு வந்ததும் உண்டு.

ஒருநாள் கடுமையான வேலைக்குப் பிறகு ஓய்வெடுக்க எல்லோரும் உதகமண்டலத்துக்குப் போவதாக இருந்தோம். நாங்கள் புறப்பட்டுக் கொண்டிருந்த பொழுது தான் அந்தச் செய்தி எங்கள் காதில் விழுந்தது. முதுமலைக் காட்டிலிருந்து ஒரு புலி அடிக்கடி வந்து தொந்தரவு செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தோம். கடைசியாக அது ஒரு மனிதனையும் கொன்று விட்டதாகச் சொன்னார்கள். அன்று எங்களைத் தேடி வந்தவள் ஓர் இடைப் பெண். அன்று மாடு மேய்க்கப் போன அவள் கணவன் வீடு திரும்பவில்லையாம். அவனுடன் போன ஆடு மாடுகளில் ஒரு பசுவைத் தவிர மற்றவை வீடு திரும்பி விட்டனவாம். எங்களிடம் தகவல் சொல்ல வந்தவள் 'ஓ'வென்று கதறி விட்டாள். அந்தப் பக்கத்தில் மாமாவைத் தவிரப் புலியைத் தொடர்ந்து போகக் கூடியவர்கள் வேறு யாரும் இல்லை.

மாமா இளகிய மனமுடையவர். அவர் எங்கள் பயணத்தை ஒத்திப் போட்டுவிட்டு வேட்டைக்குக் கிளம்பி விடுவாரென்பது நாங்கள் எதிர்பார்த்ததுதான். ஆனால் என்னையும் அவர் தம்மோடு வருமாறு அழைத்தது தான் ஆச்சரியமாக இருந்தது.

இடையன் வழக்கமாக மேய்க்கப் போகும் இடத்துக்குப் போனோம். புல்வெளியை அடுத்து ஒரு சிற்றாறு. அதன் கரையில் ஒரு காளி கோவில். அது மேட்டில் இருந்தது. அதை ஒட்டினாற்போல் சுமார் இருநூறு கஜ தூரம் சமதரையாக இருந்தது. அதைத் தாண்டிச் சரிவு சுமார் நானூறு அடி மளமளவென்று இறங்கியது. அந்தச் சரிவில் மரங்களும் புதர்களும் மண்டிக் கிடந்தன. காளி கோவிலிலிருந்து வந்த சிற்றாறு பெருகி அங்கே அருவியாகப் பொழிந்து கொண்டிருந்தது. தண்ணீர் குடிக்கப் பசு அங்கே வந்த போது கொல்லப்பட்டிருக்க வேண்டும். விளக்குகளைத் தூக்கிப் பிடித்து அந்த இடம் முழுவதும் தேடினோம். புதர் மறைவிலிருந்து முனகல் சத்தம் கேட்டது.

புல் தரையில் சிந்தியிருந்த இரத்தத்தைத் தொடர்ந்து போனோம். புதர் மறைவில் இடையனைக் குற்றுயிரும் குலை உயிருமாகக் கண்டோம். புலியோடு போராடி அவன் உடம்பு முழுவதும் ஏற்பட்டிருந்த காயங்களைப் பார்க்கவே பயமாக இருந்தது. அவனிடமிருந்து சிறிது தூரத்தில் பசு இறந்து போய்க் கிடந்தது.


பசுவின் உடலில் ஒரு பகுதி குடைந்து எடுக்கப்பட்டிருந்தது. மிச்சத்தை இழுத்துச் செல்ல வசதியோ நேரமோ இல்லாததால், புலி ஓடிப்போயிருக்க வேண்டும்.

இடையனுக்குச் சிறிது மூச்சு இருந்தது. அவனைக் காப்பாற்ற வேண்டியிருந்ததால் அவசரமாகத் திரும்பிவிட்டோம். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து அவனுக்குச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தோம்.

இரையின் பெரும் பகுதி அங்கேயே இருந்தது. அதைப் புலி விட்டு விடாது. நிச்சயம் மறுநாள் இரவு தேடிவருமாகையால், தகுந்த பாதுகாப்புகளோடு புலியை மடக்கத் தீர்மானித்தோம். புல்வெளியின் ஓரமாக வளர்ந்திருந்த மரத்தில் சுமார் பதினைந்து அடி உயரத்தில் கிளைகளை இணைத்து ஓர் ஆள் உட்காரும் படியாகப் பரண் கட்டினோம். அந்த இடம் கூடியவரை மறைவாகவும், அங்கிருந்து பார்த்தால் புல்வெளி முழுவதும் தெரியக்கூடியதாகவும் இருந்தது. பசு இறந்த திசையிலிருந்து காற்று எங்கள் பக்கம் வீசியதால் மனித வாடை புலிக்கு அடிக்க முடியாது.

மாலை நான்கு மணிக்கே பரண் மேல் ஏறிக் கொண்டோம். மாமாவும் நானும் துப்பாக்கிகளோடு ஏறிக்கொண்டோம். துணைக்கு வந்த நான்கு ஆட்கள் வேறு இடங்களில் பதுங்கிக் கொண்டார்கள்.

முன்னிலாக் காலம். படிப்படியாக இறங்கிய புல்வெளியில் நிலவொளி விழுந்தபோது, பனித்திரையில் அந்தக் காட்சி அழிந்துபோன சித்திரம் போலக் காணப்பட்டது. பனியின் ஊடே வந்த நிலவின் கதிர்கள் கரிய மலைப் பாறையின்மேல் விழுந்து அதை வெள்ளி மயமாக்கிக் கொண்டிருந்தன. இராக் குருவிகளின் ஓயாத சத்தம். நிலவொளி மங்கிக்





'' ஏண்டாப்பா ! எனக்கு எதுக்குடாப்பா, இத்தனை பணம் போட்டுச் சங்குப் புடவை இந்த வயசிலே? ஏதோ சிப்பா இப்ப வர நைலான் சேலையிலே ஒரு புடவை எடுத்து வந்தால் போதாதோ ?''

கொண்டே வந்தது. கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி பத்து. காற்று இலேசாக வீசியது. கண் கொட்டவில்லை. நிலவு அஸ்தமித்து விட்டது.

புதர் சலசலத்தது. கனையை இலேசாக ஓர் உருவம் கடந்து வருவது தெரிந்தது. புல்வெளியின்மேல் மிருதுவான நான்கு பாதங்கள் நடந்து வருவது புலனாயிற்று. பசுவின் உடலிலிருந்து இருபதுகஜ தூரம் வந்ததும் அந்த உருவம் நின்றது. நிமிர்ந்து நான்கு புறமும் பார்த்தது. தணல் கட்டியைப்போல் இரு கண்களும் பளபளத்தன.

புலி முன்னால் நடந்தது. பசுவின் அருகே போய்த் தலையைக் குனிந்து மோப்பம் பிடித்தது. காற்றில் இலைகள் அசைந்தன. ஒரு கணம் புலி சந்தேகத்தோடு நிமிர்ந்து வெறித்தது. நாங்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டோம். புலி வாயை வைத்து இரையை மெதுவாக இழுக்கத் தொடங்கியது.

மாமாதான் முதலில் சுட்டார். வயதானதால் அவர் பார்வை ஓரளவு மழுங்கி இருக்கக் கூடும். இல்லாவிட்டால் அவருக்குக் குறி தப்புவதாவது? புலி இரையை விட்டுவிட்டு ஐந்து அடி உயரம் மேலே தாவியது. புலியின் உடல் முழுவதும் மேலே தெரிந்தபோது நான் சுட்டேன். குண்டு புலியின்மேல் பட்டிருக்க வேண்டும். மறு கணம் மின்னலைப்போலத் தாவிப் பள்ளத்தில் விழுந்து மறைந்தது.

புலி இறந்ததாகத் தெரியவில்லை. நிச்சயம் செய்து கொள்ளாமல் நாங்கள் கீழே இறங்குவது அபாயகரமான செயல். ஆதலால் இரவு முழுவதும் அந்தப் பரணிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தோம்.

விடியற்காலையில் கீழே இறங்கி வந்தோம். புலியை நெடுநேரம் தேடினோம். புல்வெளி சரிந்து இறங்கிய இடத்தில் புலி இறந்து கிடந்தது. உயிரில்லாத உடலிலும் அதன் கம்பீரம் குறையவில்லை.

அதை நெருங்கியபொழுது அதன் மடியில் அண்டிக்கொண்டு நின்ற ஒரு புலிக் குட்டியைக் கண்டோம். தங்க நிறமான தேகம். கருங்காலிக் கட்டையைப் போன்ற உறுதி. திகைப்பும் தயக்கமும் தேங்கிய, திராட்சையைப் போன்ற கண்கள். பட்டுத் துணியைப் போன்ற மிருதுவான உடல்.

புலி, குட்டியை ஈன்றதும், இறந்துவிட்டது. புதிய உயிர் தோன்றிய தருணத்தில் அதன் உயிர் பிரிந்து விட்டது. அதனால்தான் குட்டியை என்னால் அப்போது எடுத்து வைத்துக் கொள்ள முடிந்தது. இல்லாவிட்டால் நான் அதை அணுகி இருக்க முடியுமா?

மாமா இறந்த புலியின் தோலையும் நகங்களையும் பக்குவப்படுத்தி எடுத்துக் கொண்டார். நான் புலிக்குட்டியை எடுத்துக் கொண்டேன். அதைக் கொண்டுவந்து ஆவலோடு வளர்க்கத் தொடங்கினேன். என் மனைவிக்கு அதை நெருங்கவே தைரியம் இல்லை. ''புலியை வீட்டில் வைத்து வளர்ப்பதாவது?'' என்று அடிக்கடி என்னோடு சண்டை போடுவாள்.

ஆனால் நான் அதை என் குழந்தையாகவே பாவித்தேன். அதற்குப் பொன்னி என்று பெயரிட்டேன். அன்போடு அதனுடன் கொஞ்சி விளையாடினேன். கொடிய அந்த மிருகத்தின் உள்ளம் ஒரு குழந்தையினுடையதைப்போல் இருந்தது. நான் வீட்டுக்குத் திரும்பியதும் அது நாய்க்குட்டியைப் போல என்னை ஓடிவந்து வரவேற்கும். காலையில் நான் எழுந்ததும் என் மடியில் வந்து உட்கார்ந்து, பூனையைப்போல் என்னுடன் பால் குடிக்கும். மாலை நேரத்தில் உலாவப் போகும் போது, மான் குட்டியைப் போல் என்னுடன் துள்ளி விளையாடியபடி ஓடிவரும்.

கடுமையே உருவமான அந்த மிருகத்தின் உள்ளத்தில் மென்மையைக் கண்டேன். நஞ்சு போன்ற குரூரமே இயற்கையான அந்தப் பிராணியிடம் அமுதம் போன்ற அன்பைக் கண்டேன். வஞ்சகமாக மறைந்து நின்று தாக்கிக் கொல்லும் அந்த இனத்தில் கள்ளமில்லாமல் குழந்தையைப் போலப் பழகிய பொன்னியும் பிறந்ததை நினைந்து உருகினேன்.

பொன்னி வளர்ந்து விட்டது. என் மாமா மறைந்து போனார். என் மனைவியும் தாயானாள். வீட்டில் குழந்தையின் மழலைப் பேச்சு கேட்கத் தொடங்கியது.

''இனிமேல் பொன்னியை இங்கே வைப்பது குழந்தைக்கு ஆபத்து. அதை விரட்டி விடுங்கள்!'' என்று என் மனைவி சொன்னாள். நான் இசையவில்லை.

''அதை எப்படி விரட்டுவது? அது என் குழந்தையைப் போல் வளர்ந்து விட்டது. துரத்தினாலும் அது திரும்பவும் என்னைத் தேடித்தான் வரும்'' என்றேன்.

''காட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வரச் சொல்லுங்கள். அது அங்கேயே இருந்துவிடும். புலி அங்கே இருப்பதுதான் இயற்கை; நீங்கள் இயற்கையை எதிர்த்து எது செய்தாலும் அது பொருந்தாது'' என்றாள்.



மரக்கறிக் கூட்டு

சமைத்துப் பாருங்கள்

6 பெரிய உருளைக் கிழங்குகள், 1 முள்ளங்கி, கையளவு பிரஞ்சு பீன்ஸ், 2 மேஜை கரண்டி அளவு ரெக்ஸ் ஸலட் ஆயில், 5 அல்லது 6 கறிவேப்பிலை, அருமையாக அரிந்த ஒரு வெங்காயம், ஒரு கப் உரித்த பச்சைப் பட்டாணி, அளவுக்கு உப்பு, ஒரு மேஜைக் கரண்டியளவு கறி பௌடர், ஒரு தேக்கரண்டியளவு ப்ரௌன் அன்டு போல்ஸன் கார்ன்ப்ளவர்—½ கப் பாலில் கலந்தது.

காய்கறிகளை சுத்தம் செய்து, நறுக்கி, பட்டாணியுடன் சேர்த்து பாத்திரத்தில் போட்டு, ½ கப் தண்ணீர் சேர்க்கவும். கறி பௌடரையும், கறிவேப்பிலையும் இதோடு கலக்கவும். ருசிக்குத் தகுந்தவாறு உப்பு சேர்த்து நன்றாக வேகவைக்கவும். இன்னொரு பாத்திரத்தில் ரெக்ஸ் ஸலட் ஆயிலை ஊற்றி, நறுக்கிய வெங்காயத்தை சிவக்கும் வரை வதக்கவும். முதலில் வெந்த கறிகாயை இதில் கொட்டி, பாலும் சேர்த்து வேகமாகக் கலக்கி, 10 நிமிட நேரம் நன்றாக மூடி வைக்கவும். பிற்பாடு இதைச் சப்பாத்திகளுடன் பரிமாறி சாப்பிடவும்.



இந்தியாவில் ஏஜெண்டுகள் : பாரி அன்டு கோ, லிட்.

ப்ரௌன் அன்டு போல்ஸன் கார்ன்ப்ளவர் பேட்டன்ட் ஆக அங்கீகரிக்கப்பட்டது.

இதன் பரிசுத்தத் தன்மைக்கு
இப்பரீக்ஷையைச் செய்து பாருங்கள் :-

இரண்டு மேஜைக் கரண்டியளவு ப்ரௌன் அன்டு போல்ஸன் பேட்டன்ட் கார்ன்ப்ளவரை கொதித்து ஆற வைத்து குளிர்ந்த ஜலத்தில் நன்றாகக் கலக்குங்கள். 24 மணி நேரம் இவ்விதம் வைத்த பிற்பாடும்கூட கெட்ட வாசனை உண்டாகாமல், மாசற்றதாகவும், பெக்டீரியா முதலிய அசுத்த அணுக்களால் சேதப்படாமலும் இருப்பதைக் காண்பீர்கள். மற்ற ப்ரௌன் அன்டு போல்ஸனின் உயர்தர சாதனங்கள் என்னவென்றால்: ஜெல்லி, கஸ்டர்ட் பௌடர், ப்ளேவர்ட் கார்ன்ப்ளவர்.



இங்கிலீஷ், ஹிந்தி, அல்லது தமிழ் பாஷைகளில் பிரசுரிக்கப்பட்ட அழகான சமையல் புஸ்தகம் இலவசமாக வேண்டுவோர் இங்குள்ள கூப்பனை பூர்த்தி செய்து அனுப்பவும். (வேண்டாத பாஷையை அடித்து விடவும்)

தபால் செலவிற்காக 15 நயா பைசா விலையுள்ள தபால் ஸ்டாம்ப் நான் இதோடு அனுப்புகிறேன்.

ஸ்ரீ/ஸ்ரீமதி/செல்வி ....

....

விலாசம் ....

டிப்பார்ட்மென்ட் : KLK 1

கார்ன் ப்ராடெக்ட்ஸ் கோ.
(இந்தியா) ப்ரைவேட் லிமிடெட்
தபால் பெட்டி : 994, பம்பாய் 1

எனக்கே மனத்தில் சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. குட்டியாக இருந்த வரை யிலும் சரி; இனி பொன்னியை வீட்டில் வைத்திருப்பது சரிதானா? செயற்கையான சூழ்நிலையில் அது மேலும் இருக்குமா? அதன் இயற்கையான சுபாவம் தோன்றி விட்டால் குழந்தையின் கதி என்ன? புலி என்றும் புலிதான். அது பூனையாக முடியாது; நாய்க் குட்டியாக முடியாது; மானைப் போல, முயலைப் போலக் குழந்தையுடன் விளையாட முடியாது.

மனமில்லாமல் பொன்னியைக் காட்டில் கொண்டு போய்விட ஏற்பாடு செய்தேன். இயற்கையாக வாழ அதற்குச் சந்தர்ப்பம் கொடுப்பதாக எண்ணி என்னையே நான் ஏமாற்றித் தேற்றிக் கொண்டேன்.

ஒரு நாள் கழிந்தது. மறுநாள் விடியும் போதே என் அறையின் கதவை யாரோ தட்டுவது போன்ற சத்தம் கேட்டு எழுந்தேன். கதவைத் திறந்ததும் பொன்னி ஆவலோடு உள்ளே வந்து கால்களுக்கிடையே புகுந்து கொண்டது. அதை அணைத்துக்கொண்டு கண்ணீர் பெருக்கினேன்.


கடவுள் ஏன் என் பொன்னியை ஒரு புலியாகப் படைத்தார்! அது ஒரு சாதுவான பிராணியாகப் பிறந்திருந்தால், அது என் வீட்டில் இருக்க ஒரு தடையும் இருக்காதல்லவா? இயற்கையாகவே மனிதனுடன் வாழும் மிருகமாகப் பிறந்திருந்தால், அதை நான் விரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காதல்லவா?

பொன்னியை வைத்துக் கொள்ள என் மனைவியோடு வெகு நேரம் வாதாட வேண்டியிருந்தது. கடைசியில் ஒரு நிபந்தனையின் மேல் அவள் பொன்னியை வீட்டில் இருக்கச் சம்மதித்தாள். அதைச் சொல்லவே என் நாக் கூசுகிறது. பொன்னியின் சுபாவத்தில் மாறுதல் தோன்றினால், மனித இரத்தத்தையோ மாமிசத்தையோ அது ருசி கண்டு விட்டதாகச் சந்தேகம் ஏற்பட்டால் உடனே நான் அதைச் சுட்டுக் கொன்றுவிட வேண்டும். குழந்தையையோ வேறு மனிதர்களையோ அது தாக்குவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடாது என்பதுதான்.

குண்டுகள் நிறைந்த துப்பாக்கி, அது படுத்து உறங்கும் மூலையிலேயே சுவரில் தொங்கியது. தலைக்குமேல் காத்து நின்ற விதியின் கொடுமையை உணராமலேயே, கண்மூடி அது படுத்துக் கொண்டிருந்த நிலையைப் பார்க்கும் போது என் கண்களில் பசுமை படியும். என் மனத்தில் விவரிக்க வொண்ணாத சஞ்சலம் படர ஆரம்பித்தது. பொன்னியைப் பார்க்கும் போதெல்லாம், தூக்குத்தண்டனையின் முடிவு தெரியாமல் தடுமாறும் கைதியைப் பார்ப்பது போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. "பொன்னி! உன்னை நானே கொன்றுவிடும்படி செய்துவிடாதே!" என்று அதற்குப் புரியும்படி நான் எப்படிச் சொல்ல முடியும்?

கூடியவரையில் குழந்தை அதன் அருகில் போகாமல் பார்த்துக் கொண்டேன். இரவு வேளைகளில் அதைச் சங்கிலியினால் கட்டிப் போட்டேன். அந்த நேரத்தில் விதி என்னைப் பார்த்துப் பரிகசித்ததோ, என்னவோ?

அன்று ஓய்வுநாள். தோட்டத்தில் குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்தேன்.



பொன்னியும் எங்களுடன் இருந்தது. விளையாட்டாக ஓடிய என் பெண் கல்லில் தடுக்கிக் கீழே விழுந்தாள். காலில் அடிபட்டு இரத்தம் சிந்தியது. நான் ஓடிப்போய்த் தூக்கினேன். பொன்னியும் என்னோடு ஓடிவந்தது. நான் அதைக் கவனிக்கவில்லை. குழந்தைக்குச் சிகிச்சை செய்வதற்காக உள்ளே விரைந்து சென்றேன். நாற்காலியில் அவளை உட்கார வைத்துவிட்டு மருந்து எடுக்க உள்ளே போனேன். நான் திரும்புமுன் என்மனைவியின் கூக்குரல் என் காதில் விழுந்தது. பரபரப்போடு பாய்ந்து வந்தேன்.

பொன்னியின் வாயில் குழந்தையின் இரத்தம். தோட்டத்தில் சிந்திய இரத்தத்தை அது சுவைத்திருக்க வேண்டும். அது குழந்தையையே பார்த்தபடி நின்றது. நான் என்ன செய்தேன் என்று எனக்கே தெரியாது. நான் துப்பாக்கியை எடுத்திருக்க வேண்டும். இடரென்று பொன்னி என்னை நோக்கிப் பாய்ந்து வருவதை உணர்ந்தேன். தன் கூரிய பற்களால் அது என்னைக் கடித்தது. அது விளையாட்டாகவும் இருக்கலாம். ஆனால் எனக்கு வினையாகத்தான் தோன்றியது. துப்பாக்கியினால் சுட்டேன்.

பொன்னி வீறிட்டபடி சுருண்டு விழுந்தது. என் இதயமே நின்றுவிட்டதுபோல் இருந்தது. துடித்தபடி அது உயிர் விட்டபோது அதன் கண்களில் நான் குரோதத்தைக் காணவில்லை.

அதற்கு உயிரூட்ட அந்த நேரத்தில் நான் என் உயிரையும் கொடுத்திருப்பேன். என் குழந்தையைக் கொன்றுவிட்ட பாதகனைப் போல் இடிந்து நின்றேன். குலைந்து போய் விக்கி விக்கி அழுதேன்.

வேட்டை எனக்குப் புதியதல்ல. மிருகங்களைக் கொல்வது எனக்குப் பழகிவிட்ட விளையாட்டு. வேட்டையின் உற்சாகத்தில், தன்னையே மீறும் பெருமிதத்தில், அடிபட்ட பிராணியின் துடிதுடிப்பும், கையில் கறைபடப் பெருகி ஓடும் அதன் இரத்தமும், இழைந்து குலைந்து சுருங்கும் அதன் உயிரும் என் கண்களில் நீரைத் தருவிப்பதில்லை.

ஆனால் அதுவரை அனுபவித்திராத வேதனை அப்போது என்மனத்தில் கழன்று உறுத்தியது. அன்பே உருவாகச் சிலுவையில் இரத்தம் சிந்தி உயிர் விட்ட ஏசுநாதரின் உருவம் என் மனத்தில் சுடர்விட்டது. பொன்னியை என் வாழ்வில் கொஞ்சம் நாட்கள் குறுக்கிட வைத்து அன்பு மதத்தை என்னை என்றும் உணர்ந்து நடக்கும்படி செய்து விட்ட ஆண்டவன் தீர்ப்பை எண்ணி அழுதேன்.

அன்றோடு வேட்டையாடுவதைக் கைவிட்டேன். மறைந்து போன பொன்னிக்குத் தோட்டத்திலேயே மரியாதைகளோடு அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தேன். நான் ஈன்று வளர்த்த குழந்தை மரித்தால் என்னென்ன கிரியைகள் செய்வேனோ, அத்தனையையும் பொன்னிக்குச் செய்தேன். அதில் எனக்கு ஒருவித ஆறுதல் ஏற்பட்டது.''

அரியநாயகம் பேச்சை நிறுத்தினான். உணர்ச்சிப் பெருக்கினால் அவன் குரல் கம்மிப் போயிருந்தது.

இருட்டு கவிந்து கொண்டது. இரை இரையாகப் பனிவிழத் தொடங்கிவிட்டது. விளக்குகளின் ஒளி, சூழ்ந்து கொண்ட இருளை விரட்டிக்கொண்டு பரவியது. பொன்னியின் நினைவு என் மனத்தில் தோன்றியது. கடும் புலியிடமும் அன்பைக் கண்டு அதையே தெய்வமென்று உணர்ந்த அவனைப் பார்த்த போது கீதையின் சுலோகம் நினைவுக்கு வந்தது.

'எவன் என்னை எல்லாவற்றிலும் காண்கிறானோ, எவன் எல்லாவற்றையும் என்னிடம் காண்கிறானோ, அவனுக்கு நான் எப்போதும் நிதர்சனமாக இருப்பேன்; அவன் என்றும் என் அன்புக்கு உரியவன்.'' பொன்னியிடமும் தெய்வத்தின் கருணையைக் கண்டவன் அரியநாயகம்.

''அன்புக்கு எல்லை எது? மனிதனானாலும் மிருகமானாலும், சாதுவான பிராணியானாலும் கொடிய விலங்கானாலும், அன்பு என்னும் பாசம் எல்லாவற்றுக்கும் தொடர்பு ஏற்படுத்தி விடுகிறது. பகையும், பழி வாங்கும் எண்ணமும் மனத்தைச் சூழ்ந்து வசப்படுத்த முயலும்போது, அவைகளிலிருந்து மனத்தை மீட்கும் சக்தி அதற்குத்தான் உண்டு'' என்று கூறினேன்.

அரியநாயகம் என்னையே பார்த்தான். அவன் கண்களில் ஒளி நிறைந்தது.

''நீ சொல்வதைத்தான் நானும் உணர்ந்தேன்!'' என்றான்.

''எதை?''

''ஆமாம், குரோதத்துக்கு அடிமையாவது மனித சுபாவம். அன்புக்கு அடிமையாவது தெய்வீகம்'' என்றான் அவன்.



எதற்காக அவைகளை சகிக்கவேண்டும்?

உங்கள் ஆகாரங்களில் யாராவது காலை வைத்தால் நீங்கள் சகிப்பீர்களா? பின் ஏன் நீங்கள் ஈக்களுக்கு இடம் கொடுக்கவேண்டும். அவைகள் கால்வைப்பது மாத்திரமல்ல அதற்கு மேலாகவும் தொந்தரவு கொடுக்கின்றன. மேலும் அவைகள் உங்களுடைய ஆகாரங்களில் வாந்தி எடுக்கின்றன. ஈக்கள் அழுக்குகளைப் புசித்து வளர்ந்து, வாந்திபேதி, ரத்தபேதி, சீதபேதி, டைபாய்ட், முடக்குவாதம் முதலிய ரோகங்களுக்கு காரணபூதமான கிருமிகளைக் கொண்டுவருகிறது. இக்கிருமிகள் உங்கள் ஆகாரங்களில் கலந்து கொடிய ரோகை உண்டுபண்ணுவதற்கு ஈக்கள்தான் காரணம். வியாதிகளைக் கொண்டுவந்து உங்கள் வீட்டில் துக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னால் ஈக்களை ஒழித்து விடுங்கள்



இப்பூச்சிகளை டுகோன் பெய்ட்டினால் கொல்லுங்கள்!

டுகோன் பெய்ட்

ஈக்களையும், கரப்பான் பூச்சிகளையும், மற்றுமுள்ள ஜந்துக்களையும் கொல்லுகின்ற ஒரு பிரத்தியேகச் சேர்மானப் பொருள் டுகோன் பெய்ட்டில் இருக்கிறது...டுகோன் பெய்ட் மிகச் சிக்கனமானது—பூச்சிகள் கூடுமிடங்களில் கொஞ்சம் டுகோன் பெய்ட்டை உபயோகித்தாலே போதுமானது. டுகோன் பெய்ட் அபாயமற்றது.

BAYER

TB-3



எளிதில் உபயோகிக்கக்கூடியது	[illegible]	பயனளிக்கிறது
 சரமான ஒரு துண்டு கடுதாசியில் டுகோன் பெய்ட்டைத் தூவுங்கள்.	 அக்கடுதாசியை பூச்சிகள் கூடுமிடங்களில் வையுங்கள்.	 பூச்சிகள் டுகோன் பெய்ட்டைச் சாப்பிட்டு, சில நிமிடங்களில் இறந்துபோய் விடுகின்றன.

டுகோன் பெய்ட் பரிசீலனை செய்யப்பட்ட ஒரு பேயர் தயாரிப்பு—
சிக்கா பிரைவேட் லிமிடெட்டுக்காக தயாரிக்கப்பட்டது.
விநியோகஸ்தர்கள் ஜப்ரீ மேனர்ஸ் அண்டு கம். பிரைவேட் லிட்., பம்பாய்

தென்னம்பாளையத்தில், அன்னம்மாளைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. நல்லதோ, பொல்லாததோ, அழைப்பு இருந்ததோ, இல்லையோ, சங்கதி மட்டும் தெரிந்துவிட்டால், அவள் அவ்விடத்துக்குச் சென்று, தன்னால் இயன்ற உதவியைச் செய்யாமல் இருக்க மாட்டாள். அவளுக்குச் சுமார் ஐம்பதுவயது இருக்கும். மக்களைப் பெற்றவள். இன்ப துன்பங்களை அறிந்தவள். அதனாலே, பெண் மக்கள் தங்கள் குறைகளைச் சொல்லிக் கொள்ள, அன்னம்மாளைத் தேடி வருவார்கள். ஆனால், அன்னம்மாளுக்கு மட்டும் குறை என்று எப்படிச் சொல்ல முடியும்?—உண்மையில் குறை இல்லாதவர்கள் இவ்வுலகில் உண்டா? ஆகையினாலே, எப்பொழுதாவது அன்னம்மாள், தன்னுடைய ஆறுதலுக்காகக் கோடி வீட்டுப் பார்வதிப் பாட்டியினிடம் செல்வதும் உண்டு.

ஒரு நாள், அரைப்படி நெய் கடன் வாங்குவதற்காக அன்னம்மாள் பார்வதிப் பாட்டியின் வீட்டுக்குப் போனாள்.

"என்ன, அன்னம்! நெய்க்கு அவ்வளவு செலவு? உனக்கு எருமைங்க இரண்டோ மூன்றோ கறக்க வேணுமே?"

"கறக்குதுங்க, அத்தை! ஆனால், பணியாரம் செய்யப் பத்தாதே! சொல்ல மறந்துட்டேனே, என் மகள், முத்துலட்சுமி விசாழக்கிழமை புருசன் வீட்டுக்குப் போறாங்க!"

"என்னது! பெத்து ஒரு மாதம் கூட இருக்காது போலிருக்குதே!"


"நாளைக்கு முப்பது நாள் ஆகுது அத்தை. தலைச்சன் பிள்ளைக்காரி, பச்சை உடம்பு. மூணு மாதம் போகட்டும். இன்று நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்—கேட்டாலல்லவா? எங்குமில்லாத புருசனைப் படைச்சிட்டாப்படி அவளுக்கும் அவனுக்கும் அப்படித்தான்; குரங்கு கையிலே தேங்காய் அம்பிட்டாப்படி அல்ல குதிக்கிறான்!"

பாட்டி சிரித்தாள்.

"பத்து நாளைக்கு முந்தி வந்திருந்தான், அத்தை. புருசனுக்கும் பெண்சாதிக்கும் அப்படி ஓயாமல் பேசறதுக்கு என்னதான் இருக்குமோ!"

"ஒன்னுக்கு, ஒன்னு பிரியமாய் இருந்தால், நமக்கு சந்தோசம்தானே, அன்னம்!" என்றாள் பாட்டி சிரித்தவாறு.

"நான் இல்லையின்னு சொல்றேன்? கொஞ்ச காலத்துக்குக்



காதலர்களும் காட்டாறும்...

சங்கரராம்

கட்டுப்பாடாய் இல்லாட்டி, நோவு, நோக்காடு வந்துட்டால் என்ன செய்யறதுன்னு பயப்படுகிறேன்.''

'' அவன் புதூர் பையனல்ல?-நல்லா ராசா வாட்டம் இருப்பான். முத்துக்குத் தகுந்தவன் தான்'' என்றாள் பாட்டி.

'' அது, என்ன ராசாவோ? என்ன ராணியோ? ஒன்னை விட்டு, ஒன்னும் பிரிஞ்சிருக்க மாட்டேங்குதுங்க - சந்தோசம்தான். ஒரு இரண்டு மாத காலம் பொறுத்தால் என்ன போயிடும்?'' என்று அன்னம்மாள் சொல்லும் போதும் பாட்டிக்குச் சிரிப்பு வந்தது. அன்னம்மாளும் கலந்து கொண்டாள்.

'' அதிலே, இன்னொரு தொல்லே, அத்தை! இது மழை காலமாச்சுதா? ரயிலடியிலே ஒரு காட்டாறு இருக்குது. அதைத் தாண்டிக் கொண்டுதான், புதூருக்குப் போகவேணும். அதிலே இருந்தாப் போலே இருந்து வெள்ளம் வந்திடும். வெள்ளம் வடிய அரை நாளோ, ஒரு நாளோ, அல்லது இரண்டு நாட்களோ கூட ஆகும். அது வரையிலும், மாடோ மனிசனோ, இந்தப் பக்கம் இருக்கிறவங்க இங்கே தான்; அந்தப் பக்கம் இருக்கிறவங்க அங்கே தான்.''

'' ஆறு பெரிதா?''

'' ஊம்! இங்கிருந்து மங்காத்தா வீடு வரையிலும் அகலம் இருந்தால் அதிகம்!''

''பாலம் இல்லையாக்கும்.''

'' போடவேணுமின்னு சொல்லிக்கிட்டே இருக்காங்களாம். அதுக்குள்ளே, அது வருசத்துக்கு நாலஞ்சு பேரைப் பலி வாங்கிக் கிட்டே இருக்குதாம். பெரியவங்க தெரியாமலா சொன்னாங்க, அத்தை? ஏழுமலையைத் தாண்டிப் பெண்ணைக் கொடுத்தாலும் கொடுக்கலாம், ஆனால் ஒரு ஆற்றைத் தாண்டிக் கொடுக்கக் கூடாதாம்.''



'மெய்தான், அம்மா! நான் சாயங்காலம் அந்தப் பக்கம் வந்து, என்னால் ஆனதை முத்துக்குச் சொல்லிப் பார்க்கிறேன்'' என்றாள் பார்வதிப் பாட்டி.

அன்னம்மாளின் வீட்டுக்குப் பாட்டி வந்த பொழுது, முத்துலட்சுமி தலைவாரிக் கொண்டிருந்தாள். பிரசவத்தால் ஏற்பட்ட தளர்ச்சி அவளுடைய மேனிக்கு ஒருவிதப் பளபளப்பைக் கொடுத்திருந்தது. விசாலமான நெற்றி, பூரித்த கன்னங்கள் எல்லாம் அவளுடைய வதனத்துக்கு ஒரு அலாதியான அழகைக் கொடுத்திருந்தன. அவளை விட்டு மாப்பிள்ளைப் பையன் பிரிந்திருப்பது கஷ்டம்தான் என்று பாட்டி நினைத்தாள். மற்றும் ஒரு மாதமாவது தாமதித்துப் போகும்படி பாட்டி சொன்னதை, முத்துலட்சுமி கண்டிப்பாக மறுத்து விட்டாள்.

'அவங்க அம்மா செத்துப் போய் ரொம்ப நாள் ஆச்சுது. தெரியுமல்ல? ஒரு பங்காளி வீட்டுலே சாப்பிட்டுக்கிட்டு இருக்காங்க. வேளைக்குவேண்டியதை ஆக்கிப் போடவேணுமின்னு அவங்களுக்கு என்ன வந்தது பாட்டி! போதும் போதாததுக்கு, யார் பேச்சையோ கேட்டுக்கிட்டுப் பத்துக் காணியிலே பருத்தியை விதைச்சிட்டாரு. அது சரியாய் வரவில்லையோ என்னமோ அது ஒரு தலைவலி. அவருக்கும் அங்கே கஷ்டம், எனக்கும் இங்கே வேதனை. இதிலே என்ன சுகம்?''

'சரி, உன் இஷ்டம். இதுக்கு மேலே நான் என்ன சொல்லுவேன், முத்து? உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கோ. இப்போ ராத்தும் நடவுமாய் இருக்குதே உன் அப்பா எப்படி வருவார்?'' என்றாள் பாட்டி.

'அம்மா வந்தால் போதும், பாட்டி! இங்கே அஞ்சு மணிக்கு ரயில் ஏறினால் புதூருக்கு எட்டுக்கெல்லாம் போயிடலாம். அவர் ரயிலடியிலே காத்திருப்பாரு. அம்மா மறுநாளே திரும்பிடலாம்'' என்று முத்துலட்சுமி யோசனை சொன்னாள். தான் இட்டம் போட்டுக் கொண்டபடியே, முத்துலட்சுமி தன் தாயாரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வியாழக்கிழமை யன்று ரயில் வண்டியில் ஏறி விட்டாள். அவர்களுடைய பெட்டியில், புதூரில் இறங்கவேண்டிய சில கிராமவாசிகள் இருந்தது முத்துலட்சுமிக்கு மிகவும் அனுகூலமாக இருந்தது.

அந்தக் கிராமவாசிகளில் குப்பம்மாளை அன்னம்மாளுக்கு நன்றாகத் தெரியுமாகையால் அவ்விருவரும் புதூர் வரும் வரையில் ஓயாமல் பேசிக்கொண்டு வந்தார்கள். புதூருக்கு வண்டி வரும் பொழுது சுமார் எட்டு மணி இருக்கும். அங்கே வண்டி வெகு நேரம் நிற்காதாகையால், ஏறுகிறவர்களுக்கும் இறங்குகிறவர்களுக்கும் ஆத்திரமாகத்தான் இருந்தது. வண்டி ஏறிக் கொண்டிருந்த புதூர் கிராமப் பெண்மணி ஒருத்தி முத்துலட்சுமி முதலானோர் இறங்குவதைக் கண்டதும், 'அடி பாவி!'' என்று உரக்கக் கூவினாள். பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு. ''ஏ, குப்பம்மா! ஏ, குப்பம்மா! இங்கே வாயேன்!'' என்று அழைத்தாள். குப்பம்மாள் அவளிருக்குமிடத்துக்கு விரைந்து சென்றாள். இதற்குள் கீழே விழாத படி, அந்தப் பெண்மணியை வண்டியிலிருந்தவர்கள் உள்ளே இழுத்துப் போட்டு விட்டார்கள். குப்பம்மாள் வந்ததும், ஜன்னல் வழியாகக் குப்பம்மாளின் கையைப் பிடித்துக் கொண்டு 'ஓ' என்று கதறிக் கொண்டு, அந்தப் பெண்மணி எதை எதையோ கூறினாள். ''அய்யய்யோ!'' என்று குப்பம்மாள் அடி வயிற்றில் அடித்துக் கொண்டு அலறுவதற்கும் வண்டி நகருவதற்கும் சரியாக இருந்தது. வண்டியில் அகப்

பட்டுக் கொள்ளாதபடி குப்பம்மாளை ஜனங்கள் இழுத்தனர். இவற்றையெல்லாம் கவனித்த அன்னம்மாள், ஏதோ ஆபத்தான விஷயம் என்று உணர்ந்து, கைக்குழந்தையைப் பத்திரமாக அணைத்துக் கொண்டு குப்பம்மாளிடம் ஓடினாள். கூடவே முத்துலட்சுமியும் சென்றாள். ரயில் வண்டித் தொடரும், ஆற்றில் பெரு வெள்ளம் இருந்ததால் பாதை அகலத்துக்கு இருந்த ''மொட்டை''ப் பாலத்தின்மீது ஊர்ந்தவாறு நகர்ந்து கொண்டிருந்தது.

இப்பொழுது தூற்றல் விழவே, அனைவரும் தகரக் கொட்டகைக்குள் சென்றனர். முத்துலட்மி, ஒன்றும் விளங்காமல், தவித்தாள். திடீரென்று ஏன் தன் கணவன் அருணாசலம் வரவில்லை என்று ஆச்சரியப் பட்டாள். ஒரு கணம் கோபம். அது மறுகணத்தில் காரணமற்ற பயமாக மாறியது. ''ஐயோ! என் ராசாத்தி!'' என்று ஏன் குப்பம்மாள் தன்னைக் கட்டிக் கொள்ள வேண்டும்? என்ன அருவருப்பு! ஒன்றும் புரியவில்லையே! இப்பொழுது, ஐந்தாறு ஆட்கள் கருந்துகளுடன் ரயில் பாதையைத் தாண்டிக் கொண்டு, ஆற்றங்கரைக்கு ஓடினார்கள். இவர்களுடன் வந்த மற்றொருவன் ''மாட்டு வண்டி பாலத்துத் தூணை விட்டு விலகிட்டுது'' என்று கூவிக் கொண்டே ஓடினான்.

தேம்பிக் கொண்டிருந்த அன்னம்மாள், ''சங்கதியைச் சொல்லேன், குப்பம்மா!'' என்று குப்பம்மாளின் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள். ''சொல்லத்தானே-'' என்று கூறும் போதே, அவளுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டது; விழுங்கி, மெள்ளப் பேச்சை வரவழைத்துக் கொண்டு கூறினாள்: ''வண்டியிலேஏறினாங்களே, அந்தம்மா வண்டி முன்னாலே வந்ததாம், பின்னாலே கூப்பிடு தூரத்துலே, களத்தூராரு, அது மகள், அருணாசலம் மூணு பேரும் வண்டியிலே வந்திக்கிட்டு இருந்தாங்களாம். முதல்லே வந்தவங்க வண்டி ஆத்து மேட்டுலே ஏறும்போது, அருணாசலத்து வண்டி நடு ஆத்துலே இருந்ததாம். அப்போ, அந்தப் பாழாப் போன ஆறு, 'குபீ'ரென்று பொங்கி, மாடுங்களோடு வண்டியை அடிச்சிக்கிட்டுப் போயிட்டுதாம்!''

''அவர் பிழைச்சுக்கிட்டாரா இல்லையா?—'' என்று முத்துலட்சுமி அலறினாள்.

''நான் என்னத்தைச் சொல்லுவேண்டி, தங்கம்!'' என்று குப்பம்மாள் அவளைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

''ஒரு வேளை கரை ஏறியிருக்கக் கூடாதா, குப்பம்மா!'' என்று அன்னம்மாள் கதறினாள்.

''இந்த ஆத்து வெள்ளத்துலே ஆம்பிட்டுக் கொண்டவங்க, பிழைக்கிறது கூடவா?'' என்றான் கும்பலில் ஒருவன்.

''அப்போ அவர் செத்திட்டாரின்னு சொல்லு! இந்த வருசம் அதுக்கு அவர் பலியா?- இதுக்கா என்னை வரச் சொன்னாரு? தனியாத் தவிக்கிறதுக்கா! ஏ, படுபாவி ஆறே! எங்களைப் பிரிச்சிட்டே இல்லே? உன்னாலே முடியுமா? அவரோடு சேத்து என்னையும் இரை ஆக்கிக்கோ!'' என்று முத்துலட்சுமி ஆற்றை நோக்கி ஓட ஆரம்பித்தாள். பலர் சேர்ந்தும் அவளைக் கட்டிப் பிடிக்க முடியவில்லை.

''என்னை விடுங்க, விடுங்க! ஐயோ, நான் போக வேணுமே!'' என்று அவள் திகைக்கும்படியான பலத்தோடு திமிறினாள்; கீழே விழுந்து புரண்டாள், தூணில் மண்டையைப் ''படார், படார்'' என்று மோதிக் கொண்டாள். பலர் அவளைத் தூணுக்கு அப்பால் இழுத்துக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். பிறகு, அவள் மயக்கம் போட்டு, மெய் மறந்து விழுந்து கிடந்தாள். மயக்கம் தெளியும் மருந்துக்காக ஒரு ரயில் சிப்பந்தி ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டுக்கு ஓடினான்.

''இப்போ வர வேண்டாம், வேண்டாமென்று அடித்துக் கொண்டேனே! என் பேச்சைக் கேட்டாளா! அந்தப் பிள்ளை ராசா வாட்டமா ஊரோடு சுகமாக இருக்குமே! இப்போ ஆத்தோடு போனானே!'' என்று அன்னம்மாள் தலையில் அடித்துக் கொண்டு புலம்பத் தொடங்கி விட்டாள்.

''குப்பம்மா! இவளும் செத்திடுவாள் போலிருக்குதே! பேச்சு மூச்சு இல்லையே!'' என்று அன்னம்மாள் பதைத்தாள்.

குப்பம்மாள் முத்துலட்சுமியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, மயக்கத்தைத் தெளிய வைக்கும் மருந்து வந்தது. அதன் வேகம் முத்துலட்சுமியின் நாசியில் ஏற, ஏற அவளுக்கு உணர்வு வந்தது. கண்களைத் திறந்தாள். அன்பு ததும்பிய முகங்களைக் கண்டாள். மறுகணத்தில் தனக்கு நேர்ந்த கொடுமையின் நினைவு மின்னல் போல் உதித்தது. அதே சமயத்தில், ''முத்து! முத்து!'' என்று உரக்கக் கூவிக் கொண்டு ஓர் ஆண் குரல் ரயில் பாதைப் பக்கத்திலிருந்து பாய்ந்து வந்தது. சில விநாடிகளுக்குள், அருணாசலம் வந்து முத்துலட்சுமியைத் தூக்கி நிற்க வைத்து, அன்புடன் அணைத்துக் கொண்டான்.

''நீங்களா, நீங்கதானா?'' என்று முத்துலட்சுமி பிரமித்தாள்.

''நானேதான் முத்து'...!''

''எப்படிடா தம்பி, பிழைத்து வந்தே!'' என்றாள் அன்னம்மாள் ஆனந்த பரவசத்தோடு. எல்லோரும் அவனை ஆளுக்கொரு கேள்வியாகக் கேட்டுத் திக்குமுக்காடச் செய்தார்கள். அப்பொழுது அருணாசலம் சமாதானம் கூறினான். 'நான் ஆத்துலே இறங்கவே யில்லைங்க. வண்டி பாதி வழி வந்த போது அவசரத்துலே கைக்கடியாரத்தைச் சாப்பிட்ட இடத்திலே வச்சிட்டு வந்தது நினைவுக்கு வந்தது. யாராவது மிதிச்சு ஒடிச்சிடுவாங்களேன்னு வீட்டுக்குத் திரும்பிப் போனேன். அதை எடுத்துக்கிட்டு வரதுக்குள்ளே, ஆத்துலே இந்தப் பொல்லாத வெள்ளம் வந்திட்டுது. என் கதி என்ன ஆயிட்டுதோ என்று கவலைப்பட்டு இந்தப் பொண்ணு செத்துடுமேன்னு ரயில் போனப்புறம் அந்தப் பாலத்து மேலே நடந்து வந்துவிடப் பார்த்தேன். ஆனால் தண்டவாளத்துக்கும் ஆத்துத் தண்ணிருக்கும் ஒரு அடிகூட இல்லை. நடக்கப் பயமாய் இருந்தது. அதனாலே இரண்டு தண்டவாளங்களுக்கும் நடுவிலே குப்புறப் படுத்துக்கிட்டு, உடும்பாட்டம் நகர்ந்து வந்துவிட்டேன்'' என்று அவன் அளவற்ற பெருமையுடன் சொல்லிக் கொண்டான்.

படித்துப் பாருங்கள்

'என் வாழ்வும் சிந்தனையும்'

சுயசரிதை, வாழ்க்கை வரலாறு தமிழில் அதிகமில்லாத குறையை இந்தச் சிறந்த நூல் விலக்குகிறது. உலகப் பெரியார்களில் ஒருவராகக் கருதப்படுகின்றார் ஸ்வைட்ஸர். சிந்தனையாளர், சங்கீத வல்லுநர், சமூகத்துக்கு உண்மைச் சேவை புரிந்தவர்; ஆப்பிரிக்க சுதேசி மக்களிடையே அரும் பணியாற்றிய உண்மை கிறிஸ்துவரான இவர் தம் வாழ்வில் கண்ட அநுபவங்களை இச்சுயசரிதை வாயிலாக வெளியிடுகிறார். அவை அறிவுக்கு விருந்தாக அமைந்துள்ளன. ஐரோப்பிய இலக்கியங்கள் பலவற்றைத் தெள்ளு தமிழில் மொழி பெயர்த்துப் பழக்கப்பட்ட திரு க. நா. சு. இதையும் தமிழில் ஆக்கியுள்ளார். நடுநடுவே புரிபடாத சில சொற்பிரயோகங்கள் தென்பட்டாலும், நூலின் ஓட்டம் தடைப்படவில்லை. திரு ஏ.ஆர். வாடியா இந்த நூலுக்குத் தந்துள்ள முகவுரை நல்ல விளக்கமுடையது; நூலைப் படிக்கத் தூண்டுகிறது.

மூலம்: — Out of my Life and Thought — Albert Schweitzer மொழிபெயர்த்தவர்: க.நா. சுப்பிரமணியம்; பிரசுரம்: தென்மொழி டிரஸ்டு ஆதரவில் ஓரியண்ட் லாங்மன்ஸ், 36-ஏ, மவுண்ட்ரோட் சென்னை—2; விலை: ரூ. 1-75.

சன்யாசியும் சர்வாதிகாரியும்

கோஸ்லர் அவ்வப்பொழுது லண்டன் நியூயார்க் பத்திரிகைகளுக்கு எழுதிய 'அறிவு வர்க்கத்தினரே' கவைக்கக் கூடிய பலதரப் பட்ட கட்டுரைகளின் தொகுதியாகும் இந்தப் புத்தகம். உலகத்தில் அடிபடும் பல பிரச்னைகள், விஞ்ஞான நுட்பங்கள், நாகரிகப் புரட்டுக்கள், புள்ளி விவரங்களுடன் விளக்கப்படும் சோவியத் மூடுமந்திரங்கள்; கரு வளர்ச்சி, மனித இயல்பு; இன்னும் எத்தனையோ விஷயங்களைப் பற்றிய கட்டுரைகள். புஷ்டி தரும் பண்டங்கள் எப்போதுமே ஜீரணமாவது கடினம். அதுவும் அறிவுக்கு ஊட்டம் தரும் இத்தகைய உபதேசங்கள் சட்டென்று மூளைக்கு ஒத்துக் கொள்ளாது. இந்நூலின் தமிழாக்கத்தைப் படித்துவிட்டு, இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள ஆங்கில மூல நூலையே நாடவேண்டியிருந்தது. ஸ்ரீ ச.து.சு. யோகியாரின் தமிழுக்கு என்ன? அப்பு அழுக்கு அற்றது! விளக்கமான கலைச் சொற்கள், விஞ்ஞான பரிபாஷை தமிழில் இராத குறை இதிலே வெட்ட வெளிச்சமாகிறது. கடின பதங்களுக்கு ஒரு விளக்க உரையை இணைத்திருந்தால், நன்றாக இருந்திருக்கும்.

இந்நூலைப் பற்றி, இந்நூலில் வரும் ஒரு வாக்கியத்தை வைத்தே 'சுருக்கமாகக் கூறி விடலாம்: 'இதை அப்படியே அப்பட்டமாக மொழிபெயர்ப்பது மிகக் கஷ்டம். காரணம், இது வாதத்துக்கு ஏற்ப அமைக்கப் பட்ட வாக்கியமல்ல. சொந்தமான இலக்கணத்தோடு ஞானியின் உள்ளுறை உரையைப் போல் அமைந்துள்ளது. ஒருவாறு அதனுடன் பொருந்தியுள்ளதாகச் சொல்லத் தக்க மொழிபெயர்ப்பு இதுவே.'

மூலம்: (Arthur Koestler's The Yogi and the Commissar) மொழி பெயர்ப்பு: பால பாரதி ச. து. சு. யோகி; பேர்ல் பப்ளி-கேஷன் பிரைவேட், பம்பாய்-1; விலை: 50 புதுக் காசு.

இரும்புப் பெட்டி (நவீனம்)

ஓர் இரும்புப் பெட்டியில் இருக்கும் காதற் கடிதங்கள். வாழ்வு முழுவதும் பிரம்மசரியம் பாலித்தவருடைய சொத்து அது. அவர் இறந்த பின்னர், சொத்துக்கு வாரிசுதாரரான அவருடைய நண்பனுக்கு அந்தக் காதல் கடிதங்களை எழுதிய மாது அறிமுகமாகிறாள். கடைசியில் இறந்து போன அந்த நண்பனின் காதலியை மணக்கிறான். இரண்டு மூன்று மணி நேரம் பொழுதைப் போக்குவதற்கு விறுவிறுப்பாகச் செல்லும் இந்த நவீனம் பயன்படும். அன்பர் ஸ்ரீநிவாசனின் தமிழ் நடை நன்கு அமைந்துள்ளது.

மூலம்: Howard Swigget's The Strong Box மொழிபெயர்ப்பு: வி. ஸ்ரீநிவாஸன்; பேர்ல் பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட், பம்பாய்-1; விலை: ந. பை. 0-75.

நாடகச் சிலம்பு

ஐம் பெருங் காப்பியங்களில் சிலப்பதிகாரத்துக்கு மட்டும் ஒரு தனி அழகு உண்டு. அது நாடக அழகு. காட்சிகளில் நாடக முறைப்படி கதாபாத்திரங்கள் தாமே பேசும் கவிச்சுவை சிலப்பதிகாரத்தில் உண்டு. அதனால்தான் மற்றவற்றிலிருந்து தனியே பிரித்து நாடகக் காப்பியமென்று சிறப்பித்து வழங்குகிறார்கள் அதை. வரிப்பாடல்களும் நடுநடுவே வரும் கூத்தமைதிகளும் அது ஒரு நாடக இலக்கியம் என்பதை நிறுவுதற்கு மேலும் துணை புரிகின்றன.

சிலப்பதிகாரத்தைப் பற்றிய திறனாய்வு நூல்களும், விரிவுரை நூல்களும், உரைநடையில் ஏராளமாக வெளிவந்துள்ளன. ஆனால் நாடகக் காப்பியமாகிய அதனை நாடகமாகவே அளிக்கும் உரைநடை நூல்களும் இலக்கியத் தரத்துடன் மிகுதியாக வரவில்லை.

திருச்சி-தேசியக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. கு. திருமேனி அவர்கள் எழுதியிருக்கும் நாடகச் சிலம்பு என்னும் நூல் சிலப்பதிகாரத்தை நாடகமாகவே உரைநடைப் படுத்திக் கொடுக்கிறது. நாடகத்தின் இடையிடையே அந்தந்தக் காட்சிகளுக்கு ஏற்ப, மூலத்தின் பாடல்களையும் பாத்திரங்கள் பாட ஏற்ற விதத்தில் அமைத்திருக்கிறார் ஆசிரியர்.

ஆசிரியர்: கு. திருமேனி பி. ஓ. எல்.; கிடைக்குமிடம்: 8, கீழ் அரண்சாலை, தெப்பக் குளம், திருச்சிராப்பள்ளி-2. விலை. ரூ. 3.25

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras 10
Managing Editor: T. Sadasivam

பளிங்குபோன்ற புதிய பளபளப்பு!

இதுவே விம் தரும் பரிசுத்தம்!





விம் பவுடர் போட்டு விறுவிறுவென்று தேய்த்துப் பாருங்கள்; ஒளிப் பிழம்பாக எல்லாமே பளிச்சிடும்: பீங்கான்—கண்ணாடிச் சாமான்கள், சமையல் பாத்திரங்கள், பேஸின்கள், வீட்டுத் தரை எல்லாமே பளிச்சிடும். பாடுபடாமல், பிரயாசையில்லாமல், கீறலே விழாத பரிசுத்தம் செய்ய உங்களுக்கு உதவுவது விம். மிகமிகச் சுலபமான வேலை! ஒரு ஈரத் துணிமீது விம் பவுடரைத் தூவிக்கொண்டு இலேசாகத் தேய்த்துவிட்டுப் பாருங்கள்—அழுக்கும், களிம்பும் மாயமாக மறைந்துவிடுவதைக் காண்பீர்கள். மங்காத பெருமை தரும் உங்கள் வீடு மங்களவாசமாக விளங்க விம் உபயோகியுங்கள்!

விம் பட்ட இடமெல்லாம் ஒளிப் பிழம்பே!

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

V. 100-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

